திருவாளர் P.P.சுப்ரமண்யசாஸ்திரிகள் பேராசிரியர் P.P.S.சாஸ்திரி (1895 - 1945 A.D.)என்றே பெரும்பாலும் அழைக்கப்படுகின்றார். இவர் 27.8.1895 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி ஆற்றங்கரையிலுள்ள 'பழமடை' என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் சம்ஸ்க்ருதத்தில் M.A., பட்டப்படிப்பினை சென்னை, பிரசிடென்சி கல்லூரியில் மேற்கொண்டார். பேராசிரியர் ரங்காச்சாரியார் மற்றும் மகாமகோபாத்யாயர் பேராசிரியர் S.குப்புசுவாமி சாஸ்திரிகள் ஆகியோர்களிடம் பயிற்சிபெற்ற இவர் சம்ஸ்க்ருதத்தில் உயர்கல்வி பயிலுவதன் பொருட்டு மத்திய அரசின் வழியாக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டார். 1920-21 ஆம் ஆண்டில் தம் படிப்பினை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பிய திரு. P.P.S.சாஸ்திரிகள் மங்களூர் அரசு கல்லூரியில் முதல் இந்திய முதல்வராகப் பணியேற்றார். விடுதலைப்போராட்ட தியாகி திருமதி சரோஜினி நாயுடு அவர்கள் அந்த கல்லூரிக்கு விஜயம் செய்து பேசுகையில் இந்தியர் ஒருவர் அப்பணியில் நியமிக்கப்பட்டது குறித்துப் புகழ்ந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. பிறகு திரு. P.P.S.சாஸ்திரிகள் சம்ஸ்க்ருதப்பள்ளிகளின் கண்காணிப்பாளராகவும், மாவட்டக்கல்விஅலுவலர்

ஆகவும் மாற்றப்பட்டார். இவர் 1929 ஆம் ஆண்டில் சென்னை பிரசிடென்ஸி கல்லூரியில் கூடுதல் பேராசிரியராகவும், மகாமகோபாத்யாயர் பேராசிரியர் S.குப்புசுவாமி சாஸ்திரிகள் ஓய்வுபெற்றபின் பேராசிரியர் ஆகவும் பணியாற்றினார். இவரது புலமையைப் பகிர்ந்து கொள்ள Mr.H.C. பாப்ஓர்த், பேராசிரியர் K. சுவாமிநாதன், டாக்டர் B.B. டே போன்றோர் இவரை அணுகலாயினர். இவர் தன் கண்காணிப்பிலுள்ள சமஸ்கிருதப் பள்ளிகளில் ஸம்ஸ்க்ருதக் கல்வியினை மேம்படுத்த ஆர்வம் கொண்டார். இவர் அரசினர்க்கீழ்த்திசைச் சுவடி நூலகத்தின் காப்பாட்சியராக இருந்த காலத்தில் அதன் வளர்ச்சிக்குப் பல படிகளில் முயற்சி எடுத்துள்ளார். அதைப்போலவே தஞ்சாவூர் அரண்மனை நூலகத்தை (சரசுவதி மகால் நூலகத்தை) மேம்படுத்தவும் முயற்சி மேற்கொண்டுள்ளார். கீழ்த்திசைச் சுவடிநூலகத்திலிருந்து சில முக்கியச்சுவடிகளையும் வெளிக்கொணர்ந் திருக்கிறார். பல சம்ஸ்க்ருத நூல்களின் மொழிபெயர்ப்புப் பணியினையும் செய்துள்ளார்.

இவருடைய குறிப்பிடத்தக்க பணி என்றால் மகாபாரதம் 40,000 சுலோகங்களை தென்னிந்தியாவில் கிடைத்த பாடங்களுடன் முதன்முதலாக ஒப்பாய்வு செய்து 36 தொகுதிகள் கொண்ட ஆய்வுப்பதிப்பினை

இவர் வெளியிட்டுள்ளார். அனைத்திந்திய கீழ்த்திசைமாநாடு மற்றும் இந்திய தத்துவ மகாசபைகளின் பல அமர்வுகளில் கலந்துகொண்ட பெருமைபெற்றவர். இவரது பணிகளையும் ஸ்வதந்திரபடைப்புகள் மற்றும் மொழிபெயர்ப்புப் படைப்புக்களுக்குமாக சிருங்கேரி ஆசார்யபீடம் வித்யாசாகரம், வித்யாவாசஸ்பதி, பாரதகலாநிதி போன்ற விருதுகளை வழங்கி சிறப்பித்துள்ளது. இவர் சென்னை பிரசிடென்ஸி கல்லூரியில் பேராசிரியராக பணியிலிருந்தபோது பாஷாசாஸ்திரத்தின் மீது பல சொற்பொழிவுகளை ஆற்றி யிருக்கின்றார். P.S. டாக்டர் லோகநாதன், பேராசிரியர் K.A நீலகண்ட சாஸ்திரி போன்றோர் இவரது சமகாலத்தவரும் இவருடன் நெருங்கிப்பழகியவர்களும் ஆவார்கள். பேராசிரியர் P.P.S.சாஸ்திரி அவர்களின் காலத்திற்குப்பின் இவரது சேகரிப்பான 5000 சம்ஸ்க்ருத புத்தகங்கள், 10 மரபீரோக்களில் வைத்துக்காப்பாற்றப்பட்ட ஓலைச் சுவடிகள் ஆகிய அனைத்தையும் திருவனந்தபுரத்திலுள்ள அரசர் சம்ஸ்க்ருத நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மேலும் பேராசிரியர் P.P.S.சாஸ்திரிகள் 17ம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்த அப்பய தீக்ஷிதரின் பதினோராவது தலைமுறையில் வந்தவர். இவர் தம்முடைய பழமடை கிராமத்தில் நீலகண்டதீக்ஷிதரின் சமாதியை புதுப்பித்து ஆண்டுதோறும் பூசை

வழிபாட்டினை மேற்கொண்டார். இவரது பெருமுயற்சியால் இவ்வூர் நீலகண்டசமுத்ரம் என்ற பெயரினையும் பெற்றுத் திகழ்கிறது.

இச்செய்திகள் யாவும் வால்மீகி இராமாயணத்தின் ஆங்கிலமொழிபெயர்ப்பின் மறுபதிப்பு நூலில் ஆங்கில முன்னுரையில் காணக் கிடைக்கின்றன. இவரது உருவப்படங்கள் சென்னைப் பிரசிடென்ஸி கல்லூரி யிலும், மகாமகோபாத்யாயர் திரு. S.குப்புசாமி சாஸ்திரிகள் ஆய்வு நிறுவனத்திலும் இடம் பெற்றுள்ளன. அவை முயற்சி செய்து சேகரிக்கப்பட்டு இந்நூலில் இணைக்கப் பட்டுள்ளன. மேலும் பேராசிரியர் P.P.S.சுப்ரமண்ய சாஸ்திரிகள் பற்றிய குறிப்பு சென்னை பிரசிடென்ஸி கல்லூரியிலிருந்து கிடைத்தவை கீழ்க்கண்டவாறு அமைகின்றன. இவர் வைதிக சாஹித்ய சரிதம் எனும் நூல் ஒன்றை படைத்துள்ளார். சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், தஞ்சாவூர்அரண்மனை நூலகம் (சரசுவதி மகால் நூலகம்) ஆகியவற்றின் வழிகாட்டிகளுக்கு இணை மொழிப்பெயர்ப்பாளராகவும், சென்னை மற்றும் தஞ்சாவூர் சுவடிவிவரப் பட்டியல்களுக்கும், குறிப்பாகத் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக சம்ஸ்க்ருத விவரப் பட்டியல்கள் 1 - 19 தொகுதிகள், மற்றும் தெலுங்கு மொழிப் பிரிவின் சுவடிவிவரப்பட்டியல் - தொகுதி 1

ஆகியவற்றின் பதிப்பாசிரியராகவும், குருராமகவியின் ரத்னபிரசாதனம் போன்ற நூல்களின் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்திருக்கின்றார். இத்தகைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் சொந்தக்காரரான பேராசிரியர் P.P.S. சுப்ரமண்ய சாஸ்திரிகள் தமது 50ம் வயதில் நீரிழிவுநோய் காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டார். அதன் விளைவாக 1945 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17ம் நாள் இயற்கை எய்தினார்.

*****

6. சம்ஸ்க்ருத இலக்கிய வரலாறு- 1500 முதல் 1850 வரை

சம்ஸ்க்ருத இலக்கிய வரலாறு (1200 A.D.) சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுடன் நின்றுவிட்டது. அதற்கு பின்பும் பல நூல்கள் ஆசிரியர் குறிப்புகள் போன்றவை கிடைக்கின்றன. இருப்பினும் வேத இலக்கியம், புராணஇலக்கியம், காவியநாடகாதி இலக்கியம் ஆகியவற்றை உள்ளடக்கிய மேக்டோனெல்லின் இலக்கிய வரலாறு 1000 A.D. (ஆயிரம் ஆண்டு) வரையிலான செய்திகளைத் தருகின்றது. டாக்டர் கெய்த் அவர்களின் சம்ஸ்க்ருத இலக்கிய வரலாறு காவிய நாடகாதி இலக்கியங்கள், ஆசிரியர் வரலாறு போன்ற வற்றைச் சிறப்பான வரைமுறையுடன் (ஆயிரத்து இருநூறு ஆண்டு)முடிய எடுத்துரைக்கின்றது. அதன்பின்பும் இங்கும் அங்குமாக கிடைக்கின்ற சிலபல செய்திகளைக்கொண்டு பார்க்கின்ற போது தனிப்பட்ட முறையில் சில ஆசிரியர் களும், நூல்களும் கி.பி. 1200 முதல் 1500 வரை கிடைக்கின்றன. இந்தியாவின் மற்றபிற இடங்களைக் காட்டிலும் இங்கே இலக்கியவளர்ச்சி மேன்மை பெற்றிருந்தது. நற்புலமைபெற்ற அறிஞர்கள் சபை களிலும், அரசவைகளிலும் இடம்பெற்றிருந்தனர்.

தஞ்சை, மதுரை, வேலூர், மைசூர் ஆகிய நகரங்களில் ஆட்சிசெய்த விஜயநகரமன்னர்களும் இவ்விலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் துணைநின்றனர். எடுத்துக்காட்டாக 1509 முதல் 1529 வரை விஜயநகரத்தை ஆண்ட ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் மிகச்சிறந்த அறிஞர். அவரது அவையில் பல அறிஞர்கள் இடம்பெற்றிருந்தனர். நாள்தோறும் அவர் அறிஞர்களைச்சந்திப்பதிலும் சொற்பொழிவுகளைக் கேட்பதிலும் மிகுந்தநாட்டங் கொண்டு விளங்கினார்.கிருஷ்ணதேவராயர் மறைவுக்குப் பின் தஞ்சாவூரில் தஞ்சைநாயக்கர் ஆட்சி தொடங்கு கின்றது.

தஞ்சை மன்னர்கள் நாயக்கர் மற்றும் மராட்டியர்கள் ஆட்சிக்காலத்தில் குறிப்பிட்ட 350 ஆண்டுகளில் இசைவாணர்கள், இலக்கிய அறிஞர்கள், பல்கலை வித்தகர்கள் பெரிதும் போற்றப்பட்டனர். இதன் பயனாக 125 அறிஞர்கள் சிறந்த முறையிலே ஏறத்தாழ 500க்கும் மேற்பட்ட இலக்கியப்படைப்புகளை இயற்றியுள்ளனர். இத்தகைய இலக்கியங்களையும், இலக்கியப்படைப்பாளர் களையும் வளர்ச்சியடையச் செய்தபெருமை தஞ்சையில் ஆட்சிசெலுத்திய நாயக்கமன்னர்களையும், மராத்திய ஆட்சியாளர்களையுமே சாரும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு உலகப்புகழ்பெற்ற இந்நூலகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி, வேத இலக்கியம் தொடங்கி தோத்திர

இலக்கியம் ஈறாக அமைந்த சுவடிகளின் விவரப்பட்டியல் குறிப்பு ஆகியவற்றை இந்நூலில் காணும் பிற்சேர்க்கைகளில் நாம் காணலாம். சம்ஸ்க்ருத சுவடி விவரப்பட்டியல் தொகுதி 1-19 வரை பேராசிரியர் P.P.S.சாஸ்திரி அவர்களால் தமிழக அரசின் நிதியுதவியோடு முடிக்கப் பெற்று தொகுதி எண் 19ல் History of Sanskrit Literature 1500-1850 (சம்ஸ்க்ருத இலக்கிய வரலாறு 1500 முதல் 1850 வரை) என்கிற சிறப்பான கட்டுரை வெளியிடப் பட்டுள்ளது. அதுவே தற்போது தனி நூலாக வெளிவருகின்றது. இந்த நூலிற்காக எடுத்துக்கொள்ளப் பட்ட ஆண்டுகள் 1500 முதல் 1850 வரையுள்ள இந்த காலங்களில் கி.பி. 1535 கி.பி. 1673 வரை நாயக்க மன்னர்கள் தஞ்சையை ஆண்டுள்ளனர். அதன் பிறகு மராட்டியர்கள் கி.பி.1676-1855 வரை ஆட்சி புரிந்துள்ளனர். இவ்வாறு தஞ்சையை ஆண்டவர்களுள் நாயக்கமன்னர்கள் நால்வர் மற்றும் பத்து மராத்திய மன்னர்கள் ஆகியோரின் பெயர்ப்பட்டியலும், அவர்கள் ஆட்சிசெய்தகாலங்களும் ஆங்கிலப்பகுதியில் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் இந்த இலக்கியவரலாறு தஞ்சாவூர் அரண்மனை நூலகமான சசுவதி மகால் நூலகத்தின் சுவடிகளை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டிருக்

கிறது. இதனை ஆண்டு வாரியாக ஒப்பாய்வு செய்வதற்கு உதவியாக 50 ஆண்டுகளுக்கு ஒரு பிரிவு என்ற வகைகயில் மொத்தம் 7 வகை உட்பரிவுகளைக் கொண்ட தாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளபடியால் குறிப்பிட்ட காலவரை யறைக்குள் வருகிற அறிஞர்களின் இலக்கியப் படைப்புகள், வாழ்க்கை வரலாறு ஆகியவற்றை மிக விரைவாய் நாம் அறிந்து கொள்ளமுடியும். இறுதியிலும் இந்த எழுவகை உட்பிரிவின் உள்ளே கொடுக்கப்பட்ட வரிசைஎண்களுடன் அறிஞர்கள் அகரவரிசைப் பெயர்ப் பட்டியல் அளிக்கப்பட்டுள்ளது. வரிசை எண்களைக் கொண்டு அறிஞர்களின் வரலாற்றினை ஆங்கிலத்திலும், அகர வரிசையின் அமைப்பில் ஆங்கிலம் தரும் செய்தியினை தமிழ் வழியிலும் நம்மால் பார்க்க முடியும். இனி நாம் அகரவரிசையின் துணையோடு அறிஞர்களின் படைப்புகளையும் வரலாறு களையும் சிறிது காண்போம்.

அக்னிஹோத்ரீ -21

இவரது தந்தை துவாதசாஹயாஜி என்பது. அக்னிஹோத்ரி என்பவர் காளஹஸ்தி யஜ்வனின் சீடர். இவருக்கு பல ஆசிரியர்களுண்டு. இவரது நூல்கள் 1) அத்வைதகோசபூரணி (Nos. 7505-7506). 2) தத்வ சிந்தாமண்யா லோகஸ்பூர்த்தி (Nos. 6795-6797).

அதிராத்ரயஜ்வா - 48

இவர் ஆச்சான் தீக்ஷிதரின் பெயரர். இவர் நாராயண தீக்ஷிதரின் 5ம் புதல்வர். நீலகண்ட தீக்ஷிதருக்கு இவர் இளைய சகோதரர் ஆவார். இவரது நூல்கள்- குசகுமுத்வயம் (No. 4346) த்ரிபுரவிஜயசம்பூ (No. 4036)

“சித்ர மீமாம்ஸா தோஷதிக்கார: என்ற நூலின் ஆசிரியரும் ஆவார். இது அப்பய்ய தீக்ஷிதரின் சித்ர மீமாம்ஸைக்கு கண்டனமான ஜகன்னாதரின் (கி.பி.1620-1660) சித்ரமீமாம்ஸை கண்டனநூலிற்கு மறுகண்டன நூலாகும். இவர் ‘பிரதி ரகுவம்சாதிகர்த்தா’ எனவும் அறியப்படுகிறார்.

அனந்தநாராயணன்- 57

இவர் சிதம்பரகவியின் புதல்வர். இவரது நூல் கதாத்ரயீ வியாக்யை (No. 3752). இந்நூல் ஒரே சமயத்தில் ராமாயண பாரத பாகவதக் கதைகளை ஒருங்கே கூறுவதாக அமைந்துள்ளது. பார்ப்பதற்கு இது காடின்யமாகத் தோன்றினாலும் பயன்படுத்து வோருக்கு பானகம், வாழைப்பழம் போல் இனிமையைத் தருகின்றது. யாவனொருவன் இந்த பத்யங்களை கண்டபாடம் (மனனம்) செய்தானாகில் அவன் வித்யாநிதியைப் (கல்விப்பெருந்தனத்தைப்) பெறுவான் எனக்கூறுகிறார் கதாத்ரயீ உரைகாரர். தஞ்சபுரீசர் உடனுறை ஆனந்தவல்லி

அம்பிகையின் மீது பாடிய ஆனந்தவல்லி ஸ்தோத்ரத்தின் ஆசிரியரும் அனந்தநாராயணரே ஆவார்.

அனந்தநாராயணன்- 103

இவர் ம்ருத்யுஞ்ஜயரின் புதல்வர். தாய் பிருஹதாம்பா. இவரது பாட்டனார் கிருஷ்ண தீக்ஷிதர். இவர் அனந்தயஜ்வனின் குடும்பத்தில் வருபவர். இவர் பல இடங்களுக்குச்சென்று இறுதியாக தஞ்சை வருகிறார். நாலு கவியாகிய இரத்தினத்துடன் இணைத்து இவரை சரபோஜி பஞ்சரத்னகவி என போற்றுகிறார். இவரது நூல்கள் 1) கீதசங்கரம் (No. 10951) கீதவடிவில் பலவித ராகங்களில் சங்கரனைப் புகழ்ந்து பாடல்கள் இடம் பெற்றுள்ளதால் இந்நூலிற்கு கீதசங்கரம் எனப்பெயர் வந்தது. இந்நூல் தஞ்சை சரசுவதி மகால் வெளியீடாக 2006ஆம்ஆண்டு வெளிவந்துள்ளது. விலை.ரூ.35.00 ஆகும். 2)சரபோஜி சரிதம் (No.3695).

அனுபவானந்தர் - 52

இவர் கிருஷ்ணானந்தரின் சீடர் (49). இவரது நூல்கள் 1) அத்வைதரத்னகோசவியாக்யானம் (No.7502), 2) பிரபாமண்டலம் (No.6930).

அப்பய்யதீக்ஷிதர் - 9

இவரது தந்தை ரங்கராஜாத்வரி. அப்பய்யதீக்ஷிதர் பல மன்னர்களின் ஆஸ்தானகவியாக விளங்கியவர். இவரது

நூல்கள் மிகுதியாக நம் நூலகத்தை அணி செய்கின்றன. அவற்றுள் சிறந்தவை-

1. ஹரிவம்சஸாரசரித வியாக்யானம் No. 3742.
2. குவலயானந்தம் (அலங்காரசாஸ்திரம்) No. 5180.
3. சித்ரமீமாம்சை (அலங்காரசாஸ்திரம்) No. 5223.
4. மயூகாவளி No. 6920.
5. விதிரஸாயனம் No. 6997.
6. சாரீரகநியாய ரக்ஷாமணி No. 7115.
7. மத்வபத தந்த்ரமுகமர்த்தனம் No.7469
8. உபக்ரமபராக்ரமம் No. 6981.
9. சதுர்மதசார சங்கிரஹம் No. 7628
10. சித்ரபடம் No. 6975.
11. சிவார்க்க மணிதீபிகை No. 8177.
12. லக்ஷணரத்னாவளி No. 5295.

இவரது நூல்கள் பெயர்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள சிவாத்வைதநிர்ணய முகவுரையில் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இவர் ஒரு மாமேதை. இவர் வாழ்ந்த இடம் காஞ்சீபுரத்தருகே அடையபலம். இவரது காலம்

1520-1593. இவர் *108* நூல்கள் படைத்தார். இவரது நூல்களுள் வாதநக்ஷத்ரமாலாவும் ஒன்று. இவர் ஸர்வதந்த்ர ஸ்வதந்திரர் (அனைத்து கலைகளிலும் வல்லவர் என்பது பொருள்) இவரை மீமாம்ஸா மூர்த்தன்யர் என்பர் கண்டதேவர். (மூர்தன்யர்- தலைசிறந்தவர்) சாஸ்த்ரதீபிகை உரை, பாமதிக்கு பரிமளம் எனும் உரை போன்றவற்றின் ஆசிரியருமாவார். வேதாந்ததேசிகரின் யாதவாப்யுதயத்-திற்கு முதன் முதலில் உரை எழுதியவர். இந்த உரை சின்னதிம்மராஜனின் தூண்டுதலால் எழுதப்பட்டது. இவர் தென்னாட்டில் கீர்த்தி பெற்று விளங்கியவர்.

அப்பாகவி - 56 (அல்லது) பெரி அப்பா சாஸ்திரி

இவர் தஞ்சாவூர் சகஜிமகாராஜாவின் வாழ்க்கை வரலாற்றினை நாடகமாக **ச்ருங்கார மஞ்சரீ ஷாகஜீயம்** என்ற பெயரில் இயற்றியுள்ளார். இவர் பெரி அப்பா சாஸ்திரி என்றும் அழைக்கப்படுகிறார். இவரது தந்தை அண்ணா சாஸ்திரி, தாத்தா கிருஷ்ணர், கொள்ளு தாத்தா ஈச்வரர். இவரது பெரியப்பா வினதேயர் என்பவர் ருசிதத்தனின் தத்வசிந்தாமணியின் உரைநூலான பிரகாசத் திற்கு உரை ஒன்றை எழுதியுள்ளார். டிண்டிம சார்வ பௌமர் ஆன அண்ணா சாஸ்திரி காமதேவன் (என்ற பண்டிதரை) வாதத்தில் வென்று வெங்கடபதியின் அவையில் தங்கப்பல்லக்கினையும் ஏரகரம் என்ற கிராமத்-

தையும் பரிசிலாகப்பெற்றார். அண்ணா சாஸ்திரிக்கு 3 மகன்கள். அவர்களுள் மூத்தவர் விச்வநாதார்ய தீக்ஷிதர். இவர் கிருஷ்ணானந்த யதீந்த்ரரின் (49) (17th centry) சித்தாந்த சிந்தாஞ்சனம் போன்ற கிரந்தங்களுக்கு சிறப்பான விளக்கம் கொடுக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். அண்ணா சாஸ்திரியின் 2வது மகன் வின தேயசூரி. ச்ருங்கார மஞ்சரீ ஷாகஜீயத்தின் ஆசிரியர் அண்ணா சாஸ்திரியின் மூன்றாம் புதல்வர். மன்னர் சகஜியின் ப்ரீதிக்கு பாத்திரமானவர். இவரது பிரதிபையைக் கண்டு மெச்சி இவரது ஆசிரியர் ஸ்ரீ கிருஷ்ணானந்த யதீந்த்ரர் 'இவருக்கு கவிதார்கிக ஸார்வபௌமர்' என பட்டம் சூட்டினார். இக்கருத்தினை கங்காதரமகி, ராமபத்ரமகி, பூமிநாதர், ஸ்ரீவேங்கடேசகவி, வேதகவி ஆகியோரும் போற்றினர். சீடர்களான ஸ்ரீநிவாஸகவி, ராஜ கோபாலகவி, நாராயண சாஸ்திரி மற்றும் வேங்கட கிருஷ்ணதீக்ஷிதரும் இவரது கற்பிக்கும் திறன் பற்றி குறிப்பிட்டுள்ளனர். வேதகவி இவரை 'கவிராக்ஷஸர்' எனப்போற்றுகிறார். அப்பாகவி இயற்றிய ச்ருங்காரமஞ்சரீ ஷாகஜீயம் எனும் நாடகம் தஞ்சை மாவட்டம் திருவையாறு பஞ்சநதீச்வரரின் (சைத்ரோத்ஸவத்தில்) சித்திரை மாதப் பெருவிழாவில் நடிக்கப்பெற்றது.

அப்பாத்வரின்-75

இவர் சிதம்பர கவியின் புதல்வர். இவரது நூல்கள்

1) மதனபூஷண பாணம் (No.4585). *2)* கௌரீ மாயூர சம்பூ (No.4035). *3)* ஆசார நவநீதம் (No.18048)(or)ஆசார ஸார நவநீதம். இவர் தஞ்சை ஷாஜியின் அவைப் புதல்வர். இவர் மீதான அற்புதமான கட்டுரை Journal of Oriental Research Vol.IIIல் உள்ளது.

[**மதனபூஷணம்** எனும் ஓரங்க நாடகமான பாணம் மயிலாடுதுறை கௌரி மாயூர க்ஷேத்திரத்தில் வசந்தோத்ஸவத்தில் நடிக்கப்பட்டது. அந்த சமயம் அறிஞர்கள் மற்றும் பொதுமக்கள்குழாம் புடைசூழ இந்நாடகத்தை அரங்கறச் செய்தார் கீழையூர் அக்ரஹாரவாசியான அப்பாத்வரி அவர்கள். முதல்நாள் இரவு வசந்தமனுபவித்த மதன பூஷணன் மறுநாள் முழுதும் அங்கு நடைமுறை செய்திகளை கண்ணுற்று புகழ்வதும் இகழ்வதுமாய் விவரிக்கின்றான். *(419/2000.* Rs.30. Etd. by Smt.S. Rajalakshmi, T.M.S.S.M.Library, Thanjavur) **கௌரீமாயூரமாகாத்மியசம்பூ** எனும் நூலில் அபயாம்பிகை உடனுறை மயூரநாதர் அருள் புரியும் மகிமை 5 தரங்கங்களில் கூறப்படுகிறது. முன்னொருகால் இதற்கு பிரம்மபுரம் என்ற பெயருண்டு. ஆங்கே சிவபெருமான் பிரம்ம தேவரால் பூசிக்கப்பட்டு லோகசிருஷ்டி சக்தியைப் பெற்றார். ஆதலால் கௌரியை, 'நீ மயில் ரூபமாக ரூபமெடுத்து என்னை பூசித்து வணங்குவாயாக. அப்போது அந்த ஊர் உனது பெயரைப்பெறும்'

எனக் கூறினார். நதி, விஷ்ணு,, கௌரி, சிவபெருமான் ஆகியோர் ஆங்கே வந்துறைந்ததின் காரணமாக கௌரீ மாயூரம் எனப்பெயர்ப்பெற்றது.(*362/1995*.Rs.30.Edt.by Smt. S.Raja lakshmi, T.M.S.S.M.Library,Thanjavur).

சகஜி மன்னன் **1696** ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம், சுவாமிமலையில் தாத்ருவருடம் ஒரு மகாயக்ஞத்தை நடத்தினான். அதற்கு உதவியாய் அந்த வேள்வியில் கலந்துகொண்ட அப்பாத்வரியை மராட்டிய மன்னன் மூன்று மாதகால மகாபாரத பாராயணத்தில் நியமித்தான். பாராயணம் முடிந்து மாயூரம் திரும்பும் வேளையில் அவருக்கு தர்மசாஸ்திர நூல் எழுதக் கட்டளை யிடப்பட்டது. அதனால் **15,000** கிரந்தங்கள் கொண்ட ஆசாரநவநீதம் (அ) ஆசாரஸார நவநீதம் அப்பாத்வரியால் இயற்றப்பட்டது. விளக்கம் தஞ்சை சரசுவதி மகால் பதிப் புகளான கௌரீ மாயூர மாகாத்மிய சம்பூ, மதனபூஷண பாணம் ஆகியவற்றில் காணலாம்.]

அப்பாதீக்ஷிதர் - 45

இவர் பிரசித்திபெற்ற நீலகண்ட தீக்ஷிதரின் சகோதரர். ஆச்சான் தீக்ஷிதரின் பெயரருமாவார். இவரது நூல் *1)* தந்த்ர சித்தாந்ததீபிகை (No.6853). *2)* துருஹ சிக்ஷை. இவரது ஸ்வீகாரத்தந்தை அப்பயர் என்பவர்.

அப்பையரின் நூல் அலங்காரதிலகம். மேலும் அப்பா தீக்ஷிதருக்கு சின்ன அப்பயர் என்ற பெயருண்டு.

அய்யாத்வரின் - 51

இவரும் கிருஷ்ணாநந்தரின்(49) சீடர். இவரது நூல் அனுஷ்டான பத்ததி வியாக்யானம்.

அருணகிரிநாதர் - 6

இவரது தந்தை ராஜநாதர். தாத்தா கவிபிரபு என்னும் இவர் சாமவேத சாகானுயாயி ஆவார். இவர் ஒரு கவியும், பல்லாளராயன் அரசில் உள்ள கவிகளுள் ஒருவரும் அடிப் படையில் ராகுனனுக்கு அச்சம் தருபவரும் ஆவார். இவர் சித்தூர் மாவட்டம் பரோத்ராக்ரஹாரத்தில் வசித்து வந்தார். இவர் டிண்டிம கவி சார்வபௌமர் என்றும் அழைக்கப் பட்டார்.

டிண்டிமப்ரபுவின் அபிராமநாயகரின் பெண்வயிற்றுப் பேரனுமாவார். சபாபதிபட்டாரகரின் மாப்பிள்ளை. இவரது நூல் அருணகிரி யோகாநந்தம் (Nos.4687-88) ஸோமவல்லி யோகாநந்தம் என்றுமழைக்கப்படுகிறது. திருப்புகழ் எழுதிய அருணகிரிநாதருக்கு டிண்டிமகவி சார்வபௌமர் எனும் பட்டம் அரசனால் அளிக்கப்பட்டு அவரது குடும்பத்தினருக்கும் அப்பெயர் தொடருகின்றது என்பது ஈண்டு நினைக்கத்தக்கது.

அச்வத்தபுதர் - 67

இவர் ராமபத்ரமகியின் பெயரர். ராமபத்ரரின் பெண் வழிவந்த ஸ்ரீவத்ஸகோத்திரத்தைச் சார்ந்தவர். அச்வத்த புதரின் நூல் வாதார்த்தபாவம் (Nos.6655).

ஆனந்தராயமகி - 84

இவர் ந்ருஸிம்மராயரின் புதல்வரும் கங்காதர மகியின் பெயரருமாவார். இவர் (ஆநந்தராயமகி) ஷாஜி மற்றும் முதலாம் சரபோஜியிடம் தளவாயாயும், தர்மாதிகாரியாயும் இருந்தார். ஆநந்தராயமகியின் நூல்கள் 1)வித்யாபரிணயம்(No.4511), 2.ஆச்வலாயன சூத்ரவ்ருத்தி (No.11764).

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

வித்யாபரிணயம் என்னும் நூலை வேதகவி என்ற புலவர் இயற்றி அவர் தன்னைப் போற்றிய ஆனந்தராயர் என்ற மந்திரியின் பேரில் அங்கிதம் செய்தார் எனக் கூறுவர். வித்யாபரிணயம் பிரபோதசந்திரோதயம் போன்றது. சிவபக்தியின் உதவியால் ஜீவனுக்கும், உபநிஷத் வித்யைக்கும் திருமணம் நடப்பதே இந்நாடகத்தின் கருப்பொருளாகும். அத்வைத கொள்கையை உடைய இந்நாடகத்தின் முக்கியமான ரசம் சிருங்காரமாகும். ஏழு

அங்கங்கள் உள்ள வித்யாபரிணயம் தஞ்சை விண்ணாற்றங்கரை தஞ்சபுரீச்வரர் ஆலயத்திருவிழாவில் நடிக்கப்பட்டது.

ஈச்வரதீக்ஷிதர் - 60

கௌண்டின்ய கோத்திரத்தின் வழி வந்தவரான இவர் கிருஷ்ணா மாவட்டத்தைச் (ஆந்திரமாநிலத்தைச்) சார்ந்தவர். இவரது நூல் ராமாயணஸார ஸங்கிரஹம் (No.9741).

உமாமகேச்வரர் - 47

இவர் ந்ருசிம்மாச்ரமியின் சீடர். பாஸ்கர தீக்ஷிதரின் தந்தை. உமாமகேஸ்வரர் தத்துவவிவேகத்தினை (No. 7490) 1547ல் புருஷோத்தமபுரத்தில் எழுதினார். இவர் ரகுநாதநாயக்கரால் சன்மானிக்கப்பட்டார். இவரின் பிற நூல்கள் 1) அத்வைத தீபிகா (No. 8484), 2) அத்வைத காமதேனு (No. 7526), 3. தத்வசந்திரிகை(No. 7528).

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இவர் வெள்ளாள குலத்தில் பிறந்தவர். தெலுங்கு பிராம்மணர். இவருக்கு அபிநவ காளிதாசன் என்ற பெயருமுண்டு. காச்யபகோத்திர வழிவந்தவர். இவரது குரு பக்ஷதர எல்லையார்யரின் சீடரான மோக்ஷகுண்டம்

அக்கயசூரி ஆவார். இந்த வெள்ளாள தெலுங்கு பிராம்மண குடும்பங்கள் ஆந்திர மாநிலம் மெகபூப்நகர்ப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். உமாமகேச்வரரின் பிறநூல்கள் - 1. விரோதாவரூதினீ, 2. பிரசங்கரத்னாகரம், 3. வேதாந்தசித்தாந்தஸாரம், 4. பாகவதசம்பூ, 5. ச்ருங்கார சேகர பாணம் அல்லது சிருங்காரகோச பாணம், 6. அபிநவபாரதசம்பூ, 7. பகவத்பாதசப்தசதீ, 8. கலிவிடம்பனம்.

ஏகோஜி II - 116

இவர் முதலாம் துளஜாவின் புதல்வர். இவருக்கு பாவாஜி என்பது மற்றொரு பெயர். இவரது நூல் பிரபஞ்சாம்ருத ஸாரஸங்கிரஹம் (Nos. 7655&18909) இது இதே மன்னரால் காக்கப்பெற்ற ஸ்ரீமகாதேவர் என்பவரால் இயற்றப்பட்டிருக்கலாம் என்றொரு சந்தேஹமும் உண்டு.

கமலா - 113

இவள் கனச்யாமனின் மனைவி. மேலும் இவள் வித்தசால பஞ்சிகையின் உரை நூலிற்கு இணை ஆசிரியை ஆவார் (No. 4675).

காளஹஸ்திகவி - 18

இவர் பேததிக்கார விவ்ருதியின் ஆசிரியர். (அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.) இந்நூல்

ந்ருசிம்மாச்ரமரின் பேததிக்கார நூலின் உரையாகும். காளஹஸ்திகவி ரகுநாதாச்ரமயதியின் சீடர். காஞ்சியை வாசஸ்தலமாகக்கொண்டு காமாட்சிதாசர் என்ற பெயரையும் பெற்றுள்ளார். அப்பயதீக்ஷிதரின் சீடரான இவர் அவரிடமே சிவதீக்ஷையும் பெற்றுள்ளார். இவரது நூல் வசுசரித்திரம் என்ற பெயரில் (Nos. 4146 & 4147 ஆகிய எண்களில்) பதிவிடப்பட்டுள்ளது.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இந்த வசுசரித்திரத்தின் அடிப்படை நூல் தெலுங்குமொழியில் அமைந்திருப்பதாய் வடமொழியின் வளத்திற்கு தமிழரின் பங்கு எனும் நூலில் மு. ஜகந்நாத ராஜா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

குமாரதாதாச்சார்யர் - 34

இவர் பாரிஜாதாபஹரணத்தின் (No. 4146). ஆசிரியர். இவரது தந்தை வேங்கடாச்சார்யர். பாட்டனார் ஷடமர்ஷண கோத்திர வழிவந்த ஸ்ரீநிவாஸகுரு ஆவார்.

இவரைப்பற்றிய பிறசெய்திகள்

இவர் குடந்தைக்கிடந்தான் அல்லது சார்ங்க பாணிப்பெருமாளின் நாயகியானகோமளவல்லிநாச்சியார் திருக்கோயில் முன்பு கோயில் கொண்டுள்ளார். அய்யா

குமார தாததேசிகன் என்றும் அழைப்பர். வைகாசி ரோஹிணியில் பிறந்த இவர் தஞ்சை நாயக்க மன்னரின் குலகுருவாகவும், ஆஸ்தான வித்வானாகவும் எழுந்தருளி யிருந்தார். அவரைப் பற்றி நீலகண்டதீக்ஷிதர் தன் கிரந்தத்தில் ஷட்தர்சினி ப்ரவீணா; குமாரதாததேசிகா: என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர் சுதர்சன அனுக்ரஹத்தால் ஞானை ஐஸ்வர் யத்தைப் பெற்றவர். நிக்ஷேப ரக்ஷாவ்யாக்யா, ஸ்ரீபாஷ்ய வ்யாக்யா, விசிஷ்ட்டாத்வைதசரணி, பஞ்சகாலக்ரியா தீபிகா, உஷாஅநிருத்தம், ராமாயண கதாசாரம், ஸூத்ர கல்பபாஷ்யம், வ்யாகரணதீபிகா, கணாத பரிபாடீ, கபில தந்த்ரசாரம், அபயபிரதானஸார உரை போன்றவை இவர் இயற்றிய பிறநூல்கள் ஆகும். (மகாகம் மலர்- 2016) அவரை திருக்குடந்தை ஆராவமுதனின் நாயகியார் ஸ்ரீ கோமளவல்லி நாச்சியார் திருச்சந்நிதி முன்பு இன்றும் நாம் கண்டு வணங்கலாம். அவருக்குப் பின் அந்த குரு ஸ்தானத்தைஅலங்கரித்தஸ்ரீலக்ஷ்மீநாராயணர் என்பவரால் ஸ்ரீ அய்யா குமார தாததேசிகனின் திருக்கோயில் ஸ்ரீ கோமளவல்லித்தாயார் கனவில் கொடுத்த கட்டளையின் பேரில் அவருக்கு அங்கே கோயில் நிறுவப்பெற்றது. ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணர் தமது குருவின் கடாக்ஷத்தால் பேறு பெற்றதை நினைத்து அய்யா குமாரதாத தேசிக

சம்பாவனை, "அய்யாகுமார தாததேசிகன் வைபவ பிரகாசிகை" என்ற இரண்டுகுறுநூல்களை இயற்றியுள்ளார் அவை இரண்டும் ஸ்ரீ அய்யாகுமாரதாததேசிகன்இயற்றிய பாரிஜாதாபஹரண நாடகத்தின் முன்னுரையில் (ப.எண்.2 1-24ல்) காணக்கிடைக்கின்றன.

அவர் ஒவ்வொரு ஆண்டும் வசந்தருதுவில் (சித்திர-வைகாசி மாதங்களில்) ஸாங்க தர்சபூர்ண மாசம், ஜ்யோதிஷ்டோமம், உக்த்யம் அதிராத்ரம்,அப்தோர்யாமம் ஷோடசி, வாஜபேயம், அக்னிசித்யம், பௌண்டரீகம் போன்ற யாகங்களைப் புரிந்தார்இவையாவும் தஞ்சை, விண்ணாற்றங்கரை ஸ்ரீநீலமேகப்பெருமாள் கோயிலிலே நடைபெற்று வந்ததால் ஸ்ரீநீலமேகப்பெருமாளுக்கு கண்டருளப் பண்ணிய பிரசாதத்தையே வேள்விகளுக்கு அவி உணவாக ஸ்ரீஅய்யாகுமாரதாத தேசிகன் அளித்து மகிழ்ந்தார்.

கிருஷ்ணதேவராயர் - 1

இவர் விஜயநகரப்பேரரசில் பிரசித்திபெற்ற மன்னர். இவரது அவையில் அஷ்டதிக்கஜங்கள் என எட்டு அறிஞர்கள் இடம்பெற்றிருந்தனர். தெலுங்கு இலக்கியங்கள் அவ்வமயம் உன்னதநிலை பெற்றிருந்த தோடு அவற்றிற்கு ஊக்கமுமளிக்கப்பட்டது. பிரபந்த

இலக்கியம் அக்காலத்தில் பல தோன்றின. கிருஷ்ண தேவராயர் சம்ஸ்க்ருதம் மற்றும் தெலுங்கில் சிறந்த புலமை பெற்றவராய் 1509-1529 வரை ஆட்சி செய்தார். அவரது நூல் ஜாம்பவதீ பரிணயம் (Nos. 4366 & 4367) என்றும் ஜாம்பவதீ கல்யாணமெனவும் அழைக்கப் படுகிறது.

கிருஷ்ணானந்த சரசுவதி - 49

இவர் சிறந்த அத்வைத அறிஞர். இவர் குறிப்பிட்ட பத்தாண்டுகளுக்கு முன் வளர்ச்சியுற்றிருந்த அத்வைத அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர். இவரது நூலான சித்தாந்த சிந்தாஞ்சனம் (No.7519) திருவனந்தபுரம் சம்ஸ்க்ருதத் தொடரில் வெளிவந்துள்ளது. இந்த (கையெழுத்துப் பிரதியிலிருந்து சுவடியிலிருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில்; இவருடைய நேரடிச்சீடர் ராமானந்தயதி என்பவர். இதனை 16.1.1670 ADயில் ஏடாக்கம் செய்திருக்கிறார். இதற்கு பாஸ்கரதீக்ஷிதர் (ரத்ன தூலிகை எனும்) உரை எழுதினார். இவரும் கிருஷ்ணானந்த சரசுவதியின் நேரடிச் சீடராவார். பாஸ்கர தீக்ஷிதரும் தமது புலமைக்காக 1684-1711ல் தஞ்சையை ஆண்ட முதலாம் ஷாஜி மன்னரிடம் பரிசிலைப் பெற்றவர். கிருஷ்ணானந்த சரசுவதியின் பிற

நூல்களாக சிவதத்வ ரத்னமாலிகையும், அதனுரை நூலும் (No.8198), அனுஷ்டான பத்ததிகளும் அறியப்படுகின்றன.

கேசவதைவக்ஞர் - 80

இவர் கல்பதரு எனும் நிகண்டு நூலை இயற்றியுள்ளார். இந் நூல் இயற்றப்பட்ட காலம் கி.பி.1660 ஆகும்.

கங்காதர சூரி - 68 (or) வாஜபேயீ

இவர் தன்னுடைய பாட்டனாரின் சகோதரருக்கு ஆசிரியர் என அப்பயதீக்ஷிதரைக் குறிப்பிடுகிறார். கங்காதர சூரி அப்பயதீக்ஷிதரின் குவலயாநந்தத்திற்கு ரஞ்சனி (No.5206) எனும் சிறப்பானதொரு உரைநூலை செய்திருக் கின்றார். மேலுமிவர் கணாத சித்தாந்த தத்துவத்தின் கணாத சித்தாந்தசந்திரிகை இயற்றியுள்ளார் (No.5679). அது திருவனந்தபுரம் சம்ஸ்க்ருதபதிப்பு வரிசையில் வெளியிடப் பட்டுள்ளது. போசலவம்சாவளி (No.4232). அவைதிக தர்சன ஸங்கிஹம் (No.8244). ஆகிய பிற நூல்களையும் இவர் படைத்துள்ளார்.

கஜவைத்யர் - 95

இவர் மாநிலமருத்துவர். திருவாரூரில் எங்கிருந் தெல்லாமோ பிடித்து வளர்க்கப்படும் யானைகளுக்கு

மருத்துவம் பார்க்கின்றார். இவர் பாரம்பரிய மருத்துவரும் கூட. அரசப்பணியாளர்கள் அவ்வேலைகளைச் சரிவரச் செய்வதில்லை. அதற்கு சம்ஸ்க்ருதமொழியில் எழுதப் பட்ட மனு ஒன்றை அரசனிடம் அளித்துள்ளார்கள். அதில் ஒவ்வொன்றும் விரிவாய் விளக்கப்பட்டுள்ளது. அதுவே 'கலிவிடம்பனம்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது (No.4239). இது நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய கலிவிடம்ப னத்திற்காட்டிலும் வேறானது.

கீர்வாணேந்திர சரஸ்வதி - 13

இவர் பிரபஞ்சஸாரஸார ஸங்கிரஹம் (No.17637) என்னும் நூலை இயற்றியுள்ளார். ந்ருஸிம்மாச்ரமியின் ஆசிரியரும் ரகுநாதாச்ரமியின் சமகாலத்தவரும் ஆவார். நீலகண்ட தீக்ஷிதர், போதேந்திர யதி ஆகியோர்களும் மதித்து வணங்கக்கூடிய ஆசிரியருமாவார்.

கீர்வாணேந்திர தீக்ஷிதர் - 58

இவர் நீலகண்டதீக்ஷிதரின் மூன்றாவது மகனும் சிஷ்யரும் ஆவார். இவரது நூல் சிருங்காரகோசம் (No.4611) ஆகும்.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இவர் தம்முடைய சிருங்கார கோசத்தில் குறிப்பிடும் செய்தி கீழ்வருமாறு- பாரத்வாஜமெனும் கடலிலிருந்து தோன்றிய கௌஸ்துபமணிக்கு கைய்யட வியாக்யானம், சிவதத்வ ரஹஸ்யம் போன்ற அநேக நூல்களை இயற்றிய அத்வைத வித்யா குருவிற்கு, பகவதியான அம்பிகையே புருஷரூபமாக அவதரித்த அவதார புருஷருக்கு, புனிதப்புகழ் படைத்த நீலகண்டமகிக்குத் தான் மூன்றாவது மகன் என்றும், அவருடைய திருவடித் தாமரைகளில் பணியடிமை செய்து கல்வியைப்பெற்றவன் என்றும் தெரிவிக்கின்றார்.

குருராமகவி - 25

இவர் சொந்த ஊர் மூலாண்ட்ர கிராமம். இவர் ஸ்வயம்பு தீக்ஷிதரின் புதல்வர். ராஜநாதரின் பெண்வயிற்றுப் பிள்ளையுமாவார். அப்பயதீக்ஷிதரின் சம காலத்தவரான குருராமகவியை நீலகண்ட தீக்ஷிதர் தமது நூல்களில் குறிப்பிடுகின்றார். இவரது நூல் சுபத்திரா தனஞ்சயம் (Nos. 4532-33), ஹரிச்சந்த்ர சரிதசம்பூ (கி.பி. 1607ல் எழுதப்பட்டது) மதனகோபால விலாசம், ரத்னேச்வர ப்ரசாதனம் மற்றும் விபாகரத்ன மாலிகை என்பவை குருராமகவியின் மற்ற பிற நூல்களாகும். இவற்றுள் கடைசி நூல் பயனுள்ள பல வரலாற்று தரவு களையும் இவரது காலத்திற்கு முன் வாழ்ந்த எண்ணற்ற நூலாசிரியர்களையும் விளக்குவதாய் அமைந்துள்ளது.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

முள்ளண்ட்ரம் வட ஆற்காடு ஜில்லாவில் உள்ளது. காலம் 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பதினேழின் முற்பகுதியுமாகும். சிதம்பரேசரின் அருள் பெற்றவர். பெரிய புலமைமிக்க குடும்பத்தில் பிறந்த இவரது ரத்னேச்வர பிரசாதனத்தில் காசி ரத்னேச்வரரின் அருளால் ரத்னசூடன் ரத்னாவளிகளுடைய காதல் மற்றும் திருமணம் 5 அங்கங்களில் நாடகமாகக் கூறப்படுகிறது.

ரத்னேச்வரபிரசாதனம்: இதில் ரத்னசூடன் ரத்னாவளி ஆகிய இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கின்றனர். காசிமாநகரில் அருள்புரியும் ரத்னேச்வர ஸ்வாமியின் அருளால் (பிரசாதத்தால்) மணமேற்று மகிழ்கின்றனர். ரத்னேச்வரரின் பிரசாதத்தை அடிப்படையாகக்கொண்டு ஏற்பட்ட இந்நாடகம் ரத்னேச்வர பிரசாதனம் என்றே அழைக்கப்படுகிறது.

கோபதிப்பபூபாலன் - 29

இவர் சாளுவ அரசிற்குச் சொந்தமானவனர். இவரது நூல் தாளதீபிகை (Nos.10828-29).

கோவிந்ததீக்ஷிதர் - 11

இவர் வாசிஷ்டகோத்திரவழி வந்தவரும், அத்வைத

வேதாந்த அறிஞருள் குறிப்பிடத்தக்கவரும் ஆவார். தஞ்சை பேரரசில் அச்சுதப்பர், ரகுநாதநாயக்கமன்னர்களின் ஆஸ்தான புலவரும், அமைச்சரும் கூட. இவர் வெங்கடேச்வர மகியின் தந்தையும், நீலகண்ட தீக்ஷிதரின் ஆசிரியருமாவார். சாகித்யரத்னாகரத்தின் ஆசிரியரான யக்ஞநாராயணதீக்ஷிதர் கோவிந்ததீக்ஷிதரின் இரண்டாம் புதல்வராவார். கோவிந்ததீக்ஷிதர் கௌமாரில தர்சனத்திற்கு ஒரு தலை சிறந்த உரையினை எழுதினார். நாயக்க மன்னர் ரகுநாதநாயக்கரின் ஒத்துழைப்போடு சங்கீதசுதாநிதி என் கிற நூலையும் இயற்றியுள்ளார். அச்சுதப்பநாயக்கர் ஆட்சி செய்த காலத்தில் கோவிந்த தீக்ஷிதரிடம் கொண்டிருந்த நேசம், நெருங்கிய தொடர்பு, மரியாதை ஆகியவற்றை உறுதி செய்யும் ஈரடிச் செய்யுள் கீழ்வருமாறு-

த்ரிணாம் ஆத்யந்த நாமானௌ மஹீக்ஷித் தீக்ஷிதாவுபௌ।
சஸ்த்ரே சாஸ்த்ரே ச நிபுணாவாஹவேஷு ஹவேஷு ச ॥

(பொ.) மூன்றுநாமமாகிற அச்சுத, அனந்த, கோவிந்த நாமங்களுள் ஆதியாகிற (முதலான) அச்சுத நாமத்தையும், அந்தமாகிற (முடிவான) கோவிந்த நாமத்தையும் இவ்விருவர் பெற்றுள்ளனர். ஆதியாகிற மஹீக்ஷித் சஸ்த்ரத்தில் நிபுணராக போர்களத்திலும், அந்தமாகிற தீக்ஷித் சாஸ்த்ரத்தில் நிபுணராக யக்ஞங்களிலும் சிறந்து விளங்கினார்.

கோவிந்தமந்த்ரின் - 12

இவர் கோவிந்ததீக்ஷிதரைக்காட்டிலும் வேறு பட்டவர். இவரது நூல் ஹரிவம்சஸார சரிதம் (No.3742) ஆகும். இதற்கு அப்பயதீக்ஷிதர் ஓர் உரையும் எழுதி யுள்ளார். சாண்டில்யகோத்திரத்தின் வழிவந்தவரும், விஜய நகரப் பேரரசின் பிரதிநிதியுமான கொண்டப்பநாயக்கனின் அமைச்சரும் ஆவார்.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இவர் குந்துருடி குடும்பத்தில் கும்பாம்பிகை மற்றும் ஸ்ரீதல்லிமந்திரிக்கும் புதல்வராய்த் தோன்றியவர். வேங்கடபதிராயரின் அரசவையில் இருக்கும்போது கோவிந்தமந்திரியின் புலமையைப் புகழ்ந்து கோவிந்தமந்திரிக்கு வேங்கடபதிராயர் கனகாபிஷேகம் செய்து வைத்தார்.

கனச்யாமன் - 112

இவர் துக்கோஜி அவையில் மிகுந்த செல்வாக்கு உடைய மந்திரி. காசீ மகாதேவர் என்பவர் இவரது தந்தை ஆவார். கனச்யாமனின் சகோதரி சாகம்பரி. கனச்யாமனின் சகோதரர் குண்டாஜி என்ற மற்றொரு பெயர் கொண்ட சிதம்பரயோகி ஆவார். கனச்யாமனுக்கு சுந்தரீ கமலா என

இரு மனைவியர் இருந்தனர். இருவருமே கல்வியில் சிறந்து விளங்கினர். கனச்யாமனின் நூல்களாக -

1. அன்யாபதேசசதகம் (No.8889), 2. தசகுமார சரிதவ்யாக்யா (No.4006), 3.நீலகண்ட விஜயசம்பூ வ்யாக்யா (No.4061), 4. சகுந்தலா சஞ்சீவினீ 5. மதன சஞ்ஜீவன (No.4587), 6. சண்டானு ரஞ்சனம் (No.4629), 7.வித்தஸாலபஞ்சிகா வ்யாக்யானம்(No.4675), 8. ஆனந்த சுந்தரீ (No.4681), 9. நவக்ரஹசரிதம் (No.4689).

ஞானேந்திரன் - 20

இவர் வாசுதேவேந்திரரின் சீடரும் அக்னி ஹோத்ரிக்கு ஆசிரியருமாவார். இவரது நூல் புருஷார்த்த சுதாநிதி (No.7110).

சக்ரகவி - 59

சக்ரகவிஎன்பவர் லோகநாதசுதிக்கும் அம்பாவிற்கும் புதல்வராகத்தோன்றினார். இவரது மூத்த சகோதரர் ராமசந்த்ரர் இவருக்கு ஆசிரியர். இவர் பல நூல்களைப் படைத்திருக்கிறார். ஜானகீ பரிணயமான தமது நூலில் சமகாலத்தவரான ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதரை "ஸர்க: ஷஷ்ட்ட இஹாஜனிஷ்ட்ட மதுர: ஸ்ரீ நீலகண்டாத்வரி: । ச்லாகா

ஸீமனி ஜானகீ பரிணயே காவ்யே ததீயே நவே" என்ற சுலோகத்தால் புகழ்ந்தமை அறியப்படுகிறது. ஜானகீ பரிணயம் திருவனந்தபுரம் சம்ஸ்க்ருதபதிப்பு வரிசையில் வெளியிடப்பட்டது. மேலும், சக்ரகவியின் நூல்களாக ருக்மிணி பரிணயம், பார்வதி பரிணயம் (அ) கௌரி பரிணயம், திரௌபதி பரிணயம், சித்ரரத்னாகரம் போன்றவை அறியப் படுகின்றன.

சந்த்ரசேகரர் - 115

இவர் சப்தசேஷரின் மகனும் கனச்யாமரின் நூலிற்கு உரைகாரரும் ஆவார். அப்படி அமைந்த நூல் டமருக வியாக்யானம் (No.3793) ஆகும்.

சிதம்பரகவி - 24

இவர் அனந்தநாராயணரின் புதல்வன். சூர்ய நாராயணர் பெயரரும் ஆகிய இவர் கௌசிக கோத்ரத்தின் வழிவந்தவரும் ஆவார். இவரது நூல்கள் 1. கதாத்ரயீ (Nos.3750-51). 2. சம்பூ பாகவதம் (Nos.4067-68) முதலியன. மேலும் இவரது உரையுடன் 3. சிதம்பரவிலாச காவியம் (Nos.3777-80) திகழ்கின்றது. ராகவபாண்டவயாதவீயம் எனும் பெயருக்கேற்றார்ப்போல் ராமாயண, மகாபாரத, பாகவதக் கதைகளை ஒவ்வொரு சுலோகத்தில்

சாமர்த்யமாக பொருத்தி அமைக்கப்பட்டுள்ளதால் இவரது நூல் கதாத்ரயீ எனப்படுகிறது.

இவ்வாசிரியர் குறித்த பிற செய்திகள்

இவரது தாயார் வேங்கடாம்பா. இவரது தந்தை அனந்தநாராயணர். கோதாவரி மாவட்டத்தில் பிறந்து நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திற்கு வந்தார். இவரது தாய் வழிப்பாட்டனார் வாதூல கோத்திரத்தைச்சேர்ந்த வேதபுரீச்வரர். வேதபுரீச்வரரின் சொந்த ஊர் வடஆர்க்காடு மாநிலத்தின் விரிஞ்சிபுரம் ஆகும். இவரது தமயனார் ஸ்ரீநிவாஸவித்வன்மணி என்பவராவார். இவரது பிறநூல்களாக சிலேஷசிந்தாமணி, சப்தார்த்தசிந்தாமணி, பஞ்சகல்யாண சம்பூ ஆகியவை அறியப் படுகின்றன.

சம்பூபாகவதம்: இது மூன்று ஸ்தபகங்களைக் கொண்டது. இது பாகவதைக் கதையைச் சார்ந்து அமைந்துள்ளது. இந்த நூலின் தொடக்கத்தில் கிருஷ்ணனுக்கு வணக்கம் செலுத்தி, வில் ஒடித்த இராமனின் மகிமை, வேடக்கடலரசனிடம் விளக்கிய பெருமை ஆகிய விசேஷணங்களுடன் இராமன் வர்ணித்து வணங்கி இராமனையே தன்னிஷ்ட தெய்வமாகக் கூறுவார் போலே தன் வம்சம் கௌசிகம் என்றும் அதனடியாக வந்த

சூர்யநாராயணர், அவரது புதல்வராம் அனந்தநாராயணரின் மகனாகிய சிதம்பரம் என்பவரே தாம் என்பதைக் குறிப்பிடுகிறார்.

சிதம்பரவிலாசம்: (Nos. 3777-80) இந்நூல் தில்லை நடராஜரின் புராணக்கதையை அடியொற்றி அமையப் பெற்றது. 5 சர்கங்கள் உள்ளன. இதனை இயற்றியவர் சிதம்பரேச்வரர். இதன் உட்பொருள் மாலையும் சிதம்பரேச்வரருக்குத்தான். இதனைச்செய்யத் தூண்டிய வரும் சிதம்பரேச்வரர்தான் இம்மூன்றுமே அறிஞர்களுக்கு மிகமகிழ்ச்சியைத் தருகின்றது. இக்காவியத்தின் 5ம் சுலோகத்தில்தஞ்சைமாவட்டம்-பாலையூர்அக்ரஹாரத்தில் தம்முடைய வாசத்தைக்குறிப்பிடுகின்றார். பரந்த சிந்தை யாளர்கள் இந்த சிதம்பரத்திலே ஒரு வடபாகத்திலே உத்தானசாயியான திருமகள்நாதனுக்கும் சந்நிதியை ஏற்படுத்தி பொன்னம்பலத்தில் சிதம்பரேசனான ஸ்ரீநடராஜரையும் பிரதிஷ்டித்து வாழ்ந்தார்கள்.

சிலேஷசிந்தாமணி: (No. 3855) இதில் 110 சுலோகங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் மேலெழுந்தவாரியாக ஒரு பொருளையும் மறைப் பொருளையும் கொடுக்கவல்லது.

சப்தார்த்தசிந்தாமணி: (Nos. 3850-3851) இந்த காவியம் கிரமமாக (அனுலோமமாக) படித்தால்

ஸ்ரீராமகதையும், வியுத்கிரமமாகப் (பிரதிலோமமாக) படித்தால் ஸ்ரீராமானுஜனான (ஸ்ரீராமனின் பின்தோன்றலான) ஸ்ரீகிருஷ்ணனின் கதையையும் கொடுக்கின்றது. இது நான்கு வகையான கவிகளில் சித்ரம் என்பதைச்சார்ந்தது. இந்த நூலின் இறுதியடிக்குறிப்பால் இவர் கவித்திறன் பெற்றவர் என்பதுடன் இலக்கணம், தர்க்கம் ஆகியவற்றிலும் துறைபோகியவர் என்பது தெளிவாகிறது. இரண்டு சர்கங்களுள்ள இக்காவியம் இவரது நிகஷோபலம் (உரைகல்) என்ற உரையினையும் பெற்றுள்ளது.

பஞ்சகல்யாணசம்பூ: இது நபர்களின் திருமணத்தைப் பேசும் செய்யுள் மற்றும் உரைநடைப் பாங்கில் அமைந்துள்ளது. சிதம்பரகவியின் உரையும் அதனுடன் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு சுலோகமும் ராமன், கிருஷ்ணன், சுப்ரமண்யன், சிவன், விஷ்ணு ஆகிய ஐவரின் திருக்கல்யாணங்களைக் குறிப்பிடுவதால் இதற்கு ஸ்ரீ பஞ்சகல்யாண சம்பூ எனப்பெயர் வந்துள்ளது. இதனை இறுதியடிக்குறிப்பில் ஆசிரியர் 'சம்பூரத்னம்' என்றே குறிப்பிடுகிறார். இதில் பிரமோத்தர ஸ்தபகங்கள் உள்ளன.

சின்னபொம்மபூபாலர் - 10

இவர் நளபொம்மபூபாலரின் புதல்வர். அப்பய தீக்ஷிதரின் ஆதரவு இவருக்கு இருந்தது. இவரது நூல்

சங்கீத ராகவம் (No.10783). தொல்பொருள் ஆய்வாளர் களின் கருத்துப்படி இவரது காலம் 1549 to 1602 AD ஆகும்.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

மதுரை ஆண்ட சொக்கநாதநாயக்கமன்னரின் ஆட்சிக்குட்பட்டவாறே இவர் 1549-1579ல் வேலூரை ஆண்டுவந்தார். தெலுங்கு, சம்ஸ்க்ருதம் ஆகியவற்றில் புலமை மிக்கவர். இவர் தமது சங்கீதராகவநூலை ராமாயணத்தின் 6 காண்டங்களுக்கு ஆறு சர்கங்களாக்கி யுள்ளார். இவர் சங்கீதத்தில் புலமை பெற்றவராதலால் ராகவனின் (ஸ்ரீராமனின்) கதையை சங்கீதமாக ஜயதேவரின் கீதகோவிந்தம் போல் சங்கீதராகவம் என்ற பெயரில் படைத்துள்ளார். இதில் த்ருவபதம், புன்னாகவராளி, சௌராஷ்டிர ராகங்கள் அடதாளம் கொண்ட சங்கீத அமைப்புகள் உள்ளன.

சொக்கநாதகவி - 76

சொக்கநாதகவி சகஜி மகாராஜாவின் (1684 -1710 AD) அவைப்புலவர். இவரது பெற்றோர் நரசாம்பா திப்பாத்வரி தம்பதிகள் ஆவார்கள். இவரது நூல் காந்திமதி பரிணயம் (No.4339). இவர் மேலும் புகழ்

பெற்றவராய் ரசவிலாசபாணம், சேவந்திகா பரிணயம் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இவர் பரத்வாஜகோத்திரவழி வந்தவர். இவர் ஆந்திரமாநிலத்திலிருந்து தஞ்சாவூருக்கு குடிபெயர்ந்தவர். அச்சமயமே கேளடியில் ஆட்சிபுரிந்த இக்கேரி குடும்பத்தினரான பசவப்பநாயக்கனாலும் (1697 - 1714 AD) ஆதரிக்கப்பெற்றார். இவர் நீலகண்டதீக்ஷிதரின் நண்பர். ராமபத்ரதீக்ஷிதர் இவரது சீடர். பிறகு இவருக்கு மாப்பிள்ளையும் ஆனார். சொக்கநாதகவி என்பவர் சகஜிராஜபுரம் 46 பண்டிதர்களுள் ஒருவர்.

காந்திமதி பரிணயம்: இந்நூலிற்கு காந்திமதீ ஷாஹஜீயம் என்று மற்றொரு பெயர். காந்திமதிக்கும் சகஜிமன்னருக்கும் திருமணம் என்ற கருப்பொருளில் இயற்றப்பட்ட இந்நாடகம் 5 அங்கங்களைப் பெற்றுள்ளது. இது திருவிடைமருதூர் மகாலிங்கஸ்வாமி திருவிழா முன்னிட்டு இயற்றப்பட்டிருக்கலாம்.

ரஸவிலாஸபாணம் : இந்நூல் சொக்கநாத கவியால் எழுதப்பட்டது. சொக்கநாத கவிபாஷ்யாதி கிரந்தங்கள் அனைத்தையும் எப்போதும் போதித்து வந்தார். ஆதலால் இவருக்கு சிஷ்யப்ரசிஷ்யர் பலர் இருந்தனர். இவரது

தந்தை திப்பாத்வரி ஜகதாசார்யர் என்றழைக்கப்படுகிறார். மேலும் ஸகலகலாவல்லவரான திப்பாத்வரி வாதிகேசரி திருமலைசாஸ்திரி சிறுவயதிலேயே ஸகல சாஸ்திரங் களையும் கற்ற ஸ்வாமிராமசாஸ்திரி, ஸ்ரீசீதாராமசாஸ்திரி ஆகியோர்களுக்கு இளையவர் சொக்கநாதகவி என்றும் இந்நூல் தெரிவிக்கிறது.

சேவந்திகா பரிணயம் : இந்நூல் சுப்ரமண்ய க்ஷேத்திரத்தில் அரங்கேற்றம் பெற்றிருக்கலாம். இதில் மலபார் மன்னன் மித்ரவர்மனின் மகள் சேவந்திகைக்கும் பசவராஜனுக்கும் நடந்த திருமணம் கருப்பொருளாக அமைந்துள்ளது. இந்த நாடகத்தில் சூத்ரதாரன் சொக்கநாதகவியின் சகோதரர்களை ஒரு சுலோகத்தில் குறிப்பிடுகிறான். இதில் குப்பாத்வரீந்த்ரர் ஜ்யேஷ்டர். பிறகு அறிவாற்றலும் அழகிய பேச்சாற்றலும் கொண்ட திருமலையும், பிறகு நூல்வெளியிட்டு அதைப்பரப்புகின்ற அறிவுத்திறன் படைத்த ஸ்வாமியஜ்வாவும், ஸ்ரீ சீதாராம சாஸ்திரியும், அவரைத்தொடர்ந்து அவரது இளவலாக சொக்கநாதசுதீந்த்ரரும், அடுத்து யக்ஞேச்வரார்யரும் ஆன இந்த அறுவர்களும், யாவரையும் தமது அறிவாற்றலால் வென்ற குருவான திப்பாத்வரியின் புதல்வர்களாவர்.

சொக்கநாதகவி கன்னடநாட்டிலிருந்து குடியேறிய அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். பாண்டிச்சேரிக்கு

அருகிலுள்ள பாகாநகரத்தை ஆளும் சிற்றரசன் சித்ரவர்மன். பாகாநகரம் தஞ்சை மராட்டிய சமஸ்தானத்திற்கு உட்பட்டது. சித்ரவர்மனின் மகள் காந்திமதியை கும்பகோணம் திருவிழாவிலும் மற்றுமொரு திருமணத்திலும் கண்டு காதலுற்று இரண்டாம் ஷாஜி அவளை மணப்பதினைக் கருப்பொருளாக்கி 5 அங்கங்கள் உடைய நாடகத்தை அமைத்துள்ளார் சொக்கநாதகவி என வடமொழி வரலாற்றிற்கு தமிழரின் பங்கு எனும் நூலில் மு. ஜகந்நாதராஜா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சொக்கநாதமகி - 41

இவர் நாராயணதீக்ஷிதர் மற்றும் கணபதி தம்பதியரின் புதல்வர். இவர் நீலகண்டதீக்ஷிதரின் இளமைச் சமகாலத் தவருள் ஒருவர். சொக்கநாதமகிக்கு சாஸ்திரங்களில் நுண்மாண் நுழைபுலம் பெருக வழிவகுத்தவர் நீலகண்ட தீக்ஷிதர் ஆவார். இவர் ராமபத்ர தீக்ஷிதருக்கு ஆசிரியரும், மாமனாரும் ஆகிறார். சொக்கநாதரின் நூல்களாக சப்த கௌமுதீ (No.5855), தாதுரத்னாவளி (Nos.5697-99) அறியப் படுகின்றன. இவர் பாஷ்யரத்னாவளியின் ஆசிரியரும் ஆவார். அந்தநாளில் மிகவும் அனுபவபூர்வமான நிகழ்ச்சி களால் தன்னுடைய குரு ஸ்ரீ வேஙகடேசாத்வரி என்று குறிப்பிடுகிறார்.

ஜகந்நாத பண்டிதர்- 108

இவரது குடும்பப் பெயர் காவளம் ஆகும். இவர் மராத்திய பிராமணர். இவரது தந்தை ஸ்ரீநிவாஸ பண்டிதர். ஸ்ரீநிவாஸ பண்டிதரின் சகோதரர் ரகுநாத பண்டிதர். ஜகந்நாத பண்டிதர் முதல் சரபோஜியின் ஆச்ரயத்தில் தஞ்சாவூரில் வசித்துவந்தார். இவரது நூல்கள் 1. சரபராஜ விலாசம் (No.4241, Date of Complition 1722AD), 2. அனங்க விஜயம் (No.4577), 3. ச்ருங்கார மஞ்சரி.

இவர் காவளம் ஜகன்னாதர் மற்றும் அனங்கவிஜயம், ரதிமன்மதம் இயற்றிய ஜகன்னாதர் களைக்காட்டிலும் வேறுபட்டவர். இவரது பெற்றோர் அக்கம்மா மற்றும் நாராயண தைவக்ஞர்கள் ஆவர். இவர் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர் காசியில் வசித்திருக்கலாம். இவரது நூல் ஞானவிலாச காவியம் (No. 3792). இது எட்டு சர்கங்களில் புத்தி முதலான அசேதன வர்கங்களை நாயகர்களாக்கொண்டு இயற்றப்பட்ட செய்யுட்களைக்கொண்டது.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

அனங்கவிஜயபாணம் தஞ்சை பிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயிலில் அரங்கேற்றப்பட்டது. இந்நூலாசிரியரின் தாய் ஸோரிபாய் ஆவார். இவரது

பெரியப்பா ரகுநாதர் போஜனகுதூஹலம் முதலிய நூல்களின் ஆசிரியராகலாம்.

ஜகந்நாதர் - 109

இவர் பாலகிருஷ்ணமந்திரியின் மகன். இவர் முதல் சரபோஜி மன்னரால் ஆதரிக்கப்பட்டவர். இவரது நூல் ரதி மன்மத நாடகம் (No.4488).

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

உமாநந்தநாதர் எனவும் அழைக்கப்படுகிறார் ஜகன்னாதர். இவரது தாயார் லக்ஷ்மீ. ஜகந்நாதர் இயற்றிய ரதிமன்மதம் தஞ்சபுரீச்வரர் ஆலய வசந்த விழாவில் நடிக்கப்பட்டது.

இவரது தாயார் லக்ஷ்ம்யம்பிகா. இவர் விச்வாமித்ர கோத்திரத்தின் வழிவந்தவர். இவர் மராட்டிய மாநிலத்தில் இருந்து தஞ்சைக்கு குடிபெயர்ந்தவர். காமேச்வரசூரி அல்லது காமாக்ஷிசூரி என்றழைக்கப் படுபவரிடம் கல்விபயின்றவர். பாஸ்கரராய தீக்ஷிதரிடம் ஸ்ரீவித்யா தீக்ஷையும்பெற்றார். இவருடைய தீக்ஷாநாமம் உமாநந்தநாதர் என்பதாகும். இவர் தீக்ஷைபெறுவதற்கு முன் சரபராஜவிலாசம் (No.4241), வசுமதீபரிணயம், ரதி மன்மத நாடகங்களையும், தீக்ஷைபெற்ற பின்

ஹ்ருதயாம்ருதம், நித்யோத்ஸவம், பாஸ்கரவிலாசம், ஞானேச்வரிடிப்பணம், ஆத்மபோத விவரணம் ஆகியவற்றையும் படைத்துள்ளார்.

ரதிமன்மதம்: சிவன் மன்மதனை அழித்தபின்பு மன்மதன் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஒரு அவதாரமாக பிரத்யும்னன் என்ற பெயரில் இருந்திருக்கின்றான் என்பதை புராணத்தின் செவிவழிச்செய்தியாக வழங்கப்பட்டுவருவதை நாடகத்தின் நடுவில் மறைத்து குறிப்பிடப்படுகிறது. ரதியும் மன்மதனும் ஒருவரை ஒருவர் விரும்பி காதல் கொண்டு செயல்படும்போது சம்பராசுரன் ரதியை கடத்திச் செல்ல, தேவர்களால் துதிக்கப்பட்டு சிவபெருமான் கார்த்திகேயனாக அவதாரம்செய்து அசுரனைஅழித்து ரதியை மன்மதனுடன் சேர்த்து வைக்கிறார் என்பதே இந்நாடகத்தின் கருப்பொருளாகும். (தஞ்சை சரசுவதி மகால் நூலகவெளியீடு, ஆண்டு - 2000, விலை ரூ.40.00)

மேலும் இவருக்கு தஞ்சாவூர் ஜகன்னாதர் என்ற பெயருமுண்டு. இவரது அச்வதாடீ என்கிற காவியம் சுபாஷித ரத்னாகர வரிசையில் மும்பையில் 1872ல் வெளிவந்துள்ளது. இதில் 25 செய்யுட்கள் பல தெய்வங்களைக் கொண்டாடும் வகையில் அச்வதாடீ (குதிரை தாவி ஓடும்) அமைப்பில் இயற்றப்பட்டுள்ளது.

இவர் தஞ்சையில் அருள்புரியும் அம்பாளை துதிக்கும் வகை-

கம்ஜாயிதோதிமதிகஞ்ஜாபரேபி ஸஞ்ஜாயதேத்ர தனத: -
ஸம்ஜாகடீதிகுணபுஞ்ஜாயிதஸ்ய ந து குஞ்ஜாமிதம் ச கனகம் |
கிம் ஜாக்ரதீ ஜயஸி கிம் ஜானதீ ஸ்வபிஷி சிஞ்ஜானநூபுரபதே
தஞ்ஜாபுரேசி நவகஞ்ஜாக்ஷி ஸாதுததி தம்ஜாது வா கிமு சிவே ||

என்னும் சுலோகத்தால் அறியமுடிகிறது.

ஜகந்நாதர்

இவர் இதற்குமுன் குறிப்பிட்டவரைக்காட்டிலும் வேறுபட்டவர். இவர் ஞானவிலாசகாவியம்(No.3792) இயற்றியவர்.இவரது பெற்றோர் அக்கா நாராயண தைவக்ஞர். தைவக்ஞர் எனக்குறிப்பிடப் படுவதால் இவரது தந்தையார் ஒரு சோதிடர். இங்கே குறிப்பிடப்பெ பறும் ஜகந்நாதர் ஒரு சிறந்த அத்வைத வேதாந்தி ஆவார். ஞானவிலாசகாவியம் - இந்த காவியத்தில் எட்டு சர்கங்கள் உள்ளன. கர்மாக்களைச்செய்தல், ஞானமடைதல் என்பதை வைத்து கர்மகாண்டம், ஞானகாண்டம் ஆகியவை அறியப்படுகின்றன. மனம் போன போக்கில் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கிவிடும் என்ற சந்தர்ப்பத்தில் ஸத்வ்ருத்தியில் (நல்வழியில்) ஸத்வ

ப்ரகாசன் (நல்லதை வெளியிடுபவன்), ஸத்யாத்மாவைப் (நற்புருஷரை) தேடிப்பிடித்து தன்மகள் ஸுமதிக்கு (நல்லெண்ணமுடையாளுக்கு) மணம் செய்து வைப்பதை கருப்பொருளாக்கி ஞானவிலாசகாவியம் ஆனதை இங்கே நாம் அறிந்துமகிழ்வோம்.

ஸத்வ்ருத்தி என்னும் ஊரில் ஸத்வப்ரகாசன் என்ற ஓர் அரசன் இருந்தான். சாந்தி என்பவள் அவரது மனைவி. அவர்களின் புதல்வி ஸுமதி. அவரது தோழி விஷ்ணுபக்தி. அவள் மூலமாக ஹரிபஜனத்தை அறிந்துகொண்டாள். அதன் பயனாக ஸுமதி ஸத்யாத்மா வைத் தன் கணவனாக வரிக்கமுற்படுகின்றாள். இச்செய்தியினை பெற்றோர்களும் அறிகின்றனர். இவ்வாறான பரிசீலனத்தால் ஸத்யாத்மா என்றவரைத் ஸத்வப்ரகாசன் அறிகின்றார். பிறகு ஸத்யாத்மாவைப் ஸுமதியுடன் திருமணம் செய்துவைத்து மகிழ்ந்தனர். இப்படிப்பட்ட அத்வைத வேதாந்தவிசாரத்தால் ஸத்வ்ருத்தியும் சாந்தியும் முக்தியினை அடைந்தனர் என்ற ஞானகாண்டத்தின் (உபநிஷத்தின்)வழி அமைந்த ஒரு விலாசகாவியமே ஞானவிலாசகாவியம் ஆகும்.

ஜ்யோதிரீச்வரர் - 2

இவருக்கு கவிசேகர ஜ்யோதிரீச்வரர் என்ற பெயரும் உண்டு. இவரது காலம் 16ம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதி

ஆகும். இவர் நரசிம்மன் (1487 - 1507 AD), என்னும் மன்னனால் ஆதரிக்கப்பட்டவர். இவரது நூல் தூர்த்த ஸமாகமம் (No.4630).

தாதார்யர் - 82

இவரது தந்தையார் வானாத்ரீச்வரர். இவரது காலம் 17ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகும். இவரது நூல் சீதாநந்தம் (No.4530).

திருமலாம்பா - 5

இவர் வரதாம்பிகா பரிணயத்தின் (No.4220) ஆசிரியர். இந்நூலின் மையக்கருத்து விஜயநகரமன்னன் அச்சுதராயருக்கும் வரதாம்பாவிற்கும் நடக்கின்ற திருமணம். அச்சுதராயர் கி.பி. 1530ல் விஜயநகரத்தை ஆட்சி செய்த மன்னர். இந்நூல் ஸ்ரீகிருஷ்ணதேவராயரின் காலத்தில் இயற்றப்பட்டிருக்கலாம் எனத்தோன்றுகிறது.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இவரது நூல் வரதாம்பிகா பரிணயம் பெற்ற இறுதியடி திருமலாம்பா பெற்றுள்ள குணகவிதா சாமர்த்தியங்களை பறைசாற்றுவதாகக் காணக்கிடைக் கின்றது. இதோ அவற்றை பார்ப்போம்.

"ஏகவார-ஆகர்ணனமாத்ர-த்ருடாவதாரித நவ்ய காவ்ய-நாடக-அலங்கார-புராண-ஆகம-ரஹஸ்யஸாரஸ்ய-அனுபந்தஸமிந்தான ஸ்வாபாவிக ப்ரதிபானுபாவயா, வித்யா விசேஷ நிரவத்ய வித்வத்வர ஸகலகவிகுல ச்ரவணானந்த சிந்தித - அனந்தபீஷ்ட- பலாச்ரயண-விச்ராணன காமகவீபவத்- அசேஷபாஷாவிஷய - ஸவிசேஷ உன்மேஷ - சதுரிமகர்பித - ஸரஸ ப்ரபந்த ஸந்தர்பயா, விவித வித்யாப்ரகல்ப ராஜாதிராஜ அச்யுத ஸார்வபௌம ப்ரேமஸர்வஸ்வ விச்வாஸபுவா, நிருபாதிக மஹோபகாரநிர்மாண தர்ம- நிர்மலஹ்ருதயயா, நிகிலலிபி விலேகன நியதவிதரண- க்ருதஹஸ்த ஹஸ்தாரவிந்தயா விரிஞ்சிசஞ்சல - நயனான - காஞ்ஜல ஸமுதாஞ்சித விபஞ்சி ப்ரபஞ்சித - பஞ்சம - மதுரி - மோதஞ்சன விகஸ்வரகண்டஸ்வரயா, விபுல தலாதலவிஹார வினோத ஸாகாராவதீர்ண சதபர்ணாசன வரவர்ணினீ மதி நிர்ணாயிகயா, நானாதேச ப்ரதிஷ்டித- அனேக- விரசித வாஜபேய- பௌண்டரீக -ஸர்வதோமுக மஹாத்வர த்விஜவர விதீர்யமாண-ஆசீர்விசேஷ பரிபோஷித பாக்ய ஸௌபாக்யயா நியதரக்ஷிதகவி குடும்பயா, திருமலாம்பயா நிர்மிதம் வரதாம்பிகா பரிணயம் நாம சம்பூகாவ்யம் ஆசந்த்ர தாரகம் அபிவர்த்ததாம்" என்ற இதிலிருந்து திருமலாம்பாவின் பிரதிபை, வள்ளல் திறம், நூற் படைப்பாற்றல், அச்சுதராயருக்கு விச்வாசபாத்திரம்

ஆனமை, தர்மசிந்தை, எழுத்தாற்றல் மிக்க கைத்திறன், வீணையின் ஒலியை ஒத்த குரல்வளம், மகாலக்ஷ்மி போன்ற திருவுருவம், பல தேசங்களில் வேள்விகள் பலபுரிந்த வேதியர்களின் ஆசிபெற்ற சௌபாக்யத்தன்மை, கவி குடும்பத்தால் காக்கப்பெற்றமை போன்ற குணாதிசயங்கள் அறியப்படுகின்றன.

அச்சுதராயரின் (1529-1542 AD) மனைவி திருமலாம்பா, இவரது நூலில் (வரதாம்பிகா பரிணயத்தில்) நீண்ட வகையில் உரையினையும், எளியநடை செய்யுள்களும் உள்ளன. ஆரம்பத்தில் அச்சுதராயரின் தந்தை நிருசிம்மனின் திக்விஜயமும், காவேரி வர்ணனையும் காணப்படுகின்றன. தஞ்சையில் அச்சுத தேவராயர் கல்வெட்டு - கிரந்த எழுத்துப்பயிற்சி கையேடு (தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, ஆண்டு-2017, விலை ரூ. 170.00) என்ற நூலிலும், தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக பருவ இதழ் 56லும் காணலாம்)

துளஜா மகாராஜா I (1729 - 1755 AD) - 110

இவர் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களுள் நான்காவது மன்னர். இவர் நல்ல அறிஞர் ஆவார். இவருக்கு தெலுங்கு, மராத்திய மொழிகளிலும் புலமை உண்டு. இவரது நூல்கள் 1. நாட்டிய வேதாகமம்

(No.10671), 2.சங்கீத சாராம்ருதம் (No.10786), 3. தன்வந்தரீ விலாசம் (No.11066), 4. தன்வந்தரி ஸாரநிதி (No.11069).

சங்கீத சாராம்ருதம் : சங்கீதத்தில் வல்லவர்கள் மற்றும் வைணிகர்கள் கூடிய மாபெரும் வித்வத்சதஸ் நடைபெறுகிறது. அந்த சங்கீதமகா பிரசங்கத்தின் பயனாக லக்ஷ்ய லக்ஷண ரூபமான நூல் இல்லாமை உணரப்பட்டது. அதனையே தனது லக்ஷ்யமாகக்கொண்டு, சார்ங்கதேவர் முதலானோர்களின் இசைநூல்களைக் கண்டு உலக நன்மைக்காக சிவபெருமானை வணங்கி பேருபகார மனதுடைய துளஜா மன்னரால் சங்கீத சாராம்ருதம் எனும் இந்நூல் இயற்றப்பட்டது. குறிப்பாக இதில் பைரவீமேளனத்தால் உண்டாகும் ராகங்களும் அதைக்குறித்த பிறசெய்திகளும் தெளிவாகப் பிரதிபாதிக்கப் பட்டுள்ளது.

திரம்யம்பகராயர் - 62

இவர் ஏகோஜி, ஷாஜி, முதலாம் சரபோஜி ஆகியோரிடம் மந்திரியாக இருந்த ந்ருசிம்மரின் இளைய சகோதரர். இவரது நூல் தர்மாகூதம் (No.9377). இது இயற்றப்பட்ட காலம் கி.பி. 1719 ஆகும்.

இதற்குரிய ஆதாரம்

சாலிவாஹனசகே ஸஹஸ்ரபரத: ஷட்கே சதானாம் மதே -

சத்வாரிம்சத: உத்தரே ச சரதாமப்தே விகார்யாஹ்வயே ।

மாஸேऽப்யாச்வயுஜே ஸிதாதிமதிதௌ ஸ்வாதௌ ஸ்திரே வாஸரே

தர்மாகூதமிதம் த்ரயம்பகமகீ ஸம்பூர்ணதாம் நீதவான் ॥

1000+ 6 x 100 + 41 = 1641 + 78 = 1719 A.D.

திரயம்பகமகி குறித்த பிறசெய்திகள்

திரயம்பகமகி என்பவர் கங்காதரமகியின் புதல்வர். கங்காதரமகி வெங்கோஜி, ஷாஜி, சரபோஜி ஆகியோர்களிடம் அமைச்சராய் இருந்தவர். திரயம்பகமகியும் முதல் சரபோஜி மன்னர் காலத்திய நிருசிம்மன் எனும் அமைச்சரின் தம்பி ஆவார். தர்மாகூதம் இயற்றிய திரயம்பகமகியின் மூன்றாம் தலைமுறையினர் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் வாழ்ந்தமை கீழ்க்காணும் குறிப்புகளால் அறியமுடிகிறது.

1. விருத்தமணி கோசம், சுருத பேதம் முதலிய **சந்தஸ் சாஸ்திர தொகுப்பு நூல் 1.8.1882** என்றும் தேதியில் எழுதப்பட்டதாகும். இதன் முதல்பக்கத் தலைப்பு பகுதியில் 1882/ஆகஸ்ட்/ சித்ரபானு/ அதிக சிராவண மாதம்/ 2 ஆம் நாள், (த்வீதியை திதி) என்ற குறிப்பு காணக்கிடைக்கிறது.
2. தேதி குறிப்பில்லை. **மகாகணபதி விதானம்,** சுபானு வருடம், ஆஷாட சுத்த த்வீதியை, பார்கவவாஸரே

(வெள்ளிக்கிழமை நாளில்) கும்பகோணே (கும்பகோணத்தில்) வஸதா (வசிக்கின்ற) த்ரயம்பக பண்டிதேன (திரயம்பக பண்டிதரால்) லிகிதோயம் கிரந்த: (இந்த கிரந்தமானது எழுதப்பட்டது). இங்கே கொடுக்கப்பட்ட வருடம், மாதம், நாள் ஆகியவற்றின் காலக்கணக்கின்படி இது *6.7.1883* ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.

3. **பிரம்மபிராப்தியின் பொருட்டு அந்தர்யாமி பிரார்த்தனை.**

இதன் காலம் இங்கே தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. *13.9.84 (1884)* முகாம், கும்பகோணம்.

4. **ஸ்மரணார்த்தம் - அக்ஷரதேவதைகள்**

ஒரு பக்கத்திலேயே அக்ஷரங்களுக்குண்டான தேவதை முழுமையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. எழுதியகாலத்தை ஜய ஸம்வத்ஸரம், ஜ்யேஷ்ட்ட மாதம், அமா(அமாவாசை), பௌமவார (செவ்வாய்க் கிழமை) *29.11.94* என்று குறிப்பிடப்பட்டு அடிக்கப் பெற்றுள்ளது. காலக்கணக்கின்படி இதன் சரியான காலம் *3.7.1894* என்பதில் ஐயமில்லை.

இங்கு குறிப்பிடப்பட்ட *4* குறிப்புகள் கொண்ட பக்கங்கள் மட்டும் இந்நூலில் பார்வைக்காக

இணைப்பட்டுள்ளன. கங்காதரமகி, திரயம்பக பண்டிதர் குறித்த மேலும் சில விவரங்களுக்கு தஞ்சை சரசுவதி மகால் வெளியீடான 'சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும்' நூலில் 48-59 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும். இதனால் சுமார் 135 ஆண்டுக் காலப் பழமைவாய்ந்த எழுத்துக்குறிப்புகளை நாம் காண முடிவதோடு இதனைத்தொடர்ந்து 'திரயம்பகராவ்' எனக் கையொப்பமும் இக்குறிப்பேட்டிலே தென்படுவதால் கங்காதரமகி தொடங்கி இக்குலத்தில் வருவோரனைவரும் மராத்திய பிராம்மணர்கள் என்றும் அறியமுடிகின்றது. இந்த குறிப்பேட்டின் முதல் பக்கத்தில் காணப்பெறும் 'ஸ்ரீரஸ்து. திரயம்பகராவயாஞ்சா கோச ஸங்க்ரஹ' என்கிற தலைப்பும் மற்றும் ஒரு சான்றாகின்றது.

துவாதசாஹயாஜின் - 42

இவர் சொக்கநாதமகியின் புதல்வர். இவருக்கு பாலபதஞ்லி என்ற பட்டப்பெயருண்டு. இவரது நூல் சப்தகௌமுதீ வ்யாக்யானம் (Nos.5856-57).

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இதற்கு சாப்திகரக்ஷை எனப்பெயர். சொக்கநாதமகியின் சப்த கௌமுதிக்கு உரையான இது பாண்டிய கேரளபிரதேசங்களில் பாடபோதனா முறையில் இருந்து வந்துள்ளது.

தர்மராஜர் - 23

இவர் தஞ்சாவூர் மாவட்டத்தின் மணலூரில் வாழ்ந்தவர். இவருக்கு ஷட்பாஷா சார்வபௌமர் (ஆறு மொழி அறிந்த அதிபதி) இவர் ஞானேந்திரரின் சீடர். இவரது நூல் தர்வீகர சிகாமணி பாஷ்யம் ஆகும்.

தர்மராஜாத்வரி - 16

இவர் திரிவேதி நாராயண யஜ்வாவின் சகோதரர். இவர் ந்ருசிம்மாச்ரமி மற்றும் வேலங்குடி வேங்கடநாதர் ஆகியோரின் சீடருமாவார். இவர் கண்ட்ரமாணிக்கத்தில் வாழ்ந்தவர். இவரது நூல்கள்- 1. தத்வசிந்தாமணி பிரகாச வ்யாக்யானம் (Nos.6217-30). 2. நியாயரத்னம்- நியாய சிந்தாந்த தீப வ்யாக்யானம் (No.6539). 3. யுக்தி சங்கிரஹம் (No.6576). 4. வேதாந்த பரிபாஷா (Nos.7595-99).

துண்டிவியாசர் - 87

இவர் துண்டிராஜர் என்ற மற்றொரு பெயராலும் அழைக்கப்படுகிறார். இவர் வாரணாசி மராத்திய பிராம்மணர். ஷாஜி மன்னரின் ஆதரவு பெற்ற திரயம்பக ராயரின் சீடர். இவரது தந்தை லக்ஷ்மண சுதீ என்பவர். துண்டிவியாசர் அரசபௌராணிகர். இவர் சுவாமிமலையில் வாழ்ந்து வந்தார். ஷாஹ விலாசகீதம் படைத்த இவரது காவியத் திறனை பாராட்டி அரசன் அபிநவஜயதேவர்

என்ற விருதை ஷாஜி மன்னர் வழங்கினார். இவரது நூல்கள் 1.முத்ராராக்ஷஸவ்யாக்யா (No.4475), 2. ஷஹ விலாச கீதம் (No.10957).

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

துண்டிவியாசர் என்பதில் வியாசர் என்பது குடும்பப் பெயராகவும், சுவாமிமலையில் இவர் வாழ்ந்த இடம் துந்தி என்பதாகவும் அறியப்படுகிறது. துந்திராஜர் மற்றும் வியாஸரைச் சேர்த்து துந்திராஜ வியாசர் எனவும் இவரழைக்கப்படுகிறார்.

நரஹர்யத்வரி - 98

இவர் ராமபத்ரமகியின் சமகாலத்தவரும் ஷாஜி மன்னரால் ஆதரிக்கப்பெற்றவரும் ஆவார். இவரது நூல் ஷட்தர்சனீ சித்தாந்த சங்கிரஹம் (No.7631).

இவ்வாசிரியர் குறித்த பிற செய்திகள்

இவர் ஷட்தர்சினீ சிந்தாந்த ஸங்கிரஹம் எனும் நூலின் இணையாசிரியர். சாஸ்வதப் புகழைவிரும்பும் ஷாஜி மன்னர் தமது ஸபையை அணிசெய்கின்ற அறிஞர்களான ஸ்ரீராமபத்ராத்வரி, ஸ்ரீராமநாதமகி, ஸ்ரீநரஹர்யத்வரி, ஸ்ரீபெரியப்பபுதர், ஸ்ரீவேங்கடேசர், ஸ்ரீயக்ஞேச்வரர், ஸ்ரீ ஸ்ரீநிவாஸார்யர் ஆகிய மகான்கள்

எழுவரை அன்புடன் அழைத்து, அறுவகை தர்சனங்கள் ஒவ்வொன்றும் சமுத்ரம் போல் விசாலமும் ஆழமும் செறிந்தவை. இந்த தர்சனங்களிலுள்ள கருத்துக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும். அனைத்து மனிதர்களும் அப்பயனை அடைகின்றபோது அதனால் கிடைக்கும் புகழும் நிலைத்து நிற்கும். ஆகவே எல்லோரும் இதில் சுகமாக ப்ரவேசித்து பயன்பெறும் வண்ணம் எளிமையான முறையில் அவை கூறும் கொள்கைகளைத் தொகுக்கவேண்டும் என்ற தமது விழைவைத்தெரிவித்தான். அதுவே அரசாணையும் ஆகின்றது. மன்னனின் விழைவும் சிறந்த ஆணையுமான அதனை சிரமேற்ற அவைப்புலவர்கள் பெரியோர்கள் உகக்கும்படியாக அறுவகைத் தர்சனங்களின் அரிய கொள்கைகளை அரிய முயற்சியோடு ஷட்தர்சினி ஸித்தாந்த ஸங்க்ரஹம் என்ற பெயரில் தொகுத்தளித்தான். ஆறு தர்சனங்களையும் அவை தரும் கொள்கையின் சுருக்கத்தினையும் இனி பார்ப்போம்.

ஷட்தர்சினி ஸித்தாந்த ஸங்க்ரஹம்-

தர்சனங்களில் சில, மொழியின் சொல், பொருள் இவைகளை ஆராய்கின்றன. இவைகளை வியாகரணம் அல்லது இலக்கணம் என்போம். சில, உலகத்தின் பொருள்கள், பூதங்கள், பௌதிகங்கள் இவைகளை

அலசுகின்றன. இவைகளை தர்க்கம் அல்லது நியாயம் என்போம். சில வேதங்களில் கூறப்பட்ட பொருள்களை ஆராய்கின்றன. இவைகளை மீமாம்சை என்போம். சில உபநிடதங்களையும், அதன் அடிப்படையில் வந்த பிரம்ம சூத்திரங்களையும் புகட்டுகின்றன. அவைகளை ஆன்மீகத் துறையில் செய்த ஆராய்ச்சியென்றும், வேதாந்தம் என்றும் பகர்வோம். சில இவைகளையே அடிப்படையாகக் கொண்டு யோகம், சாங்கியம் என்ற மாறுபட்ட மார்க்கங்களை வழி வகுக்கின்றன. இவைகளை சாங்கிய மென்றும் யோகமென்றும் கூறலாம். ஆக இவ்வாறு ஆறு தர்சனங்களும் வெவ்வேறு வகையில் ஆராய்ச்சி செய்து மனிதனுடைய சிந்தனா சக்தியைத் தூண்டிவிடுவதால் தர்சனம் என்பதை ஆராயச்சி நூல் என்று சுருங்கக்கூறலாம். ஆக வியாகரணம், தர்க்கம், மீமாம்சை, வேதாந்தம், சாங்கியம், யோகம் என்ற ஆறு தர்சனங்களும் உலகத்தையும் வேதத்தையும் அடிப்படையாகக்கொண்டு ஆராயப்பட்ட நூல்கள். இவை பலப்பல நூற்றாண்டு களுக்கு முன்பாகவே பாணிநி, ஜைமினி, வியாசர், கௌதமர், கபிலர், பதஞ்சலி முதலிய மகான்கள் ஈடுபட்டுத் தங்கள் தங்கள் கொள்கைகளை வெளியிட்டு உள்ளனர். கொள்கைகள் மாறுபட்டிருப்பினும் "தத்வம்" என்ற நிலை ஒன்றே.

நரசிம்ம(திம்மய) - 121

இவர் தெலுங்கு பிராம்மணர். ஸ்ரீ சுகதீர்த்தரின் சீடர். இவர் இரண்டாம் சரபோஜி மன்னரால் ஆதரிக்கப் பெற்றவர். இவரது நூல் குணரத்னாகரம் (No.5206). [ந்ருசிம்ம கவி என்றும் அழைக்கப்படுகின்ற இவர், வித்யாநாதர் பிரதாபருத்திரனைப் புகழ்ந்து தமது பிரதாபருத்ரீயம் எனும் நூலை எவ்வாறு சிறப்படையச் செய்தாரோ அவ்வாரே குணரத்னாகரம் எனும் அலங்கார சாஸ்திர கிரந்தமான இந்நூலில் இரண்டாம் சரபோஜி மன்னரின் பெருமைகளைக் குறிப்பிட்டு இந்த நூலை இயற்றியுள்ளார். பிரதாப ருத்ரீயத்திற்கு சமமான பெருமை இந்த குணரத்னாகரத்திற்கு உண்டு என்பது குறிப்பிடத் தக்கது. இதன் விளக்கத்திற்கு தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு (ஆண்டு-1990, விலை ரூ.25.00) காண்க]

நல்லாகவி - 71

இவர் கௌசிகக் குடும்ப வழி வந்தவர். இவரது இயற்பெயர் பூமிநாதர். இவர் ராமபத்ரமகியின் சீடரும் மிக நெருங்கிய உறவினரும் ஆவார். இவரது தந்தையார் பாலசந்த்ரமகி. நல்லாமகி வேங்கடேச்வர சாஸ்திரி மற்றும் ஸ்ரீதர வேங்கடேச்வர சாஸ்திரி ஆகியோரின் சமகாலத்தவர் ஆவார். மேலும் இவர் ரத்னகிரீச்வரரின் மகனான

வைத்யநாதரின் சீடருமாவார். இவரது நூல்கள் 1. தர்ம விஜயம் (No.4231), 2.சிருங்காரஸர்வஸ்வம் (No.4625), 3. பதமஞ்சரி (No.5457), சுபத்ரா பரிணயம் மற்றும் அத்வைத ரசமஞ்சரி போன்றவற்றிற்கு ஆசிரியருமாகலாம். வடமொழி நூல் வரலாற்றின் ஆசிரியர் P.No.656ஆம் பக்கத்தில் நல்லா தீக்ஷிதர் கி.பி. 17ம் நூற்றாண்டின் பிற்பகுதி 18ம் நூற்றாண்டின் முற்பகுதி. இவர் கண்ட்ர மாணிக்ய கிராமவாசி. இவரது நண்பர் வைத்யநாத தீக்ஷிதரின் விருப்பப்படி சிருங்காரஸர்வஸ்வபாணம் இயற்றினார். இது திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்க ஸ்வாமியின் வசந்தோற்சவத்தில் நடிக்கப்பட்டது என குறிப்பிடுகிறார்.

நாராயணர் - 74

தஞ்சை மராட்டிய மன்னர் ஷாஜியின் ஆதரவு பெற்ற இவர் ராமபத்ரமகியின் சீடராவார். இவரது நூல் சப்தபேதநிரூபணம் (No.5323) ஆகும்.

இந்த எண்ணில் குறிப்பிடப்பெற்ற நாராயணரைக் காட்டிலும் வேறுபட்ட நாராயண தீக்ஷிதர் ஆவார். இவர் சிவராமானந்த தீக்ஷிதரின் சீடர். இவர் வேதவேதாங்கம் மற்றும் சங்கீத நாட்டியத்திலும் புலமைபெற்றவர். இவர்

ஒருமுறை திருப்பதி சென்றார். ஆங்கே துறவறம் பூண்டு தவம் மேற்கொண்டார். போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் இவரது சீடராவார். ஒருசமயம் நாராயணதீர்த்தருக்கு தீராத வயிற்றுவலி ஏற்பட்டது. காவிரிக்கரையிலுள்ள வரகூர் விஷ்ணு ஆலயத்திற்குச் செல்ல அவரது வயிற்றுவலி நீங்கியது. இவர் பால்குணசுத்தாஷ்டமி தினம் திருப்பந்துருத்தியில் சித்தியடைந்தார். அன்றைக்குச் சரியாக மாசிமாதம் வியாழக்கிழமை சுத்தாஷ்டமி கிருத்திகா நக்ஷத்திரம் 1745AD ஆகும். கிருஷ்ணலீலா தரங்கிணி பாடிய அவருக்கு திருவையாறு தியாகராஜர் ஆராதனை போன்றே சிறப்பாக ஆராதனை விழா கொண்டாடப்படுகிறது. இவரது நூல் விவரணதீபிகா (No. 7306) தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் காணப் படுகிறது.

நாராயணர் - 86

இவர் சமரபுங்கவதீக்ஷிதரின் பெயரரும், புராணா நந்தரின் பிரம்மானந்த சரசுவதியின் சீடருமாவார். இவரது நூல் உபாஸனாப்ரயோகம் ஆகும்.

நாராயண வித்வான் - 97

இவர் ஷாஜியின் ஆச்ரயித்திலிருந்தவர். இவரது நூல் சாஹநக்ஷத்ரமாலா.

நாராயணசுதீ - 122

இவர் கோவிந்தபுரத்தில் வாழ்ந்து வந்தார். இவர் அரசில் உள்ள தர்மசபை உறுப்பினர்களுள் ஒருவர். இவரது உருவப்படம் இராஜாங்க உடையுடன் இவரியற்றிய சப்த மஞ்சரி எனும் சுவடியின் மேல் (D.No.5858/T.M.S.S.M.L. Tanjore) காணக்கிடைக்கின்றது. இந்த நூலிலும் அதைக் கண்டு நாம் மகிழலாம். இவரது நூல்கள் 1. சப்தபூஷணம் (No.5479). 2. சப்தமஞ்சரி (No.5858). 3.பாட்ட நயோத்யோதம் (No.6869).

நீலகண்டர் - 26

இவர் அப்பயதீக்ஷிதர் என்று பிரசித்திபெற்ற புலவரின் மகனாவார். இவரது நூல் அகவிவேகம்.

நீலகண்டகவி - 119

இவர் மகிஷ சதகம் இயற்றிய வாஞ்சேச்வரரின் பெயரராவர். இவரது நூல் ச்ருங்காரசதகம் (No.3966). இந்நூல் கி.பி. 1765ல் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

நீலகண்ட தீக்ஷிதர் - 44

இவர் நாராயணர் என்பவரின் 5 மகன்களுள் இரண்டாமவர். மதுரைமன்னன் திருமலைநாயக்கரின்

அமைச்சர். இவர் வேங்கடேசமகியினிடத்தில் திருவாரூரில் மீமாம்ஸம் பயின்றார். இவரது நூல்கள் 1.நளசரிதம்(No.4368), 2. கலிவிடம்பனம் (No.3924), 3. சபாரஞ்சனம்(No.3967), 4. சாந்திவிலாசம், 5. வைராக்ய சதகம், 6. ஆனந்தசாகரஸ்தவம், 7. சிவோத்கர்ஷமஞ்சரி, 8. அன்யாபதேசசதகம்(No.3838), 9. சிவலீலார்ணவம் (No.3738), 10. கங்காவதரணம் (No.3757), 11. நீலகண்ட விஜயம் (No.4052). கி.பி. 1638ல் நீலகண்டவிஜயம் எழுதப்பட்டது. இவர் கையடவ்யாகரணத்தின் உரை ஆசிரியரும் ஆவார். அப்பய தீக்ஷிதரின் சகோதரர் ஆச்சான் தீக்ஷிதர் அவரது குமாரர் நாராயணத்வரி. அவரது 2வது குமாரர் நீலகண்ட தீக்ஷிதர். இவரது தாயார் பூமிதேவி. இவரது சகோதரர் குசகுமுத்வதீய நாடகத்தை இயற்றிய அதிராத்ரயஜ்வா. நீலகண்ட தீக்ஷிதர் தமது வம்சப் பெருமையை கங்காவதரணத்தில்-

தத்ஸமானப்ரபாவஸ்ய ததனந்தரஜன்மன: ।
ஆஸீதாச்சாந்தீக்ஷிதஸ்ய புத்ரோ நாராயணாத்வரீ ॥
ஜாயந்தே தனயாஸ்தஸ்ய பஞ்ச ஸப்ராத்ருசாலின: ।
கர்பதாஸாமஹேசஸ்ய கவயச்ச விபச்சித: ॥
தேஷாமஹம் த்விதீயோ ஸ்யாம் பூமிதேவி தனூபவாம் ।
நீலகண்ட்ட இதி க்யாதிம் நீத: சம்போ: ப்ரஸாதத: ॥

நீலகண்ட தீக்ஷிதரின் சாந்திவிலாசம் 51 சுலோகங்கள் தமிழுரையுடன் வெளிவந்துள்ளது. அவற்றுள் அரிய செய்திகள் சிலவற்றைப்பார்ப்போம்.

நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் தன்னுடைய நிலையைக்கண்டு தாமே மிகவும் மனம் நொந்து தம்முடைய மனம் பக்குவம் அடையாமையையும், இந்த சரீரம் நற்காரியத்திற்கு பயன்படாமல் விளங்குவதையும், வறுமையின் நிலைப்பாட்டினையும், பெற்றோர்களை மதிக்காது தன் போக்கில் திரியும் புத்திரர்களை நினைத்து வருத்தமடைவதையும், பற்பல சாஸ்த்ரங்களை அறிந்து அதனால் ஏற்பட்ட ஞானமும் அற்புதக்கதைகளும் அரசர் களைப்புகழ்வதற்காகவன்றோ பயன்தருமாறு ஆயிற்று என்பதையும், இந்திரியங்கள் வலுவிழந்தநிலையிலும் இறைவனைநாடாமல் மருத்துவன்பால் மனம் நாடுகின்றமை யையும், வலிமைகுன்றிய உடல் ஆயினும் கட்டுக்கடங்காதமனத்தையும், செல்வத்தில் காட்டும் விச்வாசம் தர்மத்தில் காட்டுவதில்லையே என்றும், மனதைக்கட்டுக்குள் வைப்பதே சபலச்செயல்களிலிருந்து விடுதலை அடையக்காரணமென்பதையும், காமன் கணைக்கு கட்டுப்படாதார் உலகினில் ஒருவரும் இல்லை என்பதையும், சகல ஸௌபாக்யம் அனுபவிப்பதிலும் அளவு என்பது மிக முக்கியம் என்ற கருத்தினையும்

உலகியல் மக்களுக்கு சாந்திவிலாசத்தின் வழி உணர்ந்துரைக்கின்றார்.

ந்ருசிம்மாமாத்யர் - 84

இவர் பாரத்வாஜ (குடும்பத்தின்)கோத்திரத்தின் வழி வந்தவர். இவர் மராத்திய மன்னர் ஏகோஜி காலத்தில் அமைச்சராக விளங்கியவர் . இவர் ஆனந்தயஜ்வன் - ஜெயந்தி தம்பதியரின் புதல்வராகத் தோன்றியவர். இவரது நூல் திரிபுர விஜய சம்பூ (No.4036).

பெரியப்ப புதர் - 99

இவர் ஷாஜி மன்னரின் ஆஸ்தான கவிஞர். தஞ்சைக்கு அருகிலுள்ள திருவையாற்றில் இவர் வாழ்ந்து வந்தார். இவரது நூல் ஷட்தர்சினி சித்தாந்த ஸங்கிரஹம் (No.7631) ஆகும்.

பாலகவி - 19

இவர் காளஹஸ்தி கவியின் புதல்வர். பாரத்வாஜ கோத்திர வழிவந்தவர். இவர் துண்டீரமண்டலத்தில் மூலாண்டகிராமத்தில் வசித்து வந்தார். இவரது நூல் ரத்னகேதூதயம் (No.4490). ராமவர்மா தனக்கு ஆச்சிரயம் அளித்ததைக் குறிப்பிடுகிறார்.

பகவந்தராயர் - 85

இவர் ஏகோஜி மற்றும் ஷாஜி மன்னர்களிடம் அமைச்சராய் இருந்த கங்காதரரின் மூன்றாம் மகன் ஆவார். இவர் ராமபத்ரமகியின் சமகாலத்தவராய் அவருக்கு இளை யவராகவும் இருந்தார். இவரது நூல்கள் 1. முகுந்த விலாசம் (No.3719), 2. உத்தரசம்பூ(No.4028), 3. ராகவாப்யுதயம் (No.4492). கங்காதரர் என்பவர் தஞ்சாபுரி மராட்டிய மன்னர்களுள் முதல் அரசனான வெங்கோஜி (அ) ஏகோஜியிடம் மந்திரியாக விளங்கியவர். இவர் மந்திரியாக இருந்த காலம் 1676-1683. இவருக்கு நிருசிம்மாத்வரி, த்ரயம்பகாத்வரி, பகவந்தராயமகி என மூன்று புதல்வர்கள். கங்காதரருக்குப்பின் ந்ருசிம்மாத்வரி அமைச்சரானார். கி.பி. 1684-1711ல் ஷாஜி மன்னர் திரயம்பக ராயரை அமைச்சராக்கினார். திரயம்பகராயரும் தர்மாகூதம் நூலியற்றி புகழ்பெற்றார். திரயம்பகர் தன் மூத்த சகோதரனின் புதல்வர் ஆனந்தமகியை அமைச்சர் ஆக்கினார். திரயம்பகரரின் தம்பியே பகவந்தராயர் ஆவார். பகவந்தராயர் ஸ்ரீமத் பாகவதத்தின் ஸ்ரீகிருஷ்ண கதையை அடிப்படையாகக்கொண்டு 10 சர்கங்களில் முகுந்த விலாசத்தை இயற்றியுள்ளார். (தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு.ஆண்டு1996. விலை ரூ. 35) ராகவாப்யுதயம் இராமாயணக்கதையை மூலமாகக்கொண்டு ஏழு

அங்கங்களில் நாடகமாக எழுதப்பட்டுள்ளது. இதை ஸ்ரீராமபத்ரதீக்ஷிதர் விமர்சித்து அனுமதி அளித்துள்ளார். (தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு. ஆண்டு 1986. விலை ரூ. 12.50)

பட்டோஜி தீக்ஷிதர் - 22

இவர் சிறந்த வையாகரணர். தன்னை அப்பய தீக்ஷிதரின் நேரடிச் சிஷ்யர் என ஆர்பரித்துக் கூறுகிறார். இதற்கு பட்டோஜி தீக்ஷிதரின் தென்தேச யாத்திரைச் செய்தி அடிப்படையாகின்றது. அது கீழ்வருமாறு-

பட்டோஜி தீக்ஷிதர் தென்தேச யாத்திரையாக இராமேச்வரம் யாத்திரை குறிப்பிடப்படுகிறது. அது சமயம் சிதம்பரத்தில் அப்பயதீக்ஷிதர் நடத்துகின்ற இலக்கண வகுப்பைக் காண்கிறார் பட்டோஜிதீக்ஷிதர். வகுப்பில் இடம்பெறும் சொற்பொழிவின் போது அப்பய தீக்ஷிதர், இவரது குறிப்பிடத் தக்க செய்திகளின் விரிவுரை, சில கருத்துக்களின் அங்கீகாரம், சிலவற்றின் மறுப்பு முதலியவை காணப்பட்டது. பட்டோஜி தீக்ஷிதரும் ஆங்கே தாம் யாரென்று காட்டிக்கொள்ளாமல் தம்முடைய கருத்துக்கள் சிலவற்றை நியாயமானதென நிலை நாட்டினார். அப்பயதீக்ஷிதரும் தமது எதிர்வாதத்தை வைத்தார். த்வந்த்வ யுத்தம் போல் வாக்யார்த்த கோஷ்டி

நடைபெற்றது. அப்பயதீக்ஷிதரின் வாதத்தை மறுக்க பட்டோஜி தீக்ஷிதர் பெரும் முயற்சி எடுக்க வேண்டிய தாயிற்று. முடிவில் அப்பயதீக்ஷிதர் வியக்கும்படி சிரம் தாழ்த்தி வணங்கித்தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு அவரிடம் பூர்வோத்தர மீமாம்ஸா சாஸ்திரங்களை தான் அதிகரிக்க, தமது விழைவையும் தெரிவித்தார். பின் இராமேச்வரம் சென்று தனது மீசைகளைக் களைந்து பிராம்மணர் வடிவில் வர, அவரது வருகையினை எதிர் பார்த்திருந்த அப்பயதீக்ஷிதரும் இவருக்கு பூர்வோத்தர மீமாம்ஸா சாஸ்திரங்களைப் போதித்தார்.

இதேபோல் அப்பயதீக்ஷிதர் தமது வாராணாசி யாத்திரையில் பட்டோஜி தீக்ஷிதரைச் சந்தித்த செய்தியும் உள்ளது. இதனால் இவ்விருவரும் சமகாலத்தவர் என்பதும், பட்டோஜி தீக்ஷிதர் அப்பயதீக்ஷிதரைக் காட்டிலும் இளையவர் என்றும் உறுதியாகின்றது. பட்டோஜி தீக்ஷிதரின் நூல்கள்- 1. சப்தகௌஸ்துபம் (Nos.5467-78), 2. சித்தாந்தகௌமுதி (Nos.5485-5558), 3. பிரௌடமனோரமா (Nos.5559-92), 4. கிரகண சிராத்த விதி (No.11893).

இவ்வாசிரியர் குறித்த பிற செய்திகள்

17ம் நூற்றாண்டில் காசிநிவாஸி பட்டோஜி தீக்ஷிதர் சித்தாந்தகௌமுதியை இயற்றினார். இவரது வியாகரண

குரு சேஷகிருஷ்ணர். பிரக்ரியாகௌமுதிக் கொள்கைகளை மறுத்த பட்டோஜி தீக்ஷிதர் பிரௌட மனோரமாவையும் சப்தகௌஸ்துபம் பூஷணசார காரிகையும் இயற்றினார். இவரது சகோதரன் பிள்ளை கொண்டபட்டரால் பூஷணம், பூஷணசாரம் ஆகிய இரு நூல்கள் இயற்றப்பட்டன. சூரியனே பட்டோஜி தீக்ஷிதராய்ப்பிறந்து சிந்தாந்தகௌமுதியை இயற்றினார். மேலும் பட்டர்களை (வித்வான்களை) ஜயித்ததால் இவருக்கு பட்டோஜி என்ற பெயர் வந்தது. இக்கருத்தினை பவிஷ்யபுராணம்-

நாராயண: ஷோடசாத்மா பஹுமூர்திரமூர்திக: ।
இதி ஞாதம் ஹ்ருதி ப்ராப்ய ததா ஸித்தாந்தகௌமுதீம் ॥

ஜித்வா பட்டாச்சகாராசு பட்டோஜி: ப்ரச்ருதோபவத் ॥
(பவிஷ்யபுராணே 4,8,93-98)

ஜித்வா பட்டாச்சகாராசு பட்டோஜி: ப்ரச்ருதோபவத் ॥
இத்யுக்த்வா பகவான்ஸூர்யோ கத்வா ப்ருந்தாவனம் சுபம்
(பவிஷ்யபுராணே 4,8,29-30)।

என்றவாறு தெரிவிக்கிறது.

பானுஜி தீக்ஷிதர்- 27

இவர் இயற்றிய நூல் அமரகோசத்தின் உரை - சுதா(Nos.4944-59). எனப்பெயர் கொண்டதாகும். இவரது

தந்தை பிரசித்தபெற்ற பட்டோஜி தீக்ஷிதர். பானுஜிதீக்ஷிதருக்கு ராமாச்ரமின் என்ற மற்றொரு பெயருமுண்டு.

பாஸ்கர தீக்ஷிதர் - 53

இவர் கிருஷ்ணாநந்தரின் சீடர்களுள் ஒருவர். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள கோனேரிராஜபுரத்தில் வாழ்ந்தவர். இவர் உமாமகேஸ்வராசார்யரின் புதல்வரும் சிஷ்யரும் ஆவார். இவரது நூல்கள்- 1. ஸித்தாந்த ஸித்தாஞ்சனவ்யாக்யா - ரத்னதூலிகா, 2.தப்தமுத்ரா வித்ராவணம் (No.7520).

பாஸ்கரராயர் - 90

இவர் சக்தி பக்தர். சாக்த மதத்தில் தலைசிறந்தவரும் ஆவார். தெற்கே இவரது சக்தியை குறித்த ஸாம்பிரதாயிகக் கதைகள் பல உண்டு. காசி கம்பீரராயபாரதி என்பவரே இவரது தந்தை. இவர் பற்பல ஆஸ்தானங்களில் புலவாராயிருந்து இறுதியில் தஞ்சாவூர் வந்து கங்காதரவாஜபேயினிடத்தில் சில நூல்களைப் பயின்றார். சாக்த மார்கத்தில் இவருக்குள்ள அபாரப் புலமையை மெச்சி ஷாஜி மன்னர் 40 வீடுகள் கொண்ட ஒரு கிராமத்தைப் பரிசிலாக அளித்தார். அதுவே காவிரிக்கரையில் அமைந்த பாஸ்கரராயபுரம் ஆகும்.

மன்னர் அளித்த 40 வீடுகள் பாஸ்கரராயரின் சீடர்களுக்கு வழங்கப்பட்டன. இவரது சொந்த சேகரிப்புகள் இப்பொழுதும் இந்நூலகத்தை அணிசெய்கின்றன. இவரது நூல்கள்- 1. மத்வர்த்தலக்ஷணவிசாரம் (No.6996), 2.சாஹஜிபிரசஸ்தி (No.8244), 3.சாமராஜகானப்ரயோகம் (No.13956), 4. பாவனாபிரயோகவிதி (No.16161), 5.சிவதாண்டகம் (No.22776).

மலயகவி - 105

இவரது நூல் மீனாட்சிபரிணயம் (Nos.3117-18). இதற்கு மீனவிலோசனபரிணயம் என்றபெயருண்டு. இந்நூல் தருகின்ற செய்திகளின் அடிப்படையில் நீலகண்ட தீக்ஷிதரின் பெருமைகள்அறியப்படுகின்றன.இவரது காலம் 18ம்நூற்றாண்டின் முற்பகுதியாகலாம்.

மகாதேவர் - 73

இவர் ராமபத்ரமகியுடன் படித்தவர். இவரது குரு பாலகிருஷ்ணர். இவரது தந்தை கிருஷ்ணசூரி. இவரது நூல் அத்புததர்ப்பணம் (No.4534).

மேலும் இவரைப்பற்றிய பிறசெய்திகள்-

இவர் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் தஞ்சாவூர் ஜில்லா பழமார்நேரி கிராமத்தில் பிறந்து தஞ்சாவூர்

அரசனால் போற்றப் பெற்றவர். 10 அங்கங்கள் இருக்கும் இந்நூலில் ராமராவணயுத்தத்தை படம் பிடித்துக் காட்டுவதாகும். அத்புதமணி தர்பணத்தின் வழி இதனை ராமலக்ஷ்மணனுக்குக் காண்பிப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது என்பர்.

மகாதேவ வாஜபேயயாஜீ- 89

திரயம்பகாத்வரி மேற்கொள்ளுகின்ற ஒவ்வொரு வேள்வியிலும் இவர் அத்வர்யுவாகத் திகழ்வார். தொடர்ச்சியான இந்நிகழ்வுகளின் அடிப்படையில் இவர் அத்வர்யு மகாதேவவாஜபேயயாஜி என்றே அழைக்கப் படலானார். இவரது நூல்கள்- 1.போதாயன சிரௌத பிரயோகவ்ருத்தி-சிரௌத சந்திரிகா (P.No.2612). (வ.நூ.வ. போதாயன சிரௌத சூத்ரம் 30 பிரச்னங்களைப் பெற்றுள்ளது. இது 17ம் நூற்றாண்டில் இயற்றப் பட்டுள்ளது) 2. போதாயன சிரௌத சூத்ர வியாக்யா - சுபோதினி (P.No.2060).

மிருத்யுஞ்ஜயர் - 102

இவர் பிரசித்திபெற்ற ரத்னகேட ஸ்ரீநிவாஸமகியின் வழிவரும் குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தை அய்யாத்வரி என்பவர். இவர் ராஜசூடாமணி தீக்ஷிதர் மற்றும் ஆசார்யர் திப்பாத்வரி ஆகியோரின் சீடர். இவரது நூல் பிரத்யும்னோத்தர சரிதம் (No.3695) ஆகும்.

யக்ஞநாராயண தீக்ஷிதர் - 36

இவர் கோவிந்த தீக்ஷிதர் எனப் பிரசித்தி பெற்றவரின் புதல்வரும் ரகுநாத நாயக்கரின் சீடருமாவார். இவர் ரகுநாத நாயக்கரின் ஆச்ரயித்திலிருந்து கோவிந்த தீக்ஷிதரான தன் தந்தைக்குப் பிறகு அமைச்சராக விளங்கியவர். இவரது நூல்கள் 1. சாஹித்ய ரத்னாகரம் (No.4221), 2.அலங்கார ரத்னாகரம் (No.5131), 3. ரகுநாத விலாச நாடகம் (No.4487) போன்றவை. மேலும் இவர் ரகுநாதபூப விஜயத்தின் ஆசிரியரும் ஆவார். அலங்கார ரத்னாகரம் என்பது ரகுநாதநாயக்கரைப் பற்றிய சுலோகங்களை எடுத்துக்காட்டுகளாக அமைத்து பிரதாப ருத்ரீயத்தை ஒட்டி இயற்றப்பட்டிருக்கிறது என வடமொழி நூல் வரலாறு தெரிவிக்கின்றது.

யக்ஞேச்வர தீக்ஷிதர் - 124

இவருக்கு பாலாதீக்ஷிதர் என்ற மாற்றுப் பெயருண்டு. இவர் ஷாஹராஜபுரத்தில் வசித்த விச்வபதியின் பெயரும் சுப்ரமண்யரின் புதல்வருமாவார். சரபோஜி (II) மன்னரால் ஆதரிக்கப்பெற்று, இவர் சிவாஜி (II) மன்னரின் காலத்தில் தலைமைப் பண்டிதராகவும் விளங்கினார். இவரது நூல் போதாயன சிரௌத சூத்ர வியாக்யானம் (No. 2058) ஆகும்.

யக்ஞேச்வராத்வரி - 101

இவர் ராமபத்ரமகியின் சமகாலத்தவர்களுள் ஒருவர். இவர் ஷட்தர்சினி சித்தாந்த சங்கிரஹம் (No. 7631) என்னும் நூலின் இணை ஆசிரியர்.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

யக்ஞேச்வரரும் வேங்கடேச்வரரும் குறிப்பிடத் தக்க பண்டிதர்கள் ஆவர். இவ்விருவரும் முறையே தந்தையும் புதல்வரும் ஆவர். யக்ஞேச்வரர் குறிப்பினை சித்ரபந்த ராமாயணத்தின் 37வது கங்கண பந்தம் -

ஷட்தர்சனீ தத்வவித: கவீந்த்ரா: -
லக்ஷ்ம்யாத்ருதா பஹ்வ்ருச ஸார்வபௌமா: ।
ஸ்ரீயக்ஞநாராயணபட்டஸம்ஞா:
யாந்தி பூமௌ தாதபாதா: .... ॥

என்கிற சுலோகத்தால் அறிய முடிகிறது. வேங்கடேச்வரர் குறிப்பு சித்ரபந்த இராமாயணத்தின் இறுதியடியில் காணக்கிடைக்கிறது. வேங்கடேச்வரர் ஆந்திர மாநிலம், குண்டூர் மாவட்டம், சேருகூரைச் சேர்ந்தவர். ஆதலால் இவர் சேருகூரி குடும்பத்தினரும் கொண்டு பட்டோபாத்யாயரின் பௌத்திரரும் ஸர்வாம்பிகை மற்றும் யக்ஞநாராயண பட்டரின் புதல்வரும் ஆவார். இவரது சித்ரபந்தராமாயணம் (No. 3772) சித்ரபந்த வகைச் செய்யுட்களை அடிப்படையாகக்கொண்டது. இதில் ஆறு

சர்கங்கள் உள்ளன. வேங்கடேச்வரரின் சித்ரபந்த ராமாயணத்திற்கு இவரது தந்தை யக்ஞநாராயணபட்டர் பாலபோதம் (Nos. 3774-75) என்றதொரு உரையைச் செய்திருக்கின்றார். புதல்வர் இயற்றிய காவியத்திற்கு தந்தை உரையெழுதியிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

ரகுநாதநாயக்கர் - 35

இவர் நாயக்க மன்னர்களுள் முக்கியமான அரசப்பெருந்தகை ஆவார். இவரும் சிறந்த அறிஞராதலால் அறிஞர்களுக்கு இவரது காலத்தில் சிறந்த மரியாதை இருந்தது. அவர்களுக்கு ஆச்ரயமளித்ததால் யாரொருவரும் பட்டினியால் வாடினர் எனக் கூற முடியாது. இவருக்கு மந்திரியாக கோவிந்த தீக்ஷிதர் தமது பணியைத் தொடர்ந்தார். தஞ்சாவூர் இராஜ்யம் ஒரு சிற்றரசாக ஆட்சி செலுத்தும் போதும் அதற்கிணையான அபிவிருத்தியைப் பெற்றிருந்தது. ரகுநாதநாயக்கரின் நூல்கள் - 1. ராமாயண ஸார ஸங்கிரஹம் (Nos. 9467-69), 2.பாரத ஸார ஸங்கிரஹம் (No. 8676) ஆகியன. ஸ்ரீபாரிஜாதஹரணம், நளாப்யுதயம், அச்யுதாப்யுதயம் ஆகியவற்றிற்கும் இவர் ஆசிரியராவார். தெலுங்கில் வால்மீகி சரித்ரம் முதலியவற்றை இயற்றியுள்ளார். சிறந்த பல மதிப்பு மிகு அறிஞர்களும் இந்த காலகட்டத்தில் போற்றப்பட்டவராயினர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கோவிந்த தீக்ஷிதர், யக்ஞநாராயண தீக்ஷிதர், வேங்கடேச்வர தீக்ஷிதர்,

ராஜசூடாமணி தீக்ஷிதர், குமாரதாத்தாச்சாரியர், பாஸ்கர தீக்ஷிதர் போன்றோராவர்.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இவர் ஸ்ரீராமசந்திரனின் குளிர்ந்த கருணைக்கு இலக்கானவர். தங்குதடையற்ற பேச்சாற்றலும், இலக்கியவளம் செறிந்த குலத்தில் தாமரை போன்றும் உதித்தவர். உண்மையையே அணியாகக் கொண்ட முகத்தாமரையைப் பெற்றவர். வெற்றிவாகையையே பலமாகக்கொண்ட வீரர். தினமும் பொழியக்கூடிய நீருண்டமேகம். வறியவர்களுக்காக ஆங்காங்கே அன்னசத்திரம் கட்டி மகிழ்ந்தவர். நிலத்தேவர்களுக்கு (பிராம்மணர்களுக்கு) உயர்ந்த பசுமாடுகளைத் தானமளித்த பெருமை பெற்றவர். அத்தகைய கீர்த்தியால் விளங்குவதோடு களங்கமற்ற தன்பெயரால் பற்பல அக்ரஹாரங்களையும் தோற்றுவித்தவர். சோழமண்டலாதிபதியாக அனைத்து யோகங் களையும் துய்ப்பவர். இந்திரனையொத்த பராக்ரமசாலியாய் கர்னாடகம், நேபாளம் போன்ற சுற்றுபுறமமைந்த தேசத்து மன்னர்களால் வணங்கப்பட்டவர். ராமபக்தியின் மிகுதியால் திருவரங்கம், விஜயராகவபுரம் (வடுவூர்) கும்பகோணம் முதலான திவ்ய ஸ்தலங்களில் ராமருக்கு ஆலயம் எடுத்தவர். கடல்கடந்து பிறநாடுகளையும் தனது

காம்பீர்யத்தால் வென்றவர். அண்டியவர்களை எப்போதும் காக்கும் விரதம் பூண்டவர். ராஜாதிராஜர்களால் வணங்கப்பட்ட தக்ஷிண ஸிம்மாஸனாத்யக்ஷர். தம்முடைய சிறந்த பராக்ரமத்தால் திசையெங்கும் பரந்த உதார குணத்தை உடையவர். எப்போதுமே நல்ல பல அறிஞர்களால் சூழப்பட்டவர். தன்னுடைய குணத்தையே சிறந்த பலமாகக்கொண்டு சுற்றியுள்ள தேசங்களை கைப்பற்றி அவர்களை விடுவித்த அனைவரும் மெச்சத்தக்க தோள்வலிமை பெற்றவர். மூர்த்தியம்பாவின் கருவாகிய சிப்பியுள் முளைத்தெழுந்த முத்துபோன்றவர். சின்னசெவ்வாச்சுத பூபனின் புதல்வர். நற்ஜனங்களால் துதிக்கப்படுபவர். அழகில் மன்மதனைப் போன்றவர். இரகுநாத நாயக்கரின் இத்தகைய பெருமைகள் பாரதசாரஸங்கிரஹம் (B.11897/D.No.8676) என்னும் சுவடிநூல் நமக்குத் தெரிவிக்கின்றது.

ரகுநாத பண்டிதர் - 107

இவர் பெரும்பாலும் ஜகந்நாத பண்டிதரின் தந்தையாவார். இவர் சரபோஜியின் தாயான தீபாம்பாளால் ஆதரிக்கப்பட்டவர். மராத்தி மொழியில் இவர் நரகவர்ணனம் என்ற நூலைப் படைத்துள்ளார். அதில் தன்னுடைய சம்ஸ்க்ருத மராத்தி மொழிப் படைப்புகளின் பட்டியலைத் தந்துள்ளார். இவரது ஸம்ஸ்க்ருத நூல்கள்-

போஜன குதூஹலம், பிராயச்சித்த குதூஹலம், சிரௌத ஸ்மார்த்த ப்ரயோகம், தர்மாமிருத மகோததி மற்றும் காசீ மீமாம்சா போன்றவை ஆகும். அவற்றுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் இடம் பெற்றவை 1. பிராயச்சித்த குதூஹலம் (Nos. 2654 & 18798), 2. போஜன குதூஹலம் (No.11238) ஆகும்.

இதைப்போலவே சாஹித்ய குதூஹலம் என்ற நூலில் இவர் மராட்டிய மன்னர்களின் வரலாற்றினை 120 சித்திரங்களுடன் (வண்ணப்படங்களுடன்) விவரித்திருக் கின்றார். தற்பொழுது அது அழிந்துவிட்டது.

போஜனகுதூஹலமும் இவ்வாசிரியரின் பிறநூல்களும்

உணவுப்பொருள்கள் ஒன்றோடொன்று சேர்ந்தால் பயக்கும் நன்மை தீமைகளைப் பற்றியும், சில பாத்திரங்கள் வைக்கப்படுவதற்கேற்ப அதன் தன்மை மாறுபடுவது பற்றியும், நஞ்சு உணவினை அறிதல் நஞ்சு கொடுப்போர் தோற்றம் பற்றிக்கூறுதல் ஆகியன நூலின் சிறப்பாகும். மேலும் ரகுநாத பண்டிதரின் ஸாஹித்ய குதூஹலத்தில் சித்ரகாவிய செய்யுட்களும், பிராயச்சித்த குதூஹலத்தில் இறுதிச்சடங்குகள் பற்றியும், ஜனார்தன மகோதயத்தில் வைணவ சமயாசாரமும், வழிபாட்டு முறைகளும் தர்மாமிருத மகோததியில் சமூக சமய

நியதிகளும் பழக்கவழக்கங்களும், பிரயோகரத்ன பூஷாவில் வைதிக கார்யங்களும், சாதுர்மாஸ்ய பிரயோகத்தில் சாதுர்மாஸ்யம் குறித்தும் விவரிக்கப் பட்டுள்ளன. பிரயோகரத்னபூஷா நூலின் முடிவில் ரகுநாத பண்டிதர் தன் தந்தையார் கணேச பட்டர் என்றும் பாட்டனார் ரகுநாதர் என்றும் குறிப்பிட்டுள்ளார். (போஜன குதூஹலம்- சக்ரவர்த்தி ராகவன், மன்னார்குடி, தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, ஆண்டு-2014, விலை. ரூ. 250-00)

ரங்கநாத தீக்ஷிதர் - 72

இவர் நாராயண தீக்ஷிதரின் புதல்வர். நல்லா தீக்ஷிதரின் பெயரர். நாராயண தீக்ஷிதரின் கொள்ளுப் பெயரர். ரங்கநாத தீக்ஷிதரின் தாய்வழி மாமா சதுர்வேதி தீக்ஷிதர் எனப் பிரசித்தி பெற்றவர். ரங்கநாத தீக்ஷிதரின் நூல் மஞ்சரீ மகரந்தம் (No. 5466) ஆகும். இவர் ராமபத்ர தீக்ஷிதரின் உறவினரும் ஆவார்.

ரங்கராஜாத்வரி - 3

இவர் விவரண தர்ப்பணம் (No. 7064) என்னும் நூலாசிரியராவார். இவர் பிரசித்தி பெற்ற அப்பய தீக்ஷிதரின் தந்தை.இவர் கி.பி.1528ல் காதியின் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பொம்மன் எனும் அரசனின் அவைப்புலவர்.

ரங்கராமானுஜர் - 77

இவரது நூல் 1. தைத்திரீயோபநிஷத் பிரகாசிகை (Nos. 1674-75) 2. பிருகதாரண்யகோபநிஷத் பிரகாசிகை (Nos. 1676-77). இவர் லக்ஷ்மண யோகீந்த்ரரின் சீடர். இவர் பெரும்பாலும் ஸ்ரீவைஷ்ணவத்தின் தாத்தாச்சாரியார் குடும்பத்திலிருந்து வந்திருப்பார் என்பது நம்பிக்கை. ரங்கராமானுஜர் பதினேழாம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் காஞ்சீபுரத்தில் வசித்து வந்தார். இவர் 64 நூல்களை இயற்றியுள்ளார். இவற்றுள் உபநிஷத் பாஷ்யமும், பிரம்மசூத்ர உரையான சாரீரக சாஸ்த்ரார்த்த தீபிகையும் சிறந்தனவாகும்.

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இவர் வட ஆற்காடு மாவட்டத்தில் வேலாமூர் என்னும் ஸ்ரீ கிராமத்தில் பிறந்தவர். அனந்தாசாரியரின் சீடர். இவர் இல்லறம் நாடாது மைசூர் பரகாலமடம் ஸ்வாமிகளிடத்தில் ஸந்யாஸம் மேற்கொண்டார். இவர் அறுபது நூல்களை இயற்றியுள்ளார். பாராசர்யவிஜயம் இயற்றிய தொட்டாயாச்சார்யரை சந்தித்து உரையாடியது. உபநிஷத்தில் பொதிந்துள்ள கடவுள் தத்துவத்தை தேனாக உருவகித்து இவர்கள் உரையாடிய திறம் இது-

தொ. : நீர் மதுவை பருகுவதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளீர்.

ரங்க.: தாங்கள் தேனீக்களை விரட்டியுள்ளீர். நான் அமைதியுடன் தேனைப் பருகுவேன் என்றார்.

தேனீக்கள் என்பது பிறமதத்தினரையும், முரண்பட்ட கருத்துக்களையும், பொருள் கூறுபவரையும் குறிக்கிறது. மேலும் இவரது நூல்களாக- சாரீரக சாஸ்த்த்ரார்த்த தீபிகா, மூலபாவபிரகாசிகை (ஸ்ரீபாஷ்ய விளக்கவுரை), பாவப்ரகாசிகா, சுருதப்ரகாசிகைக்கு விளக்கவுரை, விஷயவாக்யதீபிகா போன்றவை அறியப்படுகின்றன.

ரத்னகேடஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் - 8

ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் அல்லது ஸ்ரீநிவாஸாத்வரி பாஷ்யகார பாவஸ்வாமியினுடைய பரம்பரையில் நான்காவது தலைமுறையினரான பாவஸ்வாமி பட்டரின் குடும்பத்தில் தோன்றினார். இவரது வம்ச பரம்பரை பாவனாபுருஷோத்தம நாடக முன்னுரையில் முழுமை யாகக் கொடுக்கப்பட்டுள்ளது (No. 4427). இதிலிருந்து நாம் கற்பது என்னவெனில் இவர் சோழ தேசத்தரசன் செஞ்சி சூரப்பநாயக்கரிடம் அவைப் புலவராக விளங்கியவர் என்று. இதனால் இவரது சொந்த ஊர் தொண்டை

மண்டலத்திலுள்ள சூரசமுத்திரம் ஆகும். ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர், ரத்னகேடதீக்ஷிதர், ரத்னகேட ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் என்றவாறெல்லாம் இவர் அழைக்கப்பட்டார். வீரராகவ கவி என்பவர் இவ்விருவர்களின் சமகாலத்தை கீழ்க் காணும் செய்யுளின் மூலம் குறிப்பிடுகிறார்★.

ஸரத்னகேடதீக்ஷிதோ ऽபி யேன வாத நிரஜித:
நிவாரித: பராம்பயா விவாதகேளி தீக்ஷித: ।
ஸுதா மதாத்ஸுமங்களா மமா ச பூர்ணிமா க்ருதா-
புதேன யேன ஸர்வமங்களா பிரஸாதவைபவாத் ॥

இவ்வாறு கீழ்க்காணும் நிகழ்ச்சிக்கு ஸங்கேதக் குறிப்பு ஒன்றுள்ளது. அப்பய தீக்ஷிதர் தீவிரமான தேவி பக்தர். ஒரு வெள்ளிக்கிழமைக் காலைப்பொழுதில் அவரது இஷ்ட தெய்வமான தேவி ஒரு பாத்திரத்தில் மதுவை வைத்துக்கொண்டு வெளியில் நடந்து கொண்டிருந்தாள். அந்த காட்சியினை ரத்னகேடதீக்ஷிதர், அப்பயதீக்ஷிதருடைய சக்தி தேவதை சாக்த மதத்தினுடைய போலியான தோற்றத்தை ஒழிக்கும் வகையில் விளக்க ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பதாய் அறிந்தார். ஆகையால் ரத்னகேடர் அப்பயதீக்ஷிதரை விளித்து, உபசாரத்துடன் நாள் திதியினைக் குறித்துக்கேட்டார். அதற்கு அவர் சிறிதும் கோபம் கொள்ளாமல் அமாவாசையாயினும்

பௌர்ணமி என்று சம்ஞையாலுரைத்தார். இந்த தந்திரமான விவாதத்திலிருந்து ரத்னகேடர் தாம் விலகிக்கொள்ளவும் விரும்பினார். அப்பயதீக்ஷிதரும் தேவிபக்தியால் அந்நாளை பௌர்ணமியாகவே நிலைநாட்டினார். ரத்னகேடரும் அவரது நண்பர்களும் இந்த அதிசயம் அப்பயதீக்ஷிதருடையது எனவறிந்தனர். ரத்னகேட தீக்ஷிதரும் மதிப்புடைய பல நூல்களை இயற்றினார். ரத்னகேடரின் மகனாக பாலயக்ஞ வேதேச்வரரும் ராஜசூடாமணி தீக்ஷிதரின் ருக்மிணி பரிணயத்திற்கு உரை எழுதினார். தொல்பொருள் ஆய்வுத்துறையின் அறிக்கை ரத்னகேட தீக்ஷிதர் தஞ்சை மன்னர்கள் அச்சுதப்பன் மற்றும் இரகுநாதனால் ஆதரிக்கப்பட்டதை எடுத்துரைக்கின்றது. இவரது நூல்கள்- 1. சிதிகண்ட்ட விஜய காவியம், 2. பாவனா புருஷோத்தம நாடகம், 3. அத்வைதாஸ்ரவ கௌஸ்துபம், 4.வாத தாராவளீ, 5. மத்வத்வம்ஸனம், 6. பௌத்ததந்த்ரமதனம், 7. வேதாந்த வாதாவளீ, 8.மணிதர்ப்பணம், 9. ஸமய ஸர்வஸ்வம், 10. விதிநிர்ணயம், 11. ரத்னதீபம்.

பாவனாபுருஷோத்தமமும் இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகளும்

பாவனாபுருஷோத்தமநாடகம்- ஸ்ரீகிருஷ்ண பகவான் அருளிச் செய்த பகவத்கீதையை அடியொற்றி

அமைந்த இந்த நாடகத்தில் பாவனை என்பவள் நாயிகை. புருஷோத்தமனான பரவாசுதேவன் ஸ்ரீமன் நாராயணனே நாயகன். இந்த நாடகத்தில் ஜீவதேவன் வைகுண்ட்ட பதியான புருஷோத்தமனை அடைவதற்கு பிரயத்னப்பட்ட போதிலும் வருகின்ற அவர் பல்வேறு பாஷண்ட மதத்தை ஆச்ரயித்துள்ளவர்களால் கலங்கிய மனதுடையவனாக விளங்குகின்றான். பாக்கியத்தாலும் யோக மகிமையாலும், ஆசார்ய கருணையால் ஏற்பட்ட பக்தியாலும், குருவாக்காகிற உபதேசத்தாலும் ஜீவதேவன் சஞ்சலமற்ற புத்தியை அடைந்து புருஷோத்தமன் ஒருவனே ஜகதீச்வரன் என்று நிச்சயித்து அந்த ஜகதீச்வரனான புருஷோத்தமனின் பொருட்டு தியானரூபையின் கன்யையான பாவனையை கன்யாதானம் எனும் வியாஜத்தால் அர்ப்பணித்து அவரிடம் ஸர்வபாரத்தையும் வைத்துவிட்டவராய் மற்ற அனைத்துச் சிந்தையும் ஒழித்தவராய் ஆனார். மாப்பிள்ளையான புருஷோத்தமன் மாமனார் ஜீவதேவனை விவேக ஸாம்ராஜ்யம் என்கிற ஆஸனத்தில் அமர்த்தி புனித நன்னீராட்டி அர்ச்சிராதி மார்கத்தாலே இருளாகிற கடலைக் கடந்து கறையேறி எனதிருப்பிடம் மேவி இடைவிடாது ஆனந்தத்தில் மூழ்கியவராய் எப்படி ஆவரோ அப்படி அவனைச் செய்தார் என்கிறது இந்நாடகம். (தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு-167/ஆண்டு 1971- விலை-ரூ.60)

அன்யோயன்ய ஸமரலீலாலஸபூர்வபராத்ரி சூராப்யாம் ।
த்ருதரத்னகேட சங்காம் தன்வதே ஸுமுகி புஷ்பவத்
பிம்பௌ ॥ (பாவனா புருஷோத்தம நாடகம்- 4வது அங்கம்)

"இதி திவாகர நிசாகரபிம்பயோ ரத்னகேடத்வ வர்ணனாதஸ்ய ரத்னகேட ஶ்ரீநிவாஸாத்வரீதி ப்ரதீயஸி பிரதேதி ச்ரூயதே" என்று ஸந்த்யா ஸமயத்தை வர்ணித்து ரத்னகேடம் என்னும் விருதைப் பெற்றான். சூரப்ப நாயகனின் வேண்டுகோளின்படி ரத்னகேட தீக்ஷிதரால் பாவனா புருஷோத்தமம் என்கிற நாடகம் எழுதப்பட்டது. அஸ்யைவ சூரப்பநாயகஸ்ய சமயம் அனுருந்தானோ ரத்னகேடதீக்ஷிதோ பாவனா புருஷோத்தம நாடகம் அகார்ஷீத் நாடகஸ்யாவஸானே பத்யமிதம் த்ருச்யதே யதா-

ஸர்வதாரி ஸமே மீனமாஸே ராகாதிதாவிதும் ।
உத்தரர்க்ஷே ரவிதினே ஸமாப்தம் நாடகம் பரம் ॥

இதனால் இப்பிரபந்தம் உண்டான காலம் 1588 ஆம் ஆண்டு என்றிருப்பதால் ரத்னகேட தீக்ஷிதர் 17ம் நூற்றாண்டின் முன்பாதியில் தோன்றியவர் என்பது ஸ்பஷ்டம். இவர் அப்பய தீக்ஷிதர் மற்றும் கோவிந்த தீக்ஷிதரின் சமகாலத்தவர். இவருடைய பிருதங்கள்- 1.ஷட்பாஷாசதுரர், 2. அத்வைத வித்யாசார்யர், 3.

அபிநவபவபூதி:, 4.தந்தத்யோதி திவாப்ரதீபம் (வெண்பல்போல் விளங்கும் பகல் விளக்கு) இவர் வேதாந்தம் மற்றும் இதர சாஸ்திர கிரந்தங்கள் எழுதியிருப்பதோடு 18 நாடகங்கள், 60 காவ்யங்களையும் எழுதியுள்ளார்.

இவரது வம்சாவளி-

ய: ஷஷ்டோ பாஷ்யகர்து: க்ரதுவரமஹித ஸ்ரீபவஸ்வாமி
யஷ்டு: ஸ்ரீக்ருஷ்ணார்யஸ்ய தைநந்திநக்ருதின: ஸோமப:
பஞ்சமோ ய: |ஸப்தாயோத்வைதசிந்தாமணி விரசயிது:
பௌண்டரீகாதி யஷ்டு: ஸர்வஞாது: குமாராஹ்வயமிலித
பவஸ்வாமி யஜ்வாபிதஸ்ய ||

ஸ்ரீக்ருஷ்ணார்யஸ்ய பௌத்ர: ப்ரதிதிவஸ விச்ராந்த
மன்னப்ரதாது: ஜ்யோதிஷ்ட்டோமாதி யஷ்டுர்
விவிதக்ருதிக்ருத: ஸர்வவித்யாதிகஸ்ய |
ய: ஸ்ரீவைகுண்டகண்டாமணிரிதி மஹித: ஸ்ரீபவஸ்வாமி
பட்ட: ஸ்யாத்வைதஞானதூதாகில கலுஷகணஸ்யாத்மஜ:
ஸ்வாத்மவேது: || என்பதைஸங்க்ரஹித்தால்-

1. ஸ்ரீபவஸ்வாமீ (பாஷ்யகாரர்)
2. ஸ்ரீக்ருஷ்ணார்ய: (ஆன்னிகம் இயற்றியவர்)
3. குமாரஸ்வாமி (அத்வைதசிந்தாமணிகார:)
4. ஸ்ரீக்ருஷ்ணார்ய:
5. ஸ்ரீபவஸ்வாமி பட்ட:

6. ஸ்ரீரத்நகேடஸ்ரீநிவாஸாத்வரீ என்ற வம்சாவளி ஸித்தமாகிறது.

ஸந்த்யா ஸந்துக்ஷிதாம்போதர நலிகணாதுத்கதா
நேஸகண்டாம்ஸ்தாராகாரா நிரோத்தும் சசிரவி
கபடாத்விப்ரதோ ரத்னகேடௌ। அன்யோன்யம்
யுத்யமானாப்யுதயசரமபூப்ருத்ப்ரவீரா விதித்ரா
குகத்யா க்யாதாபராக்ய:க்ஷிதிபதி ச வஸா
ரத்னகேடாத்வரீதி ॥

என்று ஸந்த்யா வர்ணனையைப் புரிந்த சமத்காரத்தைக் கண்டு மகிழ்ந்த அரசன் இவரை ரத்னகேடாத்வரீ என்று அழைத்ததாகச் சொல்லப்பட்டது.

அத்வைதாஸ்ரவகோஸ்துபம் வ்யரசயத்யோ வாததாராவளீ
மத்வத்வம்ஸந பௌத்தந்த்ரமதனே வேதாந்தவாதாவளீம் ।
ப்ரக்யாதம் மணிதர்பணம் ஸமயஸர்வஸ்வம் விதீநிர்ணயம்
தத்வானாம் பரிசுத்தி போதவிமலம் ரத்னப்ரதீபம் ஸ்ம்ருதே: ॥

யோ பாவனாபுருஷவர்ய முகான்யகார்ஷீத்
அஷ்டாதசாபி ச தசாத்புதரூபகாணி ।
பாவோத்தராணி சிதிகண்டஜயாதிமானி
காவ்யானி ஷஷ்டிமதனோதம்ருதாயிதானி ॥

த்வன்யத்வன்யமனோ வினோதநிபுணா: ஸாஹித்ய ஸஞ்ஜீவினீ
பாவோத்போதஸ் ஸாஸ்த்ரவாதி க்ருதய: பாரேசதம் யத்க்ருதா: ।

அன்யே க்ஷேத்ரராத்ரஸுந்தரகிர: க்ஷுத்ரப்ரபந்தா: சதம்

சந்தோஜ்யோதிஷமந்த்ரதந்த்ரவிஷயா பாஷாப்ரபந்தாஸ்ததா ||

அன்யாச்ச யஸ்ய க்ருதயோ நிகிலாகமாந்த

ஸித்தாந்திதாந்தர நிரந்தர ஸூக்திகும்பா: |

ஷடதர்சினீ ஸகலமர்மவிவேககர்ம

கர்மக்ஷயா: ஸுக்ருதினாம் முதமாவஹந்தி ||

★**வீரராகவகவி** இங்கே குறிப்பிடப்பெறும் வீரராகவகவி ரத்னகேட ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் மற்றும் அப்பய தீக்ஷிதர்களின் சமகால முறைக்கும் வீரராகவகவியைக் காட்டிலும் வேறுபட்டவர். இவர் பிரதாபசிம்மன் காலத்தவர். நெல்லூர் வீரராகவகவியான இவர் *விசேஷண ராமாயணம்* (Nos. 3737) என்ற நூலைப்படைத்துள்ளார். மேலும் இக்கவி குறித்த செய்திகள் கீழே கொடுக்கப் படுகின்றன.

ஸ்ரீமத்காச்யபகோத்ர பூத மஹிதாபஸ்தம்ப சூத்ரஸ்ய ச

ஸ்ரீமந்நெல்லூர் ரங்கமந்த்ரிசுதிய: பௌத்ரஸ்ய வித்யாநிதே: |

ஸ்ரீமத்பூஜித வீணவேங்கடபதே: புத்ரஸ்ய ராமாயணம்

காவ்யம் ஸ்வீகுரு வீரராகவகவே: ஸ்ரீராம மே வாங்மயம் ||

ஸ்ரீராமாங்க்ரீ ஸரோருஹாங்கிதமிதம் ஸ்ரீராகவாக்யாவதா-

ப்ரோக்தம் சாருதரம் *விசேஷண மஹாராமாயணம்* பாவனம் |

ஸ்ரீமச்சாடு கதாசுகாவ்யரசனா சாதுர்யவாக் வைகரீ-

ஸ்ரீவைசித்ர்ய துரந்தரேண கவினாசந்த்ரார்கதாரம் வஸேத் ||

விசேஷண ராமாயணம் : இக்காவியம் வால்மீகி இராமாயணத்தினைப் போன்று பால, அயோத்யா, ஆரண்ய, கிஷ்கிந்தா, சுந்தர, யுத்தோத்தர காண்டங்களைப் பெற்றுள்ளது. இதில் பாலகாண்ட சுலோகங்கள் முதல்வேற்றுமையிலும் மற்ற பிற காண்ட சுலோகங்கள் முறையே 2,3,4,5,6,7 ஆகிய வேற்றுமைகளிலும் அமைந்து விளங்குகின்றன. எழுவகை வேற்றுமைச் சொற்களுக்கு விசேஷணமாக இராமாயணத்தின் அந்தந்த காண்டக்கதைகளைப் பொருத்தி அமைக்கப் பெற்ற படைப்பு வியப்பிற்குரியதும் விசேஷமானதுமாகும்.

ராஜசூடாமணி தீக்ஷிதர் - 43

இவர் காமாக்ஷி மற்றும் ரத்னகேடஸ்ரீநிவாஸ தீக்ஷிததம்பதிக்கு புதல்வராய்த் தோன்றியவர். இவரது பாட்டனார் லக்ஷ்மீவல்லபர். இவரது கொள்ளுப் பாட்டனார் விச்வாமித்ர கோத்திரத்தில் வந்த கிருஷ்ண பட்டர். இவர் அர்த்தநாரீச்வரர்* மற்றும் வேங்கடேச்வர மகியின் சீடராவார். இவரியற்றிய நூல்கள்-

1. ந்யாயகர்ப்பூரவார்த்திகம் (No. 6921). ராஜசூடாமணி தீக்ஷிதர் முன்னுரையிலேயே வேங்கடேச்வர தீக்ஷிதர் தமது குரு என்றும், குருவின் பெற்றோர்கள் கோவிந்தயஜ்வா மற்றும் நாகாம்பா என்பதனையும் குறிப்பிடுகின்றார். மேலும் ராஜசூடாமணி தீக்ஷிதர்

இந்நூல் இயற்றப்பட்ட காலத்தினையும்சகம் 1559 (+78=1637AD) ஈச்வர வருடம், ஆவணி (சிராவண) மாதம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

2. தந்த்ர சிகாமணி (No. 6841). இது ஜைமினி இயற்றிய மீமாம்ஸா சூத்திரத்திற்கு விரிவுரையாகும். இதற்கு தந்த்ரரத்னசாரம் என்ற மற்றொரு பெயரும் உண்டு.
3. காவ்யதர்ப்பணம் (No. 5152).
4. கமலினீ கலஹம்சம் (No. 4648).
5. ராமாயணசம்பூ (No. 4139).

மேலும் சில நூல்களான சங்கர்ஷ ந்யாயமுக்தாவளி, தத்வசிந்தாமணி உரை, மணி தர்ப்பணம், ருக்மிணி கல்யாணம், ஆனந்தராகவம் போன்றவற்றிற்கு இவர் ஆசிரியருமாவார். இவையனைத்தும் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் கிடைக்கின்றன.

இவ்வாசிரியர் குறித்த மேலும் சில செய்திகள்

இவரது தமயனார் அர்த்தநாரீச்வரர். இவர் கி.பி. 1600ல் காவியதர்ப்பணம் இயற்றினார். இவரது கமலினீ கலஹம்சத்தில் 4 அங்கங்கள் உள்ளன. சிதம்பரத்தில் கோவிந்தராஜப்பெருமாளை ரகுநாதநாயக்கர் தரிசிக்க வந்தபோது ஆங்கே கமலினீ கலஹம்சம் எனும் இந்த நாடிகை நடிக்கப்பட்டது. இது ராஜசூடாமணி தீக்ஷிதரின்

7வது வயதில் எழுதப்பெற்றது. கமலினீ என்ற நாயிகைக்கும் கலஹம்ஸம் என்ற நாயகனுக்கும் நிகழும் திருமணத்தை அடிப்படையாகக்கொண்டு இயற்றப் பெற்றதால் இந்நூல் இப்பெயர் பெற்றுள்ளது. மேலும் இவரது நூல்களாக சுபோதினி, சூதசாரங்கள் அறியப் படுகின்றன. ருக்மிணி கல்யாணம் 10 சர்கங்களைக் கொண்டது. சிருங்காரச்சுவையை அங்கியாகக் கொண்ட இந்நூலின் இரண்டு சர்கங்கள் வெளிவந்துள்ளன. ராஜசூடாமணி தீக்ஷிதர் ஆறு மொழிகளில் வல்லவர்

போஜேன ராமசரிதம் க்ரதிதம் நிசைகைகயா ।
ஏகேன பூரயத்யஹ்னா ஸ்ரீசூடாமணி தீக்ஷித: ॥

இவர் தமது காவ்யதர்ப்பணத்தின் இறுதியடியில்-

இதி ஸ்ரீதந்தித்யோதி திவாப்ரதீபாங்க ஸாக்னிசித் விச்வஜித்ததிராத்ரயாஜி ஸத்யமங்கல ரத்னகேட ஸ்ரீநிவாஸதீக்ஷித தனயஸ்ய காமாக்ஷி கர்பஸம்பவஸ்ய ஸ்ரீமதர்த்தநாரீச்வரதீக்ஷித குருசரண ஸஹஜதாலப்த வித்யா...... என்றவாறு தம் தகப்பனார் ரத்னகேட ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் பல பிருதங்களை பெற்றுள்ளார். இவர் அக்னிசித், விச்வசித் அதிராத்ரம் ஆகிய வேள்விகளைப் புரிந்தவர். சத்யமங்கலவாசி. தாயார் காமாக்ஷீ. தனது தமயனார் அர்த்தநாரீச்வரர் தமக்கு குரு என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார். ஆறு பாஷையில் இவர் புலமை

வாய்ந்தவர். இவரால் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தஞ்சாவூரில் அரசராயிருந்த ரகுநாதபூபரின் காலத்தில் ஆனந்த ராகவ நாடகம், கமலினீ கலஹம்சம் என்ற இரண்டு ரூபகங்கள் எழுதப்பட்டன.

கமலினீகலஹம்சம்-இது நான்கு அங்கங்களைப் பெற்றது. சிதம்பரத்தில் கோவிந்தராஜப்பெருமாளை ரகுநாதர் தரிசிக்க வந்தபோது ஆங்கே நடிக்கப்பட்டது. இஃது ஒரு நாடிகை. ராஜசூடாமணி தீக்ஷிதரின் 7வது வயதில் எழுதப்பட்டது. கமலினீ நாயிகைக்கும் கலஹம்சன் நாயகனுக்கும் நிகழும் மணத்தை இந்நூல் கூறுவதால் இதற்கு இப்பெயர் வந்தது. ராஜசூடாமணி தீக்ஷிதரின் நூல்கள் சில- 1. உபநிஷத உரைகள், 2. யஜுர்வேத உரை, 3. பிராயச்சித்த பிரதீபிகா, 4. சாஸ்த்ரதீபிகா உரை, 5. நியாயசூடாமணி, 6. ராகவகிருஷ்ண பாண்டவீயம், 7. ரத்னகேடவிஜயம், 8. பாரதசம்பூ, 9. விருத்ததாராவளி, (நக்ஷத்ரம்) 10. சங்கராசார்யதாராவளி (நக்ஷத்ரம்), 11. சங்கராப்யுதயம், 12. கம்சத்வம்சனம், 13. காந்திமதி பரிணயம், 14. சித்ரமஞ்சரி, 15. சிருங்கார ஸர்வஸ்வம், 16. ரகுநாத பூபவிஜயம், 17. சாஹித்ய சாம்ராஜ்யம், 18.அலங்கார சூடாமணி, 19.ராமசுதா.

இவர் அருணகிரிநாதரின் புதல்வர். இவரது நூல் அச்சுதராயாப்யுதயம் (No.4070). 12 சர்கங்களைப் பெற்ற செய்யுள் நடைக்காப்பியம். இதில் அச்சுதராயர் பிறந்தது முதலாக வாழ்க்கை வரலாறும், விஜயநகரமன்னன் கிருஷ்ணதேவராயருக்குப் பிறகு விஜய நகரத்தை ஆண்டான் என்பதும் குறிப்பிடப்படுகின்றது. ராஜநாதரின் மற்றொரு நூல் பாகவதசம்பூ (No.4216). இவருக்கு டிண்டிம கவி என்ற ஒரு பிருதம் உண்டு. இவர் சாளுவாப்யுதயத்தின் ஆசிரியரும் ஆவார். அதில் விஜயநகர சாம்ராஜ்யத்தை சந்த்ரகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த நிருசிம்மதேவராயரின் தைரியம், அவனது வீரதீரச்செயல் ஆகியவையும், அதற்கு பின் விஜயநகரப்பேரரசின் நிலைமையையும் எடுத்துரைக்கின்றது.

இவ்வாசிரியர் குறித்த மேலும் சில செய்திகள்

பிராம்மண வகுப்பைச் சார்ந்தவர். இவர் விஜயநகர மன்னர் அச்சுதராயரின் (1530-1542 A.D.) ஆச்ரயித்தில் இருந்தவர் எனலாம். ஆதலால் இவரது காலம் 16ம் நூற்றாண்டு ஆகும். இவரது நூல் அச்சுதராயாப்யுதயம். 12 ஸர்கங்களைக்கொண்டது. 6 சர்கங்கள் அச்சாகி உள்ளன. அதில் அச்சுதராயரின் வம்சாவளி மற்றும் திக்விஜயம் கூறப்பட்டுள்ளது.

அச்சுதராயரின் வம்சாவளி

விஜய நகரத்தை ஆண்ட மன்னர்களில் திம்மன் என்பவன் முக்கியன். திம்மன் தேவகி தம்பதிகளுக்கு ஈச்வரனும், ஈச்வரன் புக்கம்மா தம்பதிகளுக்கு நரசிம்மனும் பிறந்தனர். இவ்விருவருள் நரசிம்மன் தன்னை சக்ரவர்த்தி என நினைத்துக்கொண்டு மானவ துர்க்கக்கோட்டையைப் பிடித்து அங்கிருந்த நிஜாமனை தோற்கச்செய்து சரணம் அடைந்த அவனுக்கே மறுபடியும் அந்த கோட்டையை விட்டுக்கொடுத்து ஸ்ரீரங்கப்பட்டணத்தை ஜயித்து அங்கிருந்த மாறவர்களை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு, மதுரையின் கோனேட்டிராயனை அழித்து, இறுதியாக விஜயநகரத்தை தன்னுடைய ராஜதானியாகச் செய்து கொண்டான்.

இவனுக்கு மூன்று இராணிமார்கள் இருந்தனர். அவர்களுக்கு மூன்று குமாரர்கள் தோன்றினர். முறையே அம்மூவரும் அரசுடமையையும் பெற்றனர். அவர்களுள் கடைசி மன்னர் அச்சுதராயர் ஆவார். இவருக்கும் வரதாம்பாவிற்கும் பிறந்த சின்னவேங்கடாத்ரியை யுவராஜராக்கினார்.

இவர்களின் வம்சாவளி கீழ்க்கண்டவாறு அமைகின்றது-

திம்ம+தேவகி

↓

ஈச்வரன் + புக்கம்மா

↓

நரசன் (நரசிம்மன்)+திப்பாம்பா, நாகமாம்பா, ஓபமாம்பா

(சுமார் 1498ல்-

சிம்மாஸனம் ஏறினவன்) ↓

(1505-1509A.D.)வீரந்ருசிம்மராயர் ↓

(1509-1530A.D.)கிருஷ்ணராயர் ↓

(1530--1542A.D.)அச்சுதராயன்+வரதாம்பா ↓

சின்னவேங்கடன்

அச்சுதராயரின் திக்விஜயம்

அச்சுதராயர் ஸகல ஸாமந்த ராஜர்கள் புடைசூழ அத்தாணி மண்டபத்தில் வீற்றிருக்கும்போது ஓர்நாள் முக்கிய மந்திரி ஒருவர் எழுந்துவந்து, வாழ்த்துக்களையும் தெரிவித்து, "சோழராஜன் ஏதோ ஒரு சந்திக்கார்யத்திற்காக தன்னுடைய ராஜ்யத்தை விட்டு, நியாயமில்லாதவனாக பாண்டியராஜனின் ராஜ்யத்தைக் கைபற்றிய சேர ராஜனின் ஆச்ரயத்தைப் பெறுவதாக விண்ணப்பித்துள்ளான்" அதைக்கேட்டு அச்சுதராயன் ஒரு சுபமுகூர்த்தத்தில் படைவீரர்களுடன் புறப்பட்டு தென்திசைக்கு பிரயாணம்

செய்தவனாய் சந்த்ரகிரியையும் திருப்பதியையும் அடைந்து, அங்கு சில தினங்கள் இருந்து, ஸ்ரீநிவாஸனை சேவித்து பிறகு காளஹஸ்தி, விஷ்ணுகாஞ்சி, திருவண்ணாமலை மூலமாக திருவரங்கத்திற்கு வந்து அங்கு தன்னுடைய பாளையத்தை நிறுவி, சேரராஜனைத் தண்டிப்பதற்கு போதுமான படைகளை கொடுத்து, தன்னுடைய மைத்துனனை அனுப்பிவைத்தான். அதைப்போலவே ஸலஹ ராஜனின் குமாரன் (குவரனு) அரசகட்டளையைத் தலைமேற்கொண்டு மதுரை மூலமாக தாமிபரணிக் கரையிலிருந்து கொண்டு, சேரராஜனின் மீது படையெடுத்து போகத் தன்னுடைய படைத்தலைவரை அனுப்பினார். இதனை ஒற்றர்களின் மூலம் அறிந்த திருவாங்கோடு மன்னர் (இவனுக்கு திருவடி என்ற விருதுண்டு) விஜயநகரப் படையை எதிர்ப்பதற்குத் தயாராகி படைகளுடன் தாமிரபரணிக்கரையில் வந்து நின்றான். போர் நடந்தது. போரில் விஜயநகரப் படை வென்றது.இதையறிந்ததுடன் சேரராஜன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டான். அத்துடன் தன்வசமிருந்த சோழ ராஜனை ஸலஹராஜகுமாரனிடம் ஒப்படைத்தான். ஸலஹராஜனும் இவனைச் சரணடைந்த சோழராஜனை மன்னித்து அவனிடமிருந்து பெற்ற ராஜ்யத்தை மீண்டும் அவனிடம் கொடுத்தபிறகு, பத்மநாபனின் தரிசனத்திற்காக மலைய பர்வத மலைப்பிரதேசத்தை அடைந்தான் என்பது

கிடைத்துள்ள ஆறுசர்கத்தின் சுருக்கமாகும். வரலாற்றின் அடிப்படையில் பார்க்கும்போது இது ஒரு சிறந்த நூலாகும். இதைப்படைத்த ராஜநாதரின் நடையும் மதுரமாகவும் அதிஸரளமாகவும் அமைந்திருக்கிறது.

ராமகிருஷ்ணாத்வரி - 17

இவர் தர்மராஜாத்வரியின் புதல்வர். இவரது நூல்கள் வேதாந்தசிகாமணி (Nos. 7600-605), 2. நியாய சிகாமணி (Nos. 6228-29) ஆகும். வடமொழி வளத்திற்கு தமிழரின்பங்கு எனும் நூலில் மு. ஜகன்னாதராஜா அவர்கள்,'இவர் கும்பகோணத்திற்கருகிலுள்ள வேலங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது நூல்கள் 1. வேதாந்த பரிபாஷா, 2. தர்க்கசூடாமணி, 3. மிமாம்ஸா ந்யாயதர்ப்பணம்' என்றும் தெரிவித்துள்ளார்.

ராமச்சந்திர தீக்ஷிதர் - 78

இவர் கேரளாபரணத்தின் (Nos. 4031-4034) ஆசிரியர். இவர் ராஜசூடாமணி தீக்ஷிதரின் வம்சாவளியில் வருகின்ற பேறுபெற்றவர். மேலும் இவர் ராமச்சந்திர சம்பூ நூலின் ஆசிரியரும் ஆவார்.

ராமச்சந்திர சிரெளதிகளும் அரியசெய்திகளும்

மேலே குறிப்பிட்ட ராமச்சந்திர தீக்ஷிதரைக் காட்டிலும் ராமச்சந்திர சிரெளதிகள் வேறுபட்டவர். இந்த

ராமச்சந்திர சிரௌதிகள் திருவிசநல்லூரில் வாசம் செய்தார். இவரது புதல்வர் கிருஷ்ணஸ்வாமி சிரௌதிகள் ஸாம வேதத்தில் ஆயிரம் சாகைகள் உள்ளன. ''ஸஹஸ்ரவர்த்மா ஸாமவேதத:'' என்கிற மகாபாஷியம். இதனை ''ஸஹஸ்ர சாகோபநிஷத்'' என்றும் ஸ்ரீவைஷ்ணவர் குறிப்பர். ஸம்ஸ்க்ருத மொழியில் ஏ, ஓ என்ற எழுத்துக்களின் குறில் கிடையாது என்பர். ஆனால் சாமசாகைகள் ஆயிரங்களுள் அடங்குகின்ற ராணாயனீ, சாத்யமுக்ரி சாகைகளுள் எ,ஒ, என்ற குறில் எழுத்துக்கள் உள்ளன என்பதை மகாபாஷ்யம் தெரிவிப்பதாக வித்யாரத்னம் P.S. சுப்ரமண்ய சாஸ்திரி வடமொழி நூல் வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

வடமொழி நூல் வரலாறு எழுதிய ஆசிரியர் மற்றுமொரு சிறப்புமிக்க செய்தியைத் தருகின்றார். அதையும் இப்போது பார்ப்போம். தென்னாட்டில் நடைமுறையில் இருக்கின்ற சாமவேதம் புல்ல சூத்திரத்தினை அடியொற்றியும் அதனின்றும் சிறிது மாறுபட்டும் விளங்குகின்றது. புல்ல சூத்திரத்தினின்றும் சிறிது மாறுபட்டு விளங்குகின்ற வகையை அத்யயனம் செய்வித்தவர் ஸ்ரீராமச்சந்திர சிரௌதிகள் ஆவார். அவர் திருவிசநல்லூரில் வாசம் செய்தவர். அவரது திருக்குமாரர் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி சிரௌதிகள். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சாவூரிலிருந்து

பதினொரு கிலோமீட்டர் தொலைவிலுள்ள திருவையாறு ஸ்ரீ பஞ்சநத க்ஷேத்திரத்தில் வாழ்ந்து வந்தார். இவர் புல்லசூத்திரத்தின் அடிப்படையில் அமைந்த வகையை அத்யயனம் செய்வித்தவர் என்ற பெருமதிப்பிற்குரியவர். முற்காலத்தில் பாடசாலைகள் எல்லாம் கோயில்களில் நடைபெற்றது போல இவரும் திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீச்வரர் திருக்கோயில் தர்மாம்பிகை சந்நிதி முன் மண்டபத்தில் தனது சீடர்களுக்கு சாமவேதாத்யயனம் செய்து வைத்திருக்கலாம். ஆகையால் தர்மாம்பிகை கோயிலில் முன் மண்டபத்தூணில் ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி சிரௌதிகளின் திருவுருவம் உள்ளது. அங்கே சென்று நாம் அவரைக் கண்ணுற்று இன்புறுவோம்.

ராமச்சந்திரசேகரர் - 117

இவர் பிரதாபசிம்மரின் புதல்வரான துளஜா மன்னரால் ஆதரிக்கப்பெற்றவர். இவரது நூல் கலாநந்தகம் (No. 4337) ஆகும்.

இவ்வாசிரியர் பற்றிய பிற செய்திகளும் கலாநந்தகமும்

இவர் பௌண்டரீகம் எனப்படும் வேள்விதனைப் புரிந்தவர். பொண்டரீகம் என்பது சோதிட்டோமம் முதலிய பதிணென்யாகங்களுள் ஒன்று. ருக்வேதம் வல்லவர். காளிகா தேவியின் அருள்பெற்றவர். இவரை அழைத்துத் தன் விலாசத்தை அடிப்படையாகக் கொண்டு

நூலியற்றுமாறு பிரதாபசிம்மனின் மகன் துளஜா மன்னர் கட்டளையிட கல்பனா பூர்வகமான கலாநந்தக நாடகத்தினை (No.4337) ஸ்ரீராமசந்திரசேகரர் இயற்றினார். கலாநந்தகம் ஏழு அங்கங்களுடன் கூடியது. இந்நூலின் கதாநாயகன் இரண்டாம் துளஜா. இவரது தந்தையான பிரதாபசிம்மன் அவர்கள் ஒரு சமயம் பத்ராசலம் சென்று ஆங்கே அருள்பாலித்துவரும் ஸ்ரீராமபத்திரரைத் தொழுதார். அன்றிரவு ராமபத்ரர் பிரதாபசிம்மனின் கனவில் தோன்றி கத்தியை (நந்தகத்தை) காண்பித்தார். அதன்பின் பிறந்த தன் மகனுக்கு (இரண்டாம் துளஜாவிற்குப்) பிரதாபசிம்மன் நந்தகன் எனப் பெயரிட்டார். நந்தக மன்னரும் தில்லி ராஜகுமாரி கலாவதியும் ஒருவரையொருவர் மையலுற்று மனம் ஒன்றி மகிழ்கின்ற நிகழ்ச்சிகளையே கருப்பொருளாய்க்கொண்டு கலாநந்தகம் அல்லது கலாவதீ நந்தகம் என்னும் பெயருடன் இந்நாடகம் திகழ்கின்றது. (தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு. ஆண்டு -2004. விலை ரூ. 55)

ராமநாதமகி - 100

இவர் ஷாஜி மன்னரால் ஆதரிக்கப்பெற்றவர். இவர் நல்லாபுதரின் ஆசிரியரும், ராமபத்ரமகியின் சம காலத்தவரும் ராமபத்ரமகிக்கு இளையவரும் ஆவார். இவரது நூல் ஷட்தர்சினி சிந்தாந்தசங்கிரஹம் (No. 7631).

இவர் இனி தான் இருப்பிடமாகக் கொள்ளக்கூடிய இடம் குறித்து அண்ணாசாஸ்திரிக்கு எழுதிய கடிதம் (Vide No. 6594). இந்த எண்ணில் பின்வரும் பகுதியாக உள்ளது.

இவர் பரமசிவேந்திரர், சதாசிவ பிரம்மேந்திரர் ஆகியோரின் அருளுக்குப் பாத்திரமானார்.

ராமபத்ர மகி - 64

இவர் கௌண்டின்ய கோத்திரத்தின் வழிவந்தவர். இவர் ஷாஜி மன்னரின் அரசவையில் தலைமைப்புலவர் ஆவார். இவர் சொக்கநாத மகியின் சீடரும், மாப்பிள்ளையும் ஆவார். திருவிசநல்லூரில் கொடை பெற்ற புலவர்களுள் இவர் சிறந்தவர். இவர் உள்ளிட்ட சிஷ்யவர்கங்களை ஒருசேர அமர்த்திக்காணும் போது இவர் ஒரு நடுநாயகமாக விளங்குகின்ற பெருமையைப் பெற்றவர். இவரது தந்தை பிரசித்திபெற்ற நீலகண்ட தீக்ஷிதரின் சீடரான யக்ஞராமதீக்ஷிதர் ஆவார். இவரது நூல்கள்- **1.** ஜானகி பரிணயம் (No. 4360), **2.** ஷட்தர்சினீ ஸிந்தாந்த ஸங்க்ரஹம் (No. 7631), ***3.*** பதஞ்சலீசரிதம் (No. 3826), **4.**உணாதிமணி தீபிகா (No. 5675), ***5.*** சப்தபேத நிரூபணம் (No. 5301), ***6.*** சிருங்கார திலகம் (No. 4613), **7.** பரிபாஷாவ்ருத்தி வியாக்யா (No. 5720). மேலும் இவர் ராமபத்ரசதகத்தின் ஆசிரியரும் ஆவார்.

இவ்வாசிரியர் குறித்த மேலும் சில செய்திகள்

இவரது ஊர் கும்பகோணத்திற்கருகிலுள்ள கண்ட்ர மாணிக்கமாகும். சொக்கநாதமகியிடம் இலக்கணம் பயின்றார். இவரது உபாஸனாதெய்வம் ஸ்ரீராமராவார். ஆதலின் ராமபாணஸ்தபம், ராமசாபஸ்தபம் போன்ற நூல்களை இயற்றினார். இவருக்கு பல சீடர்கள் உண்டு. அவர்களுள் நல்லாதீக்ஷிதர் ராமபத்ர தீக்ஷிதரை, 'பன்முகம் பெற்ற ஆதிசேஷன் போல் பல சாஸ்திரங்களில் புலமை பெற்றவர். இலக்கணச் செய்திகளை எடுத்துரைப்பது இவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது. இவர் எதையும் கொடுக்கவல்ல சிந்தாமணி. இவருக்கு ஒவ்வாத கடினவாக்கியங்களை உடைப்பதில் வஜ்ராயுதம் போன்றவர். சந்திரனின் கிரணம்போன்ற வாக்திறமையால் ஸரஸமாக எதையும் எடுத்துரைக்க வல்லவர். நியாயமாகிற வாதகுணத்தால் உலகத்தையே பிரகாசிக்கச் செய்பவர். வேதவாக்கியமுறைக்கும் செய்திகளை குதிரையோட்டம் போல் விரைவாகவும், தங்குதடையின்றி உரைக்கவும் வல்லவர். வேள்விகள் குறித்த விசாரசீலர். மந்தமதிகளால் அடையமுடியாத வேதாந்தாரண்யத்தில் உலாவருகின்ற வித்வத்ஸிம்மம்' என்று வருணித்து அவருக்குள்ள ஸர்வதந்த்ர ஸ்வாதந்த்ர்யத்தை விளக்கியவாறே அவரது சீடர் என்பதையும் புனிதப்படுத்துகின்றார் போல் கூறுகின்றார்.

ராமபத்ராம்பா - 37

இவர் ரகுநாதநாயக்கரின் அரசவையில் கவிதா மணியாக விளங்கியவர். இவரது கவிதாசாமர்த்யத்தால் இவர் பல பாராட்டுக்களையும் பெற்றவர். இவர் ரகுநாத நாயக்கரின் மனைவி என்பது சிலரின் கருத்து. உண்மையில் ரகுநாதநாயக்கர் இரண்டு ராணிகளை (செஞ்சுலக்ஷ்மி மற்றும் கலாவதி) மனைவியாகப் பெற்றுள்ளார். இவரது நூல் ரகுநாதாப்யுதயம். (No. 3722). ராமபத்ராம்பா என்ற இந்த கவிதாமணியை 'ரகுநாத நாயக்கரின் காதலியாக இருந்தவர்' என மு. ஜகந்நாதராஜா தமது வடமொழி வளத்திற்கு தமிழரின் பங்கு என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

ராமானந்தயதி - 50

இவர் கிருஷ்ணாநந்தரின் சீடர். இவரது நூல் சித்தாந்த சந்திரிகை உரை (No. 7695).

ராயஸ வேங்கடாத்ரி - 28

இவர் மதுரை மன்னர் முத்துவீரப்பநாயக்கரின் அமைச்சர். முத்துவீரப்பநாயக்கர் இவருக்கு பராதீனன் என்ற விருது வழங்கியுள்ளார். இவரது நூல் ஸ்ம்ருதி கௌஸ்துபம் (Nos. 18407-36) ஆகும்.

லக்ஷ்மணகவி - 93

இவர் பவானி மற்றும் விச்வேச்வர சாஸ்திரி தம்பதியினருக்கு மகவாய்த் தோன்றியவர். இவர் காசியிலிருந்து இங்கு வந்து ஷாஜி மன்னரால் ஆதரிக்கப் பெற்றவராய் இறுதியில் தஞ்சாவூரில் தங்கிவிடுகிறார். இவரது நூல்கள் - **1.** ஷாஹராஜீயம் (No. 5304), **2.** ஷாஹ ராஜ சபாசரோவர்ணினி (No. 4235).

லோகநாதபட்டர் - 32

இவர் கவிசேகரவரதார்யரின் புதல்வர். இவரது நூல் கிருஷ்ணாப்யுதயம் (No. 4976).

வரதார்யகவி - 33

இவர் ஆத்ரேய கோத்திரத்தின் வழிவந்த அப்பயார்யரின் புதல்வர். இவரது நூல் அனங்கவிஜய பாணம் (No.4572). அப்பயார்யர் அல்லது அப்பயாசார்யர் என்பவர் தாத்தாசாரியரின் உடன் பிறந்தார் மகனான யாவரும் அறிந்த ஸ்ரீநிவாஸாசார்யர் ஆவார். விச்வ குணாதர்சசம்பூ எழுதிய வேங்கடாசார்யர் இந்த வரதார்ய கவியின் தந்தையாருடன் பிறந்தவர். வரதார்ய கவியின் பாட்டனார் வரதர் அல்லது வரதகுரு. இவர் (வரதார்யகவி) ஜானகீராகவம், காரிகாதர்ப்பணம், ஸ்ரீஸ்துதி உரை ஆகியவற்றின் ஆசிரியரும் ஆவார். ஜானகீராகவம் என்பது

வேளுக்கோடி சங்கபூபாலனின் மகன் கஸ்தூரிரங்க நரபதியின் வேண்டுகோளால் இயற்றப்பட்டது.

இவ்வாசிரியர் குறித்த பிற செய்திகள்

இவரது வாசஸ்தானம் நெல்லூர் மாவட்டத்திலுள்ள வேங்கடகிரி ஆகும்.இவரது நூல் ருக்மிணி பரிணயம் (No. 4493) ஆகும். இது ஏழு அங்கத்தில் கிருஷ்ண ருக்மிணி விவாஹத்தை உரைக்கின்றது. இவர் வேளுக்கோடி குலதிலகரான வீரசிங்கபூபாலனின் கட்டளையால் அவரது குலதெய்வமான எம்பெருமான் கோதண்டபாணியின் மகோத்ஸவத்தில் மன்னனது நண்பரும் ஆத்ரேய சூடாமணியும் தாதகுருவின் சகோதரியின் மைந்தருமான அப்பயார்யருடைய புதல்வரும் தருணாக்னி ஹோத்ரியும் ஆன வரத கவியினுடைய கிருதியே ருக்மிணீ பரிணயம் ஆகும். இவ்வாசிரியரின் அனங்க ஜீவனபாணம் துண்டீர மண்டலம் காஞ்சீ வரதராஜரின் வஸந்த உத்ஸவத்தில் நடிக்கப்பட்டது. இவர் வாஜபேயம், அக்னிசித்யம், ஸர்வஸ்தோமம், அதிராத்ரம் போன்ற வேள்விகள் செய்யப் பெற்ற குடும்பத்தில் பிறந்தவர்.

வாஞ்சேஸ்வரர் - I - 118

இவர் தஞ்சாவூர் மன்னர் பிரதாபசிம்மன் அவைப்புலவர். இவர் பிரசித்திபெற்ற கோவிந்த தீக்ஷிதரின் குடும்பவழி வந்தவர். இவரது முன்னோர்கள்

சகஜிராஜபுரத்தில் நன்கொடை பெற்றவர்கள். கனச்யாமன் இவரோடு போட்டியிடுபவர். முதலாம் வாஞ்சேச்வரனின் நூல் மஹிஷசதகம். (No.3946).

வாஞ்சேச்வரர் - II - 123

இவர் முதலாம் வாஞ்சேச்வரரின் கொள்ளுப் பெயரரும், மாதவனின் பெயரரும், நரசிம்மனின் மகனும் ஆவார். இவரது வாஸஸ்தலம் சகஜிராஜபுரம் ஆகும். இவர் இரண்டாம் சரபோஜியின் அவைப்புலவர். இவர் ஹிரண்ய கேசீய சிரௌதசூத்திரத்தை கி.பி. 1816ல் இயற்றியதாகக் கூறுகிறார். இவரது நூல்கள்- 1. மஹிஷசதக வ்யாக்யானம் (No. 3947), 2.ஹிரண்யகேசீ சிரௌதசூத்ர வ்யாக்யானம் (No. 2072).

வாசுதேவ தீக்ஷிதர் - 88

இவர் அன்னபூர்ணா மற்றும் மகாதேவ வாஜபேயயாஜி தம்பதியரின் புதல்வர். இவரது குரு விச்வேச்வர வாஜபேயி. விச்வேச்வர வாஜபேயி என்பவர் இவரது மூத்த சகோதரரும் ஆவார். இவர் சுவாமிமலையில் வசித்து வந்தார். இவர் 5 நபர்களால் ஆதரிக்கப்பெற்றவர். அந்த ஐவர் பெயர்கள் கீழ்வருமாறு- ஷாஜி, துக்கோஜி, சரபோஜி, திரயம்பகராயர் மற்றும் ஆனந்தராயர். இதனால் பஞ்சபுருஷீபோஷ்யர் என்பது

இவரது பெயருக்கு அடைவாய் முன்னால் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. இவரது நூல்கள் - 1. பிரயோகரத்னம் (No. 2620). 2. மகாக்கனி ஸர்வஸ்வம் (No. 2064). மேலும் இவர் சித்தாந்த கௌமுதியின் உரையான பாலமனோரமாவிற்கும் (No.5651) அத்வர மீமாம்ஸா குதூஹல வ்ருத்திக்கும் ஆசிரியர் ஆவார். இவர் கோவிந்த புரவாசி என்பதை P.S.சுப்ரமண்ய சாஸ்திரி இயற்றிய வடமொழி நூல் வரலாறு தெரிவிக்கிறது.

வாசுதேவ தீக்ஷிதர் - 125

இவர் தஞ்சையில் இறுதியாக ஆட்சி செலுத்திய மராத்திய மன்னர் சிவாஜியால் ஆதரிக்கப்பெற்றவர். இவர் தந்த்ரஸாரம் என்ற பிருது பெற்றவர். தலைமை அமைச்சர் பாபாஜி நாயக்கர் என்பவராலும் இவர் போஷிக்கப் பட்டார். இவர் வாமதேவ பண்டிதரின் சமகாலத்தவர். இவரது நூல் மலமாஸாகமர்ஷிணி (No. 18607).

வீழிநாதர் - 40

இவர் கனகசபாபதியின் புதல்வரும், யக்ஞ நாராயணரின் பெயரரும் ஆவார். இவர் வாழ்ந்த இடம் தஞ்சை மாவட்டத்தின் விஷ்ணுபுரம் கிராமமாகும். இவரது முன்னோர்கள் தஞ்சாவூர் நாயக்க மன்னர் அச்சுதப்பரின் காலத்தில் அரசவைக் கவிஞர்கள். ஆதலால் அவர்களுக்கு விஷ்ணுபுரம் என்னும் கிராமமே

மணிபூஷண கிராமம் என்ற பெயரில் (அச்சுதப்ப நாயக்கரால்) வழங்கப்பட்டிருக்கின்றது. இவரது நூல்கள்- *1.* மதனமஞ்சரீ நாடகம் (No.4430), *2.* அகபஞ்சஷஷ்ட்டீ (No. 18616).

வேங்கடாத்வரி - 31

வேங்கடாசார்யர் என்பவர் அப்பயரின் பெயரரும், சிலேஷயமக சக்ரவர்த்தி ரகுநாத தீக்ஷிதரின் புதல்வருமாவார். இவரது நூல் விச்வகுணாதர்ச சம்பூ (No. 4150). மேலும் இவர் உத்தரசம்பூ, பிரத்யும்னானந்தீயம், வரதாப்யுதயசம்பூ ஆகிய நூல்களின் ஆசிரியருமாவார். இவர் காஞ்சீபுரத்தின் அருகிலுள்ள அரசாணிபாலையிற் பிறந்தார். இவரது தாய் சீதாம்பா.

இவ்வாசிரியர் குறித்த பிற செய்திகள்

டில்லீச்வரோ வா ஜகதீச்வரோ வா-
மனோரதம் ஸ பூரயிதும் ஸமர்த்த: ।
அனேயேன கேநாபி ந்ருபேண தத்தம் -
சாகாய வா ஸ்யாத் ஸ்யாத் லவணாய வா ஸ்யாத் ॥

இவரது நூல்கள் -

1. மஹாபாஷ்ய ஸ்பூர்த்தி - இலக்கணம்
2. யங்லுக் பிரகாசிகா - இலக்கணம்

3. மணிசார கண்டனம் - தருக்கம்
4. வ்யுத்பத்சுபோதம் - தருக்கம்
5. நியாய மகரந்தம் - தருக்கம்
6. நியாயபத்மம் - தருக்கம்
7. விதித்ரயப்பரித்ராணம் - மீமாம்ஸா
8. மீமாம்ஸா மகரந்தம் - மீமாம்ஸா
9. யதிப்ரதிவந்தன கண்டனம்
10. இராமாயண வ்யாக்யா-வால்மீகி ஹ்ருதயம்
11. ஆசார்ய பஞ்சாசத் -
12. லக்ஷ்மீசஹஸ்ரம்
13. சிரமணாநந்தம்
14. ஸ்ரீநிவாஸ ஸஹஸ்ரம்
15. யாதவராகவீயம்
16. சுபாஷித கௌஸ்துபம்
17. ச்ருங்கார தீபிகா - நாடகம்
18. சுபத்ரா பரிணயம் - நாடகம்
19. முகுந்த விலாசம் - நாடகம்
20. யதோக்தகாரி - நாடகம்
21. ஸ்ரீசூக்தி

இங்கே கொடுத்தவற்றுள் சில நூல்கள் கிடைப்பதில்லை. அவற்றிற்கு எண்கள் மட்டும்- 1,2,3,4,10,17,19,20 என இங்கே கொடுக்கப்

பட்டுள்ளன. திருவாய்மொழியின் வடமொழிபெயர்ப்பு நூலிலிருந்து ஒரு சுலோகம் மட்டும் கிடைத்துள்ளது.

ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதகிய பானையர்।
பெருநாடுகாண இம்மையிலே பிச்சைதாம்கொள்வர் -
திருநாரணன் தான் காலம் பெறச் சிந்தித்துய்மினோ ॥
(திருவாய்மொழி 4:1)

லோகம் புஷ்களம் ஏகநாயகதயா யே சாஸிதா ந்ருபௌ-
ச்யமாங்கேன சுனாப்ரதஷ்ட்ட சரணா தே பக்னபிக்ஷாகடம்।
அஸ்மின் ஜன்மனி ஸார்வலௌகிகதயா பிக்ஷாமடந்தி ஸ்வயம்
ஸ்ரீநாராயணபாதஸேவனரதா: யோ யோ ஸமுஜ்ஜீவதாம் ॥

வேங்கடகிருஷ்ணர் - 96

இவர் ஷாஜி மன்னரால் ஆதரிக்கப்பட்டவர். இவரது நூல் சப்தபேதநிருபணம் (No.5323).

வேங்கடேச்வரர் - 106

இவர் நைத்ருவ கோத்திரத்தின் வழிவந்தவர். இவரது தந்தையார் தர்மராஜர். இவர் முதலாம் சரபோஜி மன்னரால் ஆதரிக்கப்பெற்று சாஹித்யபோஜன் என்ற பிருதையும் அவரிடமிருந்து பெற்றுள்ளார். இவரது நூல்கள்- 1. போசலவம்சாவளி (No.4232), 2.சபாபதி

விலாசம்(No.4529), 3.நீளாபரிணயம்(No.4374), 4. பிரதிக்ஞா ராகவம், 5.உன்மத்தபிரஹஸனம்(No.4379), 6.ராகவானந்தம் (No.4491). இவர் தஞ்சைமாவட்டம் மணலூரைச்சேர்ந்தவர்.

வேங்கடேசர் - 55

இவர் முத்தம்மாவின் மகனாவார். இவரதுநூல் நீலகண்ட விஜயசம்பூ உரை (No.4060).

வேங்கடேச்வரகவி - 81

இவரது நூல் பானுப்ரபந்த ப்ரஹஸனம் (No.4633). இந்நூலில் உள்ள கோலோபோன் என்னும் இறுதியடியில் சகஜி மன்னரைப் புகழ்ந்திருக்கின்றார்.

வேங்கடேச்வர தீக்ஷிதர் - 83

இவர் சமரபுங்கதீக்ஷிதரின் பெயரரும், புராணானந்தரின் புதல்வரும் ஆவார். பிரமானந்த சரஸ்வதியின் சீடரான இவரது நூல் உபாசனா பிரயோகம் ஆகும்.

வேங்கடேச்வர மகி - 39

இவர் பிரசித்தபெற்ற கோவிந்ததீக்ஷிதரின் மூன்றாவது மகன். தஞ்சை மன்னன் ரகுநாதநாயக்கரால் அர்தாஸனம் (தன் இருக்கையில் பாதியளவினை) தானமாகப் பெற்றவர். இவரது மூத்த சகோதரரும் ஆசிரியருமான பிரசித்தி பெற்ற யக்ஞநாராயண தீக்ஷிதரும் தஞ்சை ரகுநாதநாயக்கரின்

அவைப்புலவர் ஆவார். வேங்கடேச்வரர் - நீலகண்ட்ட தீக்ஷிதர், சொக்கநாதமகி மற்றும் ராஜசூடாமணி தீக்ஷிதர் களுக்கு சிறந்த ஆசிரியரும் ஆவார். இவரது நூல்கள்- **1.** போதாயன சிரௌத சூத்ர வ்யாக்யானம் (Nos. 2058-71). **2.** டுப்டீகா வார்த்திகாபரணம் (Nos. 6797-99). மேலும் இவர் சாஹித்ய சாம்ராஜ்யம், சுல்பமீமாம்ஸா, கர்மாந்த வார்த்திகம், சதுர்தண்டி பிரகாசிகை ஆகிய நூல்களின் ஆசிரியரும் ஆவார்.

வேங்கடேச்வர சாஸ்திரி - 66

இவர் ராமபத்ரரின் சீடர்களுள் முதன்மையாளரும், ராமபத்திரருக்கு மிகப் பிடித்தமானவரும் ஆவார். கௌண்டின்ய கோத்திரத்தின் வழிவந்த தக்ஷிணா மூர்த்தியின் புதல்வர். இவரது நூல்கள்- **1.** பதஞ்சலி உரை - லலிதா (No. 3827), **2.** உணாதி நிகண்டு (Nos. 4732), **3.** பதமஞ்சரி (Nos. 5010 & 5457-65).

வைத்யநாத தீக்ஷிதர் - 69

இவர் ராமபத்ரமகியின் தந்தை வழி வந்தவர். இவரும் ராமபத்ரமகியின் சீடர் எனத்தோன்றுகிறது. இவர் வாதுல கோத்திரத்தின் வழி வந்தவர். இவரது வாசஸ்தலம் கண்ட்ரமாணிக்கம். இவரது நூல்கள்- **1.** பரிபாஷா

ஸங்க்ரஹம் (No. 5722), **2.** ராமாயண உரைதீபிகை (No. 9394), *3.* ஸ்மிருதிமுக்தாபலம் (No. 18465).

சம்புபட்டர் - 46

இவர் பாலகிருஷ்ணபட்டரின் புதல்வரும் கண்டதேவரின் சீடருமாவார். இவர் சம்பூபட்டீயம் அல்லது பாட்டதீபிகை எனும் நூலை எழுதினார். பாட்டதீபிகையின் மீது கி.பி. 1706ல் பிரபாவளி (No. 6832) என்றோர் உரை எழுந்தது. மேலும் இவர் பாட்டதீபிகையின் மீதெழுந்த மீமாம்ஸா கௌஸ்துபம், பூர்வமீமாம்ஸாதிகரண ஸங்க்ஷேபம் ஆகியவற்றிற்கும் ஆசிரியராவார்.

சரபோஜி - 104

இவர் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களுள் மூன்றாவமர் ஆவார். சில சம்ஸ்க்ருத நூல் இவரால் எழுதப்பட்டது. இவரது ஆட்சிக்காலத்திலும் இலக்கிய சேவை சகோதரரின் காலத்தைப் போலவே தொடர்ந்து நடைபெற்றது. இவரது நூல் ராகவசரிதம் (No. 8723).

சரபோஜி II - 120

இவர் இரண்டாம் துளஜாவின் புதல்வர். இவர்தான் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம் வளர்ச்சியடைய

முக்கியமான நபர் மற்றும் இதற்காக காசியிலிருந்து பல நூல்களை சேகரித்துள்ளார். இவர் பல அறிஞர்களை ஆதரித்துள்ளார். இவர் தர்மசபா, நியாய சபா, முத்ரிதசபா போன்ற பல சபைகளைத் தொடங்கினார். பல பண்டிதர்கள் இந்த சபைகளில் பணிபுரிந்தனர். நாம் பழைய தீர்ப்புகளை தஞ்சாவூரிலுள்ள பல வீடுகளில் சேகரிக்கலாம். இப்படி 30 அறிஞர்கள் இருந்தார்கள். இவரது நியாயாலயத்தின் முத்திரை கீழ்க்கண்ட சுலோகத்தைப் பெற்றுள்ளது.

பார்வதீ பரமேச்வரௌ பூர்ணசந்த்ர நிபானனௌ ।
ஸர்வதர்மவிதௌ முதா ஸாதகௌ பவதாம் ஸதா ॥

கோர்ட் தீர்ப்புகளில் பண்டிதர்கள் அவர்களுடைய கையொப்பத்தை இட்டுள்ளனர். பெரும்பாலும் அவை கிரந்த எழுத்திலிருக்கும். சம்ஸ்க்ருத சுலோகங்கள் கீழ்வருமாறு-

ஸம்மதி: பிரதமாத்யக்ஷஸுப்ரமண்ய விபச்சித: ।
கோவிந்தபுர வாஸ்தவ்யானந்தராமஸுதீமதம் ॥
தஞ்ஜாநகர வாஸ்தவ்ய மகாதேவஸுதீமதம் ।
ஸம்மதிர் ஜயபத்ரேஸ்மின் அய்யாசாஸ்த்ரி ஸபாஸத: ॥
அய்யாவய்யாபிதானேன கணகேன ஸுசோபிதம் ॥

அறிஞர்கள் நிலை கோர்டில் எவ்வாறிருந்தது என்பது இதனால் அறிய முடிகிறது. இவர்தான் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகச் சேகரிப்புகளின் முக்கிய பொறுப்பாளர். இவர் பல பண்டிதர்களை வெகுதூரத் தொலைவிற்கனுப்பி பல புத்தகங்களையும் சேகரித்தார். கீழ்க்கண்ட நூல்களை இவர் எழுதவும் செய்தார். 1. குமார சம்பவ சம்பூ (No. 4030), 2. முத்ராராக்ஷஸச் சாயா (No. 4473), 3. ஸ்ம்ருதி ஸங்க்ரஹம் (No. 18483,18493), 4. ஸ்ம்ருதி ஸாரஸமுச்சயம் (No. 18499). கோர்ட் தீர்ப்பு ஜயபத்திரம் என்றும் ஸம்மதி: ஒப்புதல் என்றும் குறிப்பவை சிந்திக்கத்தக்கவை.

சிவராம மகின் - 70

இவர் வைத்யநாத தீக்ஷிதரின் புதல்வர். இவரது நூல் ஸ்ம்ருதி முக்தாபல ஸங்க்ஷேபம் (No. 18431).

சேஷாசலர் - 94

இவர் பிரசித்தி பெற்ற தெலுங்கு பிராம்மணர். ஷாஹராஜபுரவாசிகளுள் ஒருவர். இவருக்கு ஆந்த்ர பாணினி என்று பிருதம் உண்டு. இவருக்கு கனகாபிஷேகம் செய்து பல்லக்கு ஒன்றும் அளிக்கப்பட்டுள்ளது. இவர் வேங்கடபத்யமாத்யரின் புதல்வர். இவரது நூல்கள் 1.

கோசலபோசலீயம் (No. 4233), 2. ஷாஹுராஜவிலாசம் (தெலுங்கு).

இவ்வாசிரியர் குறித்த பிற செய்திகள்

இவருக்கு நிவ்ருத்தி சேஷாசலபதி என்றொரு பெயருண்டு. சரசுவதி கல்யாணம் என்பதும் இவரது தெலுங்குப்படைப்பாகும். இவர் சம்ஸ்க்ருதத்தில் ஆந்த்ரவியாகரணம் இயற்றியுள்ளார். இவரது தாயார் அக்கம்மா. இவர் பாரத்வாஜ கோத்ரத்தின் வழிவந்த நியோகி பிராம்மணர் ஆவார்.

ஸ்ரீகண்ட எனப்படும் நஞ்சுண்டர் - 79

இவர் சிதம்பர கவியின் சீடர். ஆத்ரேய கோத்திரத்தின் வழிவந்த சாமயார்யரின் புதல்வர். இவரது நூல் மதன மகோத்ஸவபாணம். இந்த ஓரங்க நாடகம் சிறுபுலியூர் விச்வேச்வரஸ்வாமி ஸந்நிதியில் நடைபெறும் கல்யாண உற்சவத்தில் அரங்கேற்றப்பட்டது. எனவே இந்நூலின் ஆசிரியரான ஸ்ரீகண்டர் எனப்படும் நஞ்சுண்டரின் சொந்த ஸ்ரீகிராமமும் இதுவே ஆகலாம். பாணம் என்ற வகை நாடகமே ஒரு குறிப்பிட்ட பகுதியின் சமுதாய நாகரிகச் செம்மை மற்றும் சீர்கேடுகள் சீர்தூக்கிப் பார்க்கும் முகமாக அமைகின்றது. ஸ்ரீகண்டரும் பரமேச்வராத்வரி, ராமஸ்வாமிமகின், சங்கமேச வித்வான்

ஆகியோரை தன்னுடைய ஆசிரியர்களாகக் குறிப்பிடுகின்றார்.

ஸ்ரீதர வேங்கடேசர் - 91

இவர் லிங்கார்யரின் புதல்வர். இவர் ஷாஹராஜபுரம் 46 பண்டிதர்களுள் ஒருவர். அய்யாவாள் என்பது இவரது பிரசித்தமான பெயராகும். இவர் சிறந்த சிவபக்தர் என நம்பப்படுவதோடு பல அற்புதங்களை இவர் நிகழ்த்தி யிருக்கின்றார். ஆதலால் அவரது பெயரிலேயே ஒருவிழா நடத்தப்படுகிறது. இப்பொழுதும் புதுநிலவு நாள் ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் மேற்குறிப்பிட்ட விழாநடக்கின்றது. இவருக்கு மூத்தவர்களும் சம காலத்தவர்களாய் சதாசிவபிரம்மமும், சிறந்த ராஜ யோகியும் அறியப்படுகின்றனர். இவரது சமகாலத்தவர் களாக நல்லா சாஸ்திரியும், வேங்கடேச்வர சாஸ்திரியும் குறிக்கப்படுகின்றனர். இவரது நூல்கள் 1. சாஹேந்திர விலாசம் (No.4230) 2.பதமணிமஞ்சரி (No. 5011).

இவ்வாசிரியர் குறித்த பிறசெய்திகள்

இவர் தன்னுடைய அற்புதசக்திமகிமையால் தண்ணீர்க்கஷ்டம் வரும்போது குளிராஷ்டகம் பாடி மழைவருவித்தார். அதைப்போலவே பிறிதொரு சமயத்தில் பற்பல குழந்தைகளை மரணப்பிடியிலிருந்து

<u>தாராவளீஸ்தோத்ரம்</u> பாடிக்காப்பாற்றினார். இன்னுமொரு அற்புதம் எனில் இவர் இறுதியில் திருவிடைமருதூர் மகாலிங்கஸ்வாமி ஸந்நிதியில் நுழைந்தவுடன் அவரது திருவடியில் ஐக்கியமாகிவிட்டார்.

ஐப்பசிமாத விழா- இவர் பெரியோரின் திவசத்திற்காக சமைத்த அன்னத்தை வறியோருக்கு அளித்துவிடுகிறார். இவர் அற்புதம் செய்யவல்ல ஆற்றல் படைத்தவர். ஆதலால் தீர்த்தமாடிதான் புனிதமடைய கங்கையைத் தோத்தரித்து தனது வீட்டிலுள்ள கிணற்றில் பெருகச்செய்தார். ஆணடுதோறும் இவ்வைபவம் திருவிசநல்லூரில் கார்த்திக (ஐப்பசி) மாதத்தில் விமரிசையாக கொண்டாடப் படுகிறதை காணமுடிகிறது.

மேலும் இவரது நூல்களாக - 1.ஆக்யா சஷ்டி, 2. தயாசதகம், 3. மாத்ருபூத சதகம், 4. ஸ்துதி பத்ததி, 5. சிவபக்தி கல்பலதிகா, 6. சிவபக்தலக்ஷணா, 7. தாராவளீ ஸ்தோத்திரம், 8. ஆர்த்திஹரஸ்துதி, 9. குளீராஷ்டகம், 10. ஜாம்பூநத ஸ்தவம், 11. தோஷ பரிஹாரஸ்தவம், 12. கிருஷ்ணதுவாதச மஞ்சரீ, 13. அச்சுதாஷ்டகம், 14. டோலா நவரத்னமாலிகா, 15. ஸ்ரீதரரின் கீர்த்தனைகள், 16. பகவன் நாமபூஷணம் போன்றவை அறியப் படுகின்றன. இவர் ஸ்ரீதர வேங்கடேசரின் புதல்வர். இவர் வசுமங்கள நாடகம் இயற்றியுள்ளார். இவர் சிறந்த

வையாகர பண்டிதராகையால் இவரை நவீனபதஞ்சலி என்றழைப்பர். இவரது தாய் வெங்கடாம்பா. இவரது கோத்திரம் கௌசிகம். இவரது காலம் 18ம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கொள்ளலாம். செய்யுள் நாடகம் இலக்கணம் ஆகியவற்றில் எழுத்தாற்றலும் இவருக்கு உண்டு. இவரது நூல்கள் ஸ்ரீராமசந்த்ர விஜயம், பாரதாப்யுதயம், சகோரசந்தேசம், வேங்கடபாணம் முதலியன.

சகோரசந்தேசம் (No. 3863) - மேகசந்தேசம் போன்ற இதில் சகோரபக்ஷீ அச்சோத ஸரோவரத்திலிருந்து புலிக்கால் முனிவரின் சாபத்தால் வட இந்தியாவின் கைலாசத்திலிருந்து பாண்டியதேசத்திலுள்ள ஹாலாஸ்ய மெனும் திருத்தலத்திற்கு வருகிறது. வரும்வழியில் கோதாவரி ஆறு மற்றும் பிராம்மண அக்ரஹாரங்களைக் கடந்து அந்தர்வேதி ந்ருசிம்மர், ஸ்ரீசைலமல்லிகார்ஜுனர் போன்றோரை வணங்கியவாறே வருகின்றதை வருணனையுடன் காவியமாக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீநிவாஸாசார்யர் - 38

இவர் ரகுநாதநாயக்கர்களின் குருவான குமார தாத்தாச்சாரியரின் புதல்வர் ஆவார். இவரது நூல்

பஞ்சகாலக்ரியாதீபம் (No. 18599). இந்நூலை சரசுவதி மகால் நூலகம் வெளியிட்டுள்ளது.

இதே பெயரில் அமைந்த இவர் இவ்வாசிரியரைக் காட்டிலும் வேறுபட்டவர். ஸ்ரீநிவாஸாசார்யர் ராமபத்ர தீக்ஷிதரின் சிஷ்யர்களுள் ஒருவர். ஸங்கிருதி கோத்ரம். இவரது பெற்றோர் அனந்தாம்பா கிருஷ்ண தம்பதியினர். ஷட்தர்சினி ஸிந்தாந்தங்களின் இணை ஆசிரியர். ஸ்வரசிந்தாந்த சந்த்ரிகை எனும் ஷாஹராஜீயகீதத்திற்கும் ஆசிரியர் ஆவார். இவரது வீட்டு எண் 40. விளக்கம் தஞ்சை சரசுவதி மகால் வெளியீடான சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும் நூலில் காண்க. (தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, ஆண்டு-2017)

ஸ்ரீவேங்கடச்வரர் - 54

இவர் ஒரு சிறந்த கவி. இவர் சகம் 1518 அல்லது கி.பி. 1595-96ஆம் ஆண்டில் காஞ்சிக்கருகில் பிறந்தார். இவர் தன்னுடைய 40 ஆவது வயதில் வாரணாசி சென்று அங்கிருந்தவாறே ராமசந்த்ரோதய காவ்யம் (No. 3731) எழுதுகிறார். சகம் ஆண்டு 1557 அல்லது கி.பி. 1634-35 ஆம் ஆண்டில் அதற்கு ஒரு உரையையும் இயற்றினார்(No.3733).

ஷாஜி - 63

இவர் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களுள் இரண்டாமவர் ஆவார். இவரது பெயர் ஷாஜி என்றமைவதற்கு ஒரு காரணமுண்டு. இவரது குடும்பத்தில் நீண்ட நாட்களாக குழந்தை இல்லாத காரணத்தால் குழந்தையுண்டாவதற்காக ஒரு நாள் மாலைவேளையில் இசுலாம் மதத்தைச் சார்ந்த பூசாரி ஒருவர் ஷா-ஷெரீப் என ஆசீர்வாதம் செய்தார். அதன் பயனாக இவரது பெயரில் ஷா என்ற சொல் ஜி என்ற ஈற்றுடன் சேர்ந்து ஷாஜி என்றாகியது. பிறகு வந்தவர் பெயரில் ஷெரிப்போ என்பதுடன் ஜி சேர்ந்து ஷெர்போஜி ஆகியது. அதுவே நாம் உச்சரிக்கும் வகையில் சாஹஜி, சரபோஜி என்று மருவியது. ஷாஹஜி, சாஹஜி, ஸஹாஜி என பலதரப்பட்ட பொருளைத் தருவதாகவும் விளங்கின. (இது இங்கே வழங்கப்பட்ட வாய்மொழிக் கதையாகலாம்). ஷாஜி பல மனிதர்களின் எழுத்துகளுக்கு ஆதரவளித்தார். அதற்கு ஆதாரமாக ஷாஹராஜபுரம் விளங்கியது. ஆங்கே கல்வியிற்சிறந்து விளங்கிய 46 பண்டிதர்கள் குடியமர்த்தப்பட்டனர். ஷாஜியும் சம்ஸ்க்ருதம், மராத்தி, தெலுங்கு மொழிகளில் புலமை பெற்றவர். பரமசிவேந்த்ர யோகீந்த்ரர், சதாசிவபிரமேந்திரர் ஆகியோரின் அருள் பெற்ற இவர் வித்வான்களால் அபிநவபோஜன் என்று கௌரவிக்கப்பட்டார். கீழ்க்காணும் நூல்கள் இவரது

கைவண்ணத்தால் மலர்ந்தவை. 1. சந்த்ரசேகர விலாசம் (No.4359), 2. சப்தரத்ன ஸமன்வயகோசம் (Nos. 5056 &57), 3.சப்தார்த்த ஸங்க்ரஹம்(Nos.5063&5064), 4.சிருங்கார மஞ்ஜரீ (No. 3965).

சாஹஜியைப் பற்றி சிறந்த கவிஞர்கள் இயற்றிய காவியங்களுள் சில.

1.	சாஹேந்திர விலாசம்	- ஸ்ரீதர அய்யாவாள்
2.	சிருங்கார மஞ்சரீ சாஹஜீயம் (அலங்காரம்)	- அப்பா சாஸ்திரி
3.	சாஹராஜீயம் (அலங்காரம்)	- லக்ஷ்மணகவி
4.	சாஹராஜஸபாஸரோவர்ணினி	- லக்ஷ்மணகவி
5.	சுமதீந்த்ர ஜெயகோஷணா	- சுமதீந்த்ரகவி
6.	சாஹராஜ நக்ஷத்ர மாலிகா	- நாராயணகவி
7.	சஹவிலாச கீதம்	- துண்டிராஜவியாசர்
8.	சாஹ வாஜாஷ்டபதி	- ஸ்ரீநிவாஸகவி
9.	கோஸல போசலீயம்	- சேஷாசலபதி
10.	தருமவிஜயசம்பூ	- நல்லாதீக்ஷிதர்
11.	போசலவம்சாவளி	- கங்காதர கவி

ஸதாசிவ தீக்ஷிதர் - 111

இவர் துளஜா மன்னரின் அவைப் புலவர்களுள் ஒருவர். இவர் சொக்கநாத மகியின் சீடரும் சப்தகௌமுதி

போன்ற சில நூல்களின் ஆசிரியருமாவார். இவர் தீவிரமான சிவபக்தர். இவரது நூல் கீதசுந்தரம் (No. 18950).

ஸதாசிவேந்திரயோகீ - 65

இவர் ராமபத்ரமகியின் சமகாலத்தவரும், சகமாணவரும் ஆவார். இவர் திருவிசநல்லூரில் பரம சிவேந்திர சரசுவதியின் சந்நிதியில் கல்வி கற்றார். இவர் மாபெரும் யோகியாகி ஸித்தியடைந்த பகுதி அல்லது ஸமாதி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் நெரூர் கிராமத்தில் அமைந்து வழிபாட்டில் உள்ளது. இவரது நூல்கள்- *1*. யோகசுதாகரம் (No. 6709), *2*. பிரம்மசூத்ர வ்ருத்தி (No. 7107), *3*. சித்தாந்தகல்பவல்லி (Printed), *4*. அத்வைத ரஸமஞ்ஜரீ (No. 7143), *5*. ஆத்மவித்யா விலாஸம் (No. 7684), *6*. மனீஷா பஞ்சக டிகா (No. 7328), *7*. பரமஹம்ஸசர்யா (No.7614), *8*. நவமணிமாலா (No. 7735), *9*. ஆத்மானுசந்தானம் (No.7746), *10*. ஸ்வப்னோதிதம் (No.7754), *11*. ஸ்வானுபூதி ப்ரகாசிகா (No.7770).

ஸமரபுங்கவ தீக்ஷிதர் - 30

இவர் வாதூல கோத்திரத்தின் வழிவந்த அனந்தம்மா வேங்கடேச தம்பதியரின் புதல்வர். வேங்கடேசர் என்பவர் பாரத்வாஜ கோத்திரத்தின் வழிவந்த திருவாலங்காடு தர்மசிவயோகியின் உடன்பிறந்தாளின் மகனாவார்.

ஸமரபுங்கவரின் நூல் யாத்ராபிரபந்தம் (பம்பாய் காவ்ய மாலா வெளியீட்டுத்தொடரில் பதிப்பிக்கப் பட்டுள்ளது) இது பல புண்ய க்ஷேத்திரங்களையும், தீரத்தங்களையும் பற்றி விளக்குகின்றதும் யாத்திரிகளுக்கு பயனுள்ளதுமாக விளங்குகின்றது. ஸமரபுங்கவரின் சகோதரரும் உடன் பணியாற்று பவருமான தர்மர் என்பவர் அப்பயதீக்ஷிதரின் சீடராவார். இந்நூலாசிரியர் சூர்யநாராயணர் என்ற மற்றொரு பெயரையும் உடையவராவார்.

ஸுந்தரி - 114

இவர் கனச்யாமனின் மனைவியாவார். இவர் வித்தசாலபஞ்சிகை உரையின் (No. 4675) இணையாசிரியர் ஆவார். **வித்தசாலபஞ்சிகா-** நாயகியைப் போன்று ஒரு சாலபஞ்சிகை செய்யப்பட அதனைக்கண்டு நாயகன் விரோதித்த காரணம் இதற்கு வித்தசாலபஞ்சிகை எனப் பெயர் வந்தது.

ஸுமதீந்த்ர தீர்த்தர் - 92

இவர் மத்வ சம்பிரதாயத்தைச் சேர்ந்த பிராம்மணர். ஸுரீந்த்ரதீர்த்தர் மற்றும் வேங்கடநாராயணரின் சீடர். இவர் ஷாஜி மன்னரால் ஆதரிக்கப்பெற்றவர். இவர் வாசமிருப்பதற்காக ஒரு மடம் திருவிடைமருதூருக்கருகில் கொடுக்கப்பட்டது. இவர் பல சுவடிகளை சேகரித்தார். அவற்றுள் சில தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில்

உள்ளன. இவரது நூல்கள்- **1.** ரஸிகரஞ்ஜனி (No. 3745). இது உஷாஹரணம் என்ற நூலிற்கு எழுதப்பட்ட உரையாகும். **2.** ஸுமதீந்த்ர ஜயகோஷணா (No. 4237).

ஸ்வயம்ப்ரகாசர் - 14

இவர் ரஸாபிவ்யஞ்சிகையின் ஆசிரியர் (Nos. 7637-41). இது அத்வைத மகரந்தத்தின் உரைநூலாகும். இவர் தன்னுடைய குருக்களுள் ஒருவராக கீர்வாணேந்திரரைக் குறிப்பிடுகிறார்.

★★★★★



Courtesy: Thanjavur City Map

Varahappaiyar Photo (Frontside)



Inscription of Varahappaiyar Photo (Backside)

[illegible]

A. Varahappaiyar Palmleaf Catalogue, B. Burnell Catalogue, C. P.P.S. Sastri Catalogue

A	B	C	Title										
115	10681	4429 नाटकम्	आवला पुरुषोत्तम नाटकम्		C 68	अपूर्णम्	ग्रन्थ:	45	"	"	/	/	शिथिलम्
116	10682	4529	सभापति विलास	"	C 54	पूर्णम्	"	135	"	"	/	/	
117	10683	4336	कमला कण्ठीरव	"	C 1794	अ	"	54	"	"	/	/	
118	10684	4430	मदन मंजरी	"	C 51	"	"	69	"	"	/	/	
119	10685	4431	"	"		पू	"	37	"	"	/	/	शिथिलम् Pal. v. r. Ram
120	10686	4383a	पार्वती परिणय:	"		"	"	26	"	"	/	/	"
"	"	4384b	"	"		"	"	26	"	"			
121	10687	4493	रुक्मिणी परिणय:			"	"	55	"	"	/	/	Pal. Mys.
122	10688	4379	लीला परिणय:		C 1794, C 783	"	"	61	"	"	/	/	
123	10689	4380	"	"		अ	"	115	"	"	/	/	"
124	10690	4432	मरकतवल्ली परिणय:		C 878	पू	"	20	"	"	/	/	C शिथिलम्
125	10691	4366	जांबवती कल्याणम्		C 56	"	"	53	"	"	/	/	"
126	10692	4367	"	"		अ	"	86	"	"	/	/	"
127	10693	4494	रेवती हल्लांक		C 65	"	"	56	"	"	/	/	"
128	10694	4673	सिद्धि साल भंजिका	नाटिका	C 466 (व्याख्यानमेव प्रतिकृतम्)	पू	"	27	"	"	/	/	[illegible]
129	10695	4674	"	"	C 1126, C 1315, C 1316	"	"	21	"	"	/	/	"
130	10696	4358	चन्द्ररेखा विद्याधर	नाटकम्	C 23, C 58	अ (35)	"	36	"	"	/	/	C 231
131	10697	4490	रत्नकेतूदय	"	C 57, P	"	"	41	"	"	/	/	Pal. [illegible]
132	10698	4486	यतिराज विजय:		C 1190	पू	"	87	"	"	/	/	
133	10699	4534	अद्भुत दर्पण	"		अ	"	50	"	"	/	/	Pal. Mys.


PROF. P.P.S. SASTRI
1895 - 1945



Image of Krishnadeva-rāya with queens (in Pratimā-maṇṭapa)

Krishnadevaraya - (1509-1529 AD)

செவ்வப்ப நாயக்கர் உருவச்சிலை - திருவண்ணாமலை இராஜகோபுரம்

Chevappa Nayakkar - (1535-1561A.D)

Veeranarasingapperumal Kovil-Vinnarbank

Achyudappa Nayakkar - (1561-1614A.D)

Sculpture of Raghunatha Nayaka

Ramaswamy Temple - Kumbakonam

Raghunatha Nayakar - (1614-1633 AD)

Vijayaraghava Nayakkar-(1633-1673A.D)
Thanjavur

Vijayaraghava Nayakkar-(1633-1673A.D)
Mannargudi

Ekoji - (1676-1683 A.D)

Shahaji - (1684-1710 A.D)

Sherfoji.I - (1711-1728 A.D)

Tulaja.1 - (1729-1735 A.D)

Bhavasahib - (1735-1736 A.D)

Pratapasimha - (1741-1764 A.D)

Tulaja.II - (1765-1787 A.D)



Amarasimha - (1788-1799 A.D)

Sherfoji.II - (1800-1832 A.D)

Shivaji (Tanjore) - (1832-1855 A.D)

Govindadikshitar
(No: 11)



Kumaratatacharya
(No: 34)

॥छन्दश्शास्त्रं॥ 1882 आगष्ट १ चित्रभानु० अधिकश्रावण व० २

श्रीगणेशाय नमः॥ वृत्तमणिकोशः॥ शेषाद्रिशरणो नित्यत
रुणो रमणः श्रियः॥ कौस्तुभाभरणो विश्वोद्धरणस्त्रा[illegible]तां हरिः॥१॥
लक्ष्मीवेङ्कटनाम्नस्तनयस्सन् श्रीनिवासाख्यः॥ विप्रो वाजसनेयी
ग्रन्थमिदं प्राह वृत्तमणिकोशं॥२॥ सानुस्वारो विसर्गान्तो दीर्घो युक्त
तेगुरुः — परश्च यः॥ पादान्तस्थोऽप्ययं वा स्यात् अन्यो लघुरिति स्मृतः॥३॥ गुरु
लघ्वोर्व्यवस्थानादष्टौ वर्णगणाः स्मृताः॥ भयौ पूर्वं जरौ मध्ये सता
वन्ते मनौ त्रिषु॥४॥ अष्टगणलघुगुरूणां विज्ञातुं नामपूर्वकं रूपं॥ सू
त्रं संग्रथयामस्तेषां नामाक्षरैर्दशभिरेव॥५॥ यमाताराजभानसलगं॥ — अथसूत्रं॥ यमाता मातारा ताराज राजभा जभान भानस नसल सलगं ल-गं
प्रागुक्तक्रमेण गणान् पृथगर्थयुक्तांश्च ग्रथ्नीमः॥ नित्य र.भ.उपेंद्रो य
श्च तु भुजः श्री वि.हा.र.श्च॥ दयतैः स.स्वच्छन्दत-आनन्दा.म.स्तु सुरविनो हि॥६॥
वृत्तांघ्रिरेकवर्णश्चेत् प्रथमश्छन्द उच्यते॥ षड्विंशच्छन्दसामेवं सं
ख्या वर्णोपकल्पिता॥ उक्तात्युक्ता तथा मध्या प्रतिष्ठान्या सुपूर्विका॥
गायत्र्युष्णिगनुष्टुप् च बृहती पङ्क्तिरेव च॥ त्रिष्टुप् च जगती चैव तथाति
जगती मता॥ शक्वरी सातिपूर्वा स्यादष्ट्यत्यष्टी तथा स्मृते॥ धृतिश्चाति
धृतिश्चैव कृतिः प्रकृतिराकृतिः॥ विकृतिः संकृतिश्चैव तथाभिकृतिरु
त्कृतिः॥ इत्युक्ताश्छन्दसां संज्ञाः छन्दोविद्भिर्महर्षिभिः॥ वयं च शासनं
अथ गणप्रस्तारक्रमः — तेषां शिरस्युत्तंसयामहे॥११॥ आद्याद्गुरोर्लघुरथो यथोपरि तथापरं॥ ऊने गुरु
अथ उद्दिष्टांकः — र्गुर्वभावे प्रस्तारः पूर्ण उच्यते॥१२॥ आद्यन्तौ द्विगुणैरङ्कैर्वर्धितैरेकमिश्रितैः॥
गण्यन्ते छन्दसां वृत्तान्युद्दिष्टन्तु लघुस्थितैः॥१३॥ विषमे परिगृह्यैकमंक — अथ नष्टांकः
स्यार्धार्धभागतः॥ समे लघुं परत्राप्यं क्षिप्त्वा नष्टं समुद्धरेत्॥१४॥ वृत्तानि भू
यो ज्ञायेरन् प्रस्तारेच्छन्दसां कृते॥ नष्टोद्दिष्टप्रकाराभ्यां तेषां व्यक्तिः पृ
थक् स्फुटा॥१५॥ संख्यापाव्यक्तरूपेषु वृत्तेष्वादौ स्थितेष्वपि॥ कविभिर्लोक
बोधाय कॢप्तान्यल्पानि नाम तः॥१६॥ अप्रमेया गुणाढ्यास्तु यथा शक्तेस्त्र योगु
णाः॥ यथादर्शैव रूपाणि[illegible]त्तरूपस्य चात्मनः॥१७॥ समं वृत्तं समैः पादैः विषमै
र्विषमं क्वचित्॥ भिन्ने द्वितीयतुर्ये क्वचिदर्धसमं स्मृतं॥१८॥ मध्यायां मुद्रतो
गणक्रमो मयरसतजभनरूपः॥ तद्देवता निगदिताः पञ्च च भूतानि सूर्यचन्द्रदिवः॥१९

॥श्रीरस्तु॥

॥ सुभानु सं० आषाढ शु० २ भार्गववासरे कुम्भघोणे
वसता त्र्यंबकपंडितेन लिखितोयं ग्रंथः॥

॥ श्रीमन्महागणपतयेनमः ॥ अथश्रीमहागणपतिविधानमुच्यते ॥ ॥ ॥ ॥ ——
॥ गणकऋषिः निचृत् गायत्रीछन्दः ॥ श्रीमहागणपतिर्देवता ॥ गम् बीजम् ।
॥ ह्रीं शक्तिः । ॐ श्रीं ह्रीं क्लीं ग्लौं गं गां हृत् । ॐ श्रीं ह्रीं क्लीं ग्लौं गं गीं शिरः ।
॥ इत्याद्यंगानि । मंन्दाराद्यैः कल्पवृक्षविशेषैर्विशिष्टतरफलदैः शिशिरितचतुराशोन्तर्वाल्लातपचन्द्रिकाकुलेचतले ॥ ऐक्षवजलनिधिलहरीकणजालकवाहिनाचगन्धवहेन ॥ संसेविते सुरतरुसुमनःश्रितमधुपपक्षचलनपरेण रत्नमये मणिवज्रप्रवाळफलपुष्पपल्लवस्यसतः ॥ महतोऽधस्तादृतुभिर्युगपत्संसेवितस्य कल्पतरोः ॥ सिंहमुखपादपीठगतंलिपिमयपद्मे त्रिषट्क कोणोल्लसिते ॥ आसीनस्त्वेकरदोबृहदुदरो दशभुजोऽरुणो गजवदनः ॥ इति — — ध्यानम् ॥ तत्रलिपिमयपद्मेत्यादीनामयमर्थः ॥ त्रिकोणमध्ये प्रणवे गं इति साध्यादियुतंलिखित्वा श्रीं ह्रीं — — — — — — स्संवेष्ट्य षट्कोणेषु बीजषट्कं तदन्तराळे ष्वंगषट्कं । अष्टदळेषुमंत्रपदाष्टकम् । तद्बहिर्वृत्तत्रये मातृकया पाशेनांकुशेनच संवेष्ट्य भूपुरद्वये आं ह्रीं इति कोणेषु दिग्विदिक्भेदेन विलिखेदिति ॥ ॥ अथास्यन्यासविधिः । प्रथमं षडध्वन्यासं कुर्यात् । तत्प्रकारस्तु द्विविधोभवति वाच्यवाचकभेदेन । तत्रापि वाच्यं त्रिविधम् कला[1] तत्व[2] भुवन[3] भेदेन, वाचकमपि त्रिविधम् वर्ण[1] पद[2] मंत्र[3] भेदेन । तत्र कलान्यासो यथा । ह्रौं नमः परायशान्त्यतीतकलात्मनेनमः । ह्रैं नमः परायशान्तिकलात्मनेनमः । ह्रूं नमः परायविद्याकलात्मनेनमः । ह्रीं नमः परायप्रतिष्ठाकलात्मनेनमः । ह्रां नमः परायनिवृत्तिकलात्मनेनमः । इति पञ्चकलामन्त्रान् शिरोभ्रूमध्यं हृद्गुह्यं पादेषु न्यस्य मूलेनव्यापयेत् । पुनः तत्वन्यासः । मं नमः परायजीवात्मनेनमः । भं नमः परायप्राणात्मनेनमः । बं नमः परायबुध्यात्मने

For Trayambakaraya (No:62-2)

१००203 मुद्रित पुस्तक पुटसं० ७६७ - ७६८ 13-9-84

॥ मुणांकुंभघोणंम् ॥

{=२ तैत्तरीयेआरण्यके १० प्रपाठके १ अनुवाकः॥ अस्मादुद्धृत्य स्वल्पं लिख्यते॥

{/ सायणाचार्य्य विरचित भाष्यसहिते = ॥

ॐ॥

(२०) सदसस्पतिमद्भुतं प्रियमिन्द्रस्य काम्यं। सनिं मेधा मयासिषं॥२०

(२१ उद्दीप्यस्व जातवेदोऽपघ्नन्निर्ऋतिं मम॥४॥ पशूꣳश्च मह्यमावह जीवनंच

दिशो दिश(२१)।(२२) मानो हिꣳसीज्जातवेदो गामश्वं पुरुषं जगत्।

पुटसं० ७६९ अबिभ्रदग्न आगहि श्रिया मा परिपातय।(२२)।(२३) पुरुषस्यविद्म

सहस्राक्षस्य ~~धीमहि~~। तन्नो रुद्रः प्रचोदयात्(२३)।(२४) तत्पुरुषाय विद्महे

महादेवस्य धीमहि।

---

७६७ तदेवं ब्रह्मविद्या प्रतिपादिता, अथ तत्प्राप्तिसाधनभूताः सोपाधिक ब्रह्मध्यान जपस्नानादिकर्माङ्गभूताः मन्त्राः कर्मकाण्डे पूर्वमनुक्ता अस्मिन् खिलकाण्डे अभिधीयन्ते ते। तत्र एकेन मन्त्रेण ब्रह्मप्राप्त्यर्थं मन्तर्यामिणं प्रार्थयते।

(२०) "सदसस्पति मद्भुतं० सनिं मेधा मयासिषम्"(२०) इति। सीदत्यस्मिन् अव्याकृते कारणे सर्वं जगत् इति 'सदः' तस्य, 'पतिं' पालक मन्तर्यामिणं, 'अयासिषं' अहं प्राप्तवान् अस्मि; शीघ्रं प्राप्तवान्, इत्यनया विवक्षया भूतार्थ निर्देशः। कीदृशं सदसस्पतिं, 'अद्भुतं' आश्चर्यरूपं, मनसाप्यचिन्त्यरचना रूपस्य जगतोऽनायासेन निर्मातृत्वं, 'इन्द्रस्य' देवराजस्य, अपि "प्रियं' सोप्यन्तर्यामिणं कदा प्राप्स्यामीत्येवमाशास्ते। अत एव सर्वैरन्यैः 'काम्यं' अपेक्षणीयं 'सनिं' कर्मफलस्यदातारं, 'मेधां' श्रुताधीतग्रन्थधारणशक्तिं, प्रयच्छन्तमितिशेषः॥ ॥

अथ वन्ह्युपाधिकं परमेश्वरं प्रति इष्टप्राप्तिं प्रार्थयते। (२१) "उद्दीप्यस्व जात=वेदोऽपघ्नं० जीवनंच दिशोदिश" (२१) इति। जाते प्राणिशरीरे जाठराग्निस्वरूपेण विद्यते अवतिष्ठते इतिजातवेदाः।

14 जयसंवत्सर ज्येष्ठ अमा भौमवार ॥

॥ स्मरणार्थ ॥ अक्षरदेवताः ॥ ~~२५ ॥ ९५~~

अं ब्रह्मणेनमः
आं पराशक्त्यैनमः
इं विष्णवेनमः
ईं मायायैनमः
उं पृथिव्यैनमः
ऊं वराहायनमः
[illegible]नमः
[illegible]नमः
[illegible] अश्विनीभ्यांनमः
एं वीरभद्रायनमः
ऐं भारत्यैनमः
ओं [illegible]यनमः
औं [illegible]करायनमः
अं रुद्रायनमः
अः कालरुद्रायनमः

कं ब्रह्मणेनमः
खं जान्हव्यैनमः
गं गणपतयेनमः
घं भैरवायनमः
ङं कालायनमः
चं भद्रकाल्यैनमः
छं भीमकाल्यैनमः
जं जातवेदसेनमः
झं अर्धनारीश्वरायनमः
ञं परमात्मनेनमः
टं पृथिव्यैनमः
ठं चंद्रायनमः
डं शक्रायनमः
ढं वैष्णवायनमः
णं बलभद्रायनमः
तं पृथिव्यैनमः
थं धनदायनमः
दं दुर्गायैनमः
धं धर्मायनमः
नं परमात्मनेनमः
पं अग्नयेनमः
फं भार्गवायनमः
बं अश्विन्यैनमः
भं भैरवायनमः।

मं ईश्वरायनमः
यं वायवेनमः
रं कृशानवेनमः
लं शक्रायनमः
वं वरुणायनमः
शं शंकरायनमः
षं द्वादशादित्येभ्योनमः
सं सरस्वत्यैनमः
हं सदाशिवायनमः
ळं पृथिव्यैनमः।
क्षं नृसिंहायनमः॥

॥ श्रीरस्तु ॥

For Trayambakarayа (No:62-4)


॥श्रीमन्महागणपतयेनमः ॥श्रीगणपतयेनमः॥
श्रीरस्तु॥ त्र्यंबकरावयांचा कोशसंग्रह॥
देवनागर ... दे.
तेलंगी ... ते.
अरवी ग्रंथ ...
अक्षरांक
१ अ पुस्तकाः स ... ते
ईशादि उपनिषदें स ... खंडे २
ऐतरेयोपनिषत् पुस्तक १
श्रीमच्छारीरक मीमांसा भाष्य ... १ ते
श्रीमद्भगवद्गीता भाष्य ... १ दे
मनुधर्मशास्त्र ... १ ते
कुलूकभट्टविरचित टीका सहित
विज्ञानेश्वरीय युक्ता याज्ञवल्क्य स्मृतिः १ ते
पराशरस्मृतिः
माधवीय ...
२ आ ऐ ...
वेणीसंहारनाटक सव्याख्यानं १ दे
अमरुक सव्या. ... २ ते
किरातार्जुनीयम् पूर्वार्धम् १ दे
सव्याख्यानं उत्तरार्द्धम् १
रघुवंशकाव्यं संपूर्ण सव्याख्यानं १

For Trayambakaraya (No:62-5)



Sri Sridhara Venkatesa Ayyaval (No:91)

T M S S M Library, Thanjavur

B. No. 897.
Ms No. D. No. 5858. Coll. No.
Sanskrit - Subject : VYAKARANA.
Title : SABDAMANJARI.
Author : NĀRĀYANA SĀSTRĪ

Narayana Sudhi (No:122)

7. Bibliography - துணைநூற்பட்டியல்

1. The Journal of the Tanjore Maharaja Serfojis Sarasvvati Mahal

2. A Descriptive Catolougue of Sanskrit Manuscripts by P.P.SSastri. T.M.S.S.M. Library, Tanjore, Year-1934.

3. வடமொழி வளத்திற்கு தமிழரின் பங்கு, ஆசிரியர். மு.கு. ஜகன்னாதராஜா, திருவல்லிக்கேணி-சென்னை, ஆண்டு-**1994.**

4. Samskruta Kavi Charithre, Vol.II, History of Sanskrit Poets written in Kannada by Late. M.N. Srinivasa Iyangar, Samskruta Kavi Charithre Prakasam, Bangalore-1998.

5. Contribution of Andra to Sanskrit Literature, by Prof. B. Ramaraju, Hyderabad, Year-2002.

6. Tanjore as a Seat Music, Dr. Seetha, University of Madras, Chennai. Year-1981.

7. The great Lifco Dictionary, English-English-Tamil.

8. வடமொழிநூல் வரலாறு, ஆசிரியர், வித்யாரத்னம், P.S.சுப்ரமண்யசாஸ்திரி, அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்-**1946.**

9. A Hand Book of Gtantha Manuscript Training, T.M.S.S.M. Library Publication, Year-2017.

10. பாவனா புருஷோத்தமம்.

Etd. by Sri. S. Swaminathasastri, T.M.S.S.M. Library, Thanjavur. Year-1979.

11.Anangavijayabhanam,
Etd. by Dr. V.M.Ananthnarayanan, T.M.S.S.M. Library, Thanjavur. Year-1986.

12. Shaddarsini Siddhanta Sangraham,

T.M.S.S.M. Library Publication, Year-1980.

13. Bojanakutuhalam,

Etd. by Mannargudi N. Raghavan, T.M.S.S.M. Library, Thanjavur. Year-2014.

14. Sahendravilasam, Etd. by Dr. V. Raghavan, T.M.S.S.M. Library, Thanjavur. Year-2016.

15. தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு,

ஆசிரியர் குடவாயில் எம்.பாலசுப்ரமணியன், சரசுவதி மகால் நூலகம்., தஞ்சாவூர். ஆண்டு - 2014.

0593